மாதம் இருமுறை

# எங்கள் தேசம்

එංගල් දේසම්
QD/28/NEWS/2013
Engal Thesam

மலர்: 12 இதழ்: 16
251
ஆகஸ்ட 15-31, 2013
விலை: ரூபா. 30.00

28 AUG 2013
மாநகரசபை யாழ்ப்பாணம்



# கிராண்ட்பாஸ்: எல்லை மீறிய அத்துமீறல்!

# பிறை விவகாரம்

## குறை யார் பக்கம்?







# எகிப்து:

## இராணுவத்தின் கொலை வெறியாட்டம் ஆரம்பம்!

Design: Kahatowita Sinan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

# கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்குதலில் ஈடுபட்டவர்களை கண்டு பிடிக்க பொலிஸார் தீவிரம்

## அமைச்சர் ரஊப் ஹக்கீம்



கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் முஸ்லிம் அமைச்சர்கள் கூட்டாக விடுத்த அறிக்கையையும் அமெரிக்க தூதரகம் விடுத்த அறிக்கையையும் தொடர்ந்து அந்த பள்ளிவாசல் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை தேடிக் கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் தீவிர கவனம் செலுத்த ஆரம்பித்திருப்பதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரஊப் ஹக்கீம் தெரிவித்தார். அதற்காக, தாக்குதலின் போது பிடிக்கப்பட்ட வீடியோ காணொளிகளை பொலிஸார் தற்பொழுது நுணுக்கமாகப் பார்வையிட்டு வருவதாக அறியக் கிடைப்பதாகவும் அவர் கூறினார்.

கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்குதல் சம்பவத்தின் பின்னணி மற்றும் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடர்பில் விளக்கம் அளிக்கும் வகையில் அண்மையில் தாருஸ்ஸலாமில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

மேல் மாகாண சபை உறுப்பினர் அர்சாத் நிஸாம்தீன், கட்சியின் தேசிய அமைப்பாளர் ஷபீக் ரஜாப்தீன், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் முஹம்மத் அனஸ் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் இந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டனர். அமைச்சர் ஹக்கீம் மேலும் கூறியதாவது;

கிராண்ட்பாஸ் சுவர்ண சைத்திய மாவத்தையில் நிறுவப்பட்டுள்ள புதிய பள்ளிவாசலில் சமய கடமைகளை மேற் கொள்வதற்காக வழங்கிய கடிதத்தை பௌத்த சாசன அமைச்சின் செயலாளர் வாபஸ் பெற்றுள்ளார். ஜனாதிபதி புதிய பள்ளிவாசலுக்கு அனுமதி வழங்கியதாக அமைச்சர் ஒருவரின் பெயரை குறிப்பிட்டு வார இறுதிப் பத்திரிகையொன்றில் முன் பக்க தலைப்புச் செய்தி வெளி வந்திருந்தது. அதை அந்த அமைச்சரின் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அந்த பத்திரிகைக்கு தெரிவித்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஜனாதிபதி, தாம் அவ்வாறு கூறவில்லை என்கிறார்.

பிரஸ்தாப அனுமதிக் கடிதத்தை பௌத்த சாசன அமைச்சின் செயலாளரிடம் இருந்து பெறுவதற்கு வேறொரு மாவட்டத்திலிருந்து வந்து கொழும்பு மத்தியில் கவனம் செலுத்தி வரும் முஸ்லிம் பிரதி அமைச்சர் ஒருவரே முயற்சி செய்ததாக கூறப்படுகிறது.

பௌத்த சாசன அமைச்சின் செயலாளர் வழங்கிய அனுமதிக் கடிதத்தின் பிரதிகள் சுற்று வட்டாரத்தில் உள்ள பௌத்த விகாரைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவை எல்லாமாகத்தான் நிலைமையை மோசமாக்கியுள்ளன.

பிரச்சினைகளை முறையாக அணுகத் தெரிய வேண்டும். தேர்தல் காலத்தில் வெறுமனே அரசியல் இலாபம் ஈட்டுவதற்காக பிரசித்தம் தேட முனைவது மிகவும் ஆபத்தானது.

சம்பவத்தைத் தொடர்ந்து நான் இரண்டு முறை பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோனுடன் கொடர்ப கொண்டு பொலிஸாரையும் விஷேட அதிரடிப் படையினரையும் அங்கு அதிகமாக அனுப்புமாறும் சுற்று வட்டாரத்தில் வசிக்கும் மக்களுக்கு உரிய பாதுகாப்பை அதிகரிக்குமாறும் வேண்டுகோள் விடுத்திருந்தேன். அவர் அதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார். அவர் கடமை உணர்ச்சியுள்ள மிகவும் நல்லவர். தன்னால் ஆனவற்றை அவர் செய்திருக்கின்றார். ஆனால், அவருடனும் தேவையற்ற விதத்தில் முரண்பட்டுக் கொள்கிறார்கள். அது ஜனாதிபதிக்கும் எட்டியிருக்கின்றது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலையில் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசியின் இல்லத்தில் சென்று அவரை சந்தித்து இது பற்றி மேற் கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடினேன். கூட்டறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கு நாங்கள் தீர்மானித்தோம். அவர் அந்த பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்.

ஜனாதிபதி முதல் நாள் இரவு தனது இல்லத்தில் வந்து சந்தித்து உரையாடியதாக அமைச்சர் பௌசி கூறினார். நான் அமைச்சர் பௌசியுடன் இருந்த பொழுது பாதுகாப்பு செயலாளர் அமைச்சர் பௌசியுடன் தொலைபேசியில் தடவைகள் தொடர்பு கொண்டார்.

பகல் 1 மணிக்கு சிரேஷ்ட அமைச்சர் பௌசியின் இல்லத்தில் முஸ்லிம் அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும், மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானாவும் மேல் மாகாண சபை உறுப்பினர்களான: நௌஸர் பௌசி, அர்ஷாத் நிஸாம்தீன், முஹம்மத் பாயிஸ் மற்றும் முன்னாள் இராஜதந்திரிகளான: ஜாவித் யூசுப், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுஹைர், முன்னாள் அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத்தின் புதல்வர் தாரிக் மஹ்மூத் ஆகியோரும் ஒன்று கூடி ஆராய்ந்த பின்னர், கைச்சாத்திடப்பட்ட கூட்டறிக்கையை ஊடகங்களுக்கு வெளியிட்டோம்.

பின்னர், பௌத்த சாசன அமைச்சில். ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் விவகாரம் தொடர்பான கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காக நாம் அங்கு புறப்பட்டுச் சென்றோம்.

பௌத்த சாசன அமைச்சின் செயலாளர், மாற்று மத அமைச்சர்கள், எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர், பௌத்த மத குருக்கள் ஆகியோரும் பங்கு பற்றிய அந்த கலந்துரையாடலின் போது காரசாரமான வாக்குவாதங்கள் ஏற்பட்டன.

(18ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருப்பதை விட அரசாங்கத்துடன் இருப்பது மேல்

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சிவகுமார்




பாறூக் சிகான்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினரான சிவகுமார், அரசாங்கத்துடன் இணைந்து செயற்படவுள்ளதாக யாழ். ஊடக அமையத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் அவர் கூறியதாவது; 2004 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவாளராகவும் கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றேன். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கிய கோட்டையாக விளங்கும் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் பிரதிநிதியாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற போதும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் எம்மை புறக்கணிப்பதோடு சாதி வேற்றுமை காட்டி வருகின்றனர்.


இதனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருப்பதை விட அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதே மேல் என்ற எண்ணத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து செயற்படவுள்ளேன். இதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் சீராளை ஆதரித்து அவருடன் இணைந்து எமது மக்களுக்கான அரசியல் வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளேன்.

இதனால் கட்சி என் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் என்று எதிர் பார்க்கின்றேன். இருந்தாலும் விரைவில் எனது பிரதேச சபை உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்யவுள்ளளேன்.

# செவ்விளநீர் ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணியை அதிகரிக்க எதிர்பார்ப்பு

இம்மாத இறுதியில் 100 மில்லியன் ரூபா அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்ளும் முகமாக ஒரு மில்லியன் செவ்விளநீர்களை ஏற்றுமதி செய்யும் இலக்கை எட்ட முடியுமென்று தென்னை ஆராய்ச்சி நிறுவனம் எதிர் பார்த்துள்ளதாக தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளே பிரதானமாக செவ்விளநீர்களை கொள்வனவு செய்கின்றன. இதேவேளை கொரியா, ஜப்பான், பிரித்தானியா ஆகிய நாடுகளிலும் செவ்விளநீர்களுக்கு சிறந்த கேள்வியுள்ளதாகவும் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.



தற்போது, சிறியளவிலான தெங்குச் செய்கையில் ஈடுபடுபவர்களிடமிருந்து செவ்விளநீர்கள் சேகரிக்கப்படுகின்றன. வர்த்தக அடிப்படையில் செவ்விளநீர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது எனவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

# கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்குதலுக்கு

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கண்டனம்



கொழும்பு கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் பௌத்த மத தீவிரவாதிகளால் தாக்கப்பட்டமைக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் துணைத் தலைவர் மாவை. சேனாதிராஜா அண்மையில் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தம்புள்ள பள்ளிவாசல் தொடக்கம் கொழும்பு கிராண்ட் பாஸ் பள்ளிவாசல் வரை இலங்கையில் 40ற்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களும் மத்ரஸாக்களும் தாக்கப்பட்டுள்ளன.

பள்ளிவாசல்கள் பலவந்தமாக மூடப்பட்டுள்ளன. முஸ்லிம் வர்த்தக நிலையங்களும் முஸ்லிம் பெண்களும் கூடத் தாக்கப்பட்டுள்ளனர். நாடு சுதந்திரமடைய முன்னரும் அதன் பின்னரும் இடம்பெற்று வந்த தமிழின அழிப்பு நடவடிக்கைகளும் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களுக்கு எதிரான ஒடுக்குமுறை நடவடிக்கைகளும் மாறி மாறி வந்த அரசுகளின் ஆட்சிக் காலங்களிலும் இடம்பெற்று வந்தன.

இன்றைய ஆட்சியில் சிங்கள பௌத்த பேரினவாத மேலாதிக்க நடவடிக்கைகள் உச்ச நிலையை அடைந்துள்ளன. இந்த நாட்டில் ஜனநாயக ஆட்சி நடக்கின்றதா என்ற கேள்வியே எழுகின்றது.

இந்த சந்தர்ப்பத்திலாவது பௌத்த சிங்கள பேரினவாத அடக்கு முறைக்கு உட்பட்டுள்ள தமிழ்-முஸ்லிம் மக்களும் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களைச் சார்ந்தோரும் தத்தம் தேசிய, இன, மத அடையாளங்களைப் பாதுகாக்க ஒன்றுபட்டு தங்கள் எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டும்.

அமைச்சுப் பதவிகள் உள்ளிட்ட அற்ப பதவி மோகங்களை விடுத்து அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் உள்ளாகி அழிவின் விளிம்பில் நிற்கும் தேசிய இனங்களைச் சார்ந்து போராட வேண்டும். இன, மத, சுத்திகரிப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும் வகையில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

எங்கள் தேசம்
சிறு விளம்பரங்கள்
தேசிய ஷூரா சபை
தேசிய ஷூரா சபையின் செய்திகளை உங்கள் கையடக்க தொலைபேசியில் இலவசமகப் பெற்றுக் கொள்ள...
F<இடை வெளி>MuslimAssembly
என Type செய்து 40404 க்கு SMS செய்யவும்
விஷேட சலுகை
செப்டெம்பர் - ஒக்டோபர் வரையில் எங்கள் தேசம் சிறு விளம்பர பகுதியில் இலவசமாக விளம்பரங்களை பிரசுரிக்க.
தொடர்புகளுக்கு:
ரீ. முஸ்தாக் 0777 396306

PUBLIC LIBRARY JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் 29 AUG 2013 யாழ்ப்பாணம்

# கிராண்ட்பாஸ் வன்முறை: 2013

## சபாஷ் கிராண்ட்பாஸ் முஸ்லிம்களே!

ஏ.ஏன்.எம். பௌமி



முஸ்லிம்களுக்கு எதிரான தமது வன்முறைகளில் உண்மையான வெற்றியை இப்போதுதான் இனவாதிகள் பெற்றுக் கொண்டுள்ளனர் என்பதற்கு கிராண்ட்பாஸ் சிறந்த உதாரணம். ஏனெனில், தலைநகரில் வைத்தே அனைத்து முஸ்லிம் தலைவர்களையும் ஒரு சேர தோற்கடித்து பொது பல சேனா வகையறாக்கள் தமது வெற்றிக்கனியை சுவைத்துள்ளார்கள்.

கிராண்ட்பாஸ் விடயத்தில் ஆரம்பம் தொட்டே புதிய பள்ளிவாசல் சம்பந்தமாக பயமுறுத்தல், குழப்பம் விளைவித்தல், சட்டப் பிரச்சினை, அரசுக்கான அழுத்தம் என முயன்று தோற்றுப் போனவர்கள் கடைசியில் பாதுகாப்புத் தரப்பின் ஆசியுடன் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த முஸ்லிம்களைத் தாக்கியதன் மூலம், பிரச்சினையை தேசிய மயமாக்கினார்கள். இதுதான் அவர்களின் கோட் பாதர்களுக்கும் தேவைப்பட்டது. மேலும், இந்தப் பிரச்சினையில் நாங்கள் இல்லை என்று பொது பல சேனா, சிங்கள ராவணா போன்ற மஹா இயக்கங்களை அறிக்கையிட வைத்தது என்பது கோட் பாதர்களின் சிறந்த ராஜதந்திரம்.

தேர்தல் காலம் என்பதால் முஸ்லிம் அமைச்சர்களும் இந்த விடயத்தில் ஒன்றுபட்டு தீர்வு ஒன்றுக்காக உண்மையாக பாடுபட்டார்கள். பிரச்சினை மிகவும் 'சென்சிடிவானது' என்பதால் அவர்கள் கத்திமுனை 'டென்சனில்' இருந்தார்கள். பிரச்சினையை இன்றே முடிக்க வேண்டும் என்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவு இன்னொரு பக்கம்.

என்றாலும் கூட முஸ்லிம் அமைச்சர்களின் வாத, நியாயங்களை விடவும் பௌத்த தேரோவாதம் முதன்மைப்படுத்தப்பட்டது. கடைசியில் இதுதான் வெல்லும் என்பது முஸ்லிம் அமைச்சர்கள் அறியாததல்ல. என்றாலும், ஒன்றே ஒன்று கண்ணே கண்ணு என பாராளுமன்றில் இருந்து கொண்டு கதிரையை தேய்க்கும் சம்பிக்க போன்றவர்களுக்கு முன் மண்டியிட்டது. பள்ளிவாசலை தாரை வார்த்தது என்பது அமைச்சர்களின் அந்தஸ்து மற்றும் வரப்பிரசாதங்கள் சார்ந்த விடயம், மன்னிக்க முடியாத குற்றம். அவசர கதியில் தலையாட்டியது என்பது சனியன் இத்தோடு முடியட்டும் என்ற ரீதயில்தான். ஏதோ முஸ்லிம்களுக்கு கொஞ்சம் ஆறுதலாக இருக்கட்டும் என இழுத்தடிப்பு உத்தியைக் கூட ஆசாமிகள் செய்யவில்லை. இதற்கிடையில் முஸ்லிம்களை அமைதி காருங்கள் என்ற உபதேசம் வேறு.

சுக போகங்களை ஓர் அளவிற்கு மேல் துறக்க நமது மந்திரி பிரதானிகள் முன் வர மாட்டார்கள். ஏதோ சாக்குப்போக்கு சொல்லி தப்பி விடுவார்கள். முஸ்லிம் சமூகத்தின் மீது முழுமையான தார்மீக பொறுப்புக்களைக் கொண்ட மு.கா. தலைவர் ஹக்கீமே ஏனோ தானோ என இருக்கும் போது பேரினவாதத்தின் நிழலிலேயே வாழ்நாளை ஓட்டிய சிரேஷ்ட மந்திரி பௌசி எம்மாத்திரம்? ஹக்கீமின்: "வெளியேறுவோம்... வெளியேறுவோம்..." கோஷம் எத்தனை போலியானது என்பது இங்கு தயவு தாட்சநியம் இன்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. மனிதர் புத்தளத்தில் நடைபெற இருந்த கூட்டத்தையும் ரத்து செய்து விட்டுத்தான் இதில் ஈடுபட்டுள்ளார். அடுத்த கூட்ட தினத்தில் எப்படி புரட்டுகிறார் என்று பார்ப்போம்.

சொல்லப் போனால் நமது பிரதிநிதிகள் இந்த காவிகளுக்கு சாஸ்டாங்கம் செய்வதை விடும் வரை நமக்கு உய்வில்லை.

[illegible] அப்போது தாதா தேரர்களுக்[illegible] பெரிய தாதா தேரரான சோம தேரரோ தலைவர் மர்ஹூம் அஷ்ரஃபுடன் தொலைக்காட்சி விவாதமொன்றில் முட்டினார். "நீங்கள் உங்கள் அமைச்சில் அதி கூடிய விலைக்கு தளபாடங்கள் வாங்கி உள்ளீர்கள்" என குற்றம் சாட்டினார். அஷ்ரஃப் அசயவில்லை. "நான் இந்த நாட்டின் அமைச்சர். என்ன தேவை என்பது எனக்குத் தெரியும். இதற்கு நான் எந்த மூன்றாம் மனிதரின் அனுமதியையும் பெற வேண்டிய அவசியமில்லை" இந்த ஆணித்தரமான பதிலால் சோம தேரர் அதிர்ந்து போனார். அஷ்ரஃபிற்கு மூளையில் மட்டும்தான் கனமிருந்தது; அதனால் அவர் பயப்படவில்லை.

உலகளாவிய ரீதியில் முஸ்லிம்கள் தோற்பது போன்ற மாயைதான் இருக்கிறதே தவிர, அவர்கள் தோற்றுப் போவதில்லை. இதற்கு சிறந்த உதாரணம் எகிப்து. உலகின் எல்லா குழப்படி காரர்களுக்கும் தலைவனான அமெரிக்காவால் இங்கு எதையும் செய்ய முடியவில்லை. ஆரம்பத்தில் கிடைக்கும் வன்முறை ரீதியான வெற்றிகளுக்கு நீண்ட ஆயுள் கிடைக்காது. ஐ.தே.க. மீண்டும் ஆட்சிக்கு வரும்போது இந்த கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீண்டும் முஸ்லிம்களுக்கு கிடைக்கக் கூடும். ஏனென்றால், கொழும்பு முஸ்லிம்களே அவர்களின் சிறந்த vote bank. இதுதான் அரசின் பார்வையும். கொழும்பு முஸ்லிகளுக்கு என்னதான் செய்தாலும் தமக்கு வாக்குப் போட மாட்டார்கள் என்பது தெரியும். சிங்கள காடயர்களை தடுப்பதன் மூலம் அவர்களின் பொன்னான வாக்குகளை இழக்கவும் அவர்களுக்கு மனமில்லை.

போனால் பள்ளிவாசல்; வந்தால் சிங்களகத்தை வாக்கு இதுதான் அரச தரப்பின் கணக்கு. வேண்டும் என்றால் அமெரிக்கா அண்ணாச்சி சொன்னற்காக ஒரு விசாரணைக் கொமிஷன் போட்டு அதனைக் கருவிலேயே கொன்றால் போயிட்டு.

(18ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ மயமாகும் இலங்கை

**"நாம் கேட்டதோ** தண்ணீர் டாங்கி: அரசாங்கம் கொடுத்ததோ யுத்த டாங்கி"

2013.08.03ஆம் திகதி பீ.பீ.சீ. யில் வெலிவேரிய பெண்மணி ஒருவர் கூறிய வார்த்தைகள் இவை. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போது பலகாரம் சுட்டு, பாற்சோறு சமைத்து, வெடிக் கொழுத்தி ஆரவாரம் செய்த சிங்கள பௌத்த மக்கள் வாழும் ஒரு பிரதேசம் வெலிவேரிய. இராணுவ வீரர்களுக்கு மலர் மாலை சூட்டி, அவர்களின் கல்லறைகளுக்கு அஞ்சலி செலுத்திய மக்கள் பொலிஸாருக்குப் பதிலாக இரா்ணுவம் வருவது குறித்து ஆரம்பத்தில் மகிழ்ச்சியடைந்தார்கள். தாம் அன்றாடம் குடிக்கும் நீர் மாசடைந்துள்ளது என்பதைக் கேட்டவுடனே அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்று நம்பினர். அவர்கள் அதிகாரப் பரவலாக்கமோ, பொலிஸ், காணி அதிகாரங்களோ கேட்கவில்லை. குடிப்பதற்கு சுத்தமான நீர் வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை அரசு பெருமனதுடன் நிறைவேற்றும் என்பதில் அவர்களுக்கு சந்தேகமே இருக்கவில்லை. தமது குடிநீரை மாசுபடுத்தும் குறிப்பிட்ட தொழிற்சாலையை உடனே மூடி விட தாம் வாக்களித்து தெரிவு செய்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று எதிர் பார்த்தனர்.



மூனா ஹானா

தமக்காக, தமது பாதுகாப்புக்காக, தமது கீர்த்தியை உலகறியச் செய்வதற்காக கப்பல் வராத துறைமுகங்களை, விமானம் இறங்காத விமான நிலையங்களை சதா நட்டத்தில் ஓடும் 'மிஹின்' களை அமைக்க பில்லியன் கணக்கில் செலவு செய்பவர்கள் அப்பாவி மக்களின் குடி நீர் விடயத்தில் இவ்வளவு புறக்கணிப்பாக நடந்து கொள்வார்கள் என்று கற்பனையிலும் நினைக்கவில்லை. யுத்த வீரங்களை கும்பிட்ட கைகளுக்கு விலங்கிடப்படும் என்றோ, தாம் ஒரு நொடியில் பயங்கரவாதிகளாக, எல்.ரீ.ரீ.ஈ. ஆதரவாளர்களாக, தமிழ் டயஸ் போராவின் ஆதரவாளர்களாக சித்தரிக்கப்படுவோம் என்று நினைக்கக் கூட இல்லை. அதுவும் ஒரு பௌத்த பிக்குவின் தலைமையில் நியாயமாக கோரிக்கையை முன்வைத்த போராட்டத்தை துப்பாக்கி ரவைகளால் அடக்குவார்கள் என்று அவர்கள் கனவிலும் எதிர் பார்க்கவில்லை.

துப்பாக்கிகளில் இருந்து குண்டுகள் பறப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்னால்: "நாங்கள் எல்.ரீ.ரீ.ஈ. காரர்கள் அல்ல" என்ற குரல் பொதுமக்கள் தரப்பிலிருந்து உரத்து ஒலிக்கப்பட்டதும் குறிப்பிட வேண்டியதே. அதற்கு இராணுவ தரப்பிலிருந்து: "அதனால்தான் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம்" என்ற பதிலும் வந்தது. ஆனால், இராணுவ முற்றுகையை பார்க்கும் போது பேச்சுவார்த்தை நடத்த வந்தது போலத் தெரியவில்லை. ஆயுதங்களை தயார் நிலையில் வைத்திருந்தனர். அவர்களது முகங்களில் கொடூரமும் கோபமும் காணப்பட்டது. 'நமக்காக நாம்' என்று கொண்டாடிய இராணுவத்தை ஏவி மக்கள் கொலை செய்யப்படுவார்கள் என்று அவர்கள் நம்பவேயில்லை. ஆனால், அவர்களது எல்லா எதிர்ப்புகளுக்கும் முன்னால் நம்பிக்கையும் பொய்ப்பித்துப் போனதை சில கணத்திலேயே அவர்கள் கண்டு கொண்டார்கள்.

மக்களைக் கட்டுப்பாட்டில் கொண்டு வர எவ்வித முயற்சியும் எடுக்காமலேயே துப்பாக்கிகள் இயக்கப்பட்டன. இரப்பர் குண்டுகளோ, தண்ணீர் பாய்ச்சலோ இன்றி நேரடியாக துப்பாக்கி ரவைகளே பாய்ந்தன. தேசப்பற்றுள்ள பிக்குவின் தலைமையில் தேசப்பற்றுள்ள மக்கள் மேற் கொண்ட தேசாபிமான ஆர்ப்பட்டத்திற்கு தேசப்பற்றுள்ள இராணுவத்தின் துப்பாக்கி குண்டுகள் பாய்வதற்கு முன்னர், வீதி விளக்குகள் உடைத்து நொறுக்கப்பட்டன. ஊடகவியலாளர்கள் துரத்தப்பட்டனர்; அவர்களது கமராக்கள், கருவிகள் பிடுங்கப்பட்டன. சிங்கள மக்கள் மட்டுமே வாழும் வெலிவேரிய சிறிது நேரத்தில் நந்திக்கடல் களப்பாக மாறியது.

உத்தியோகபூர்வமற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. வீட்டில் இருந்து வெளியேறவோ, காயங்களுக்கு மருந்து கட்டவோ, இடமளிக்கப் படவில்லை. மின்சாரம் தடை செய்யப்பட்டு வீடு வீடாக சோதனை நடத்தப்பட்டமை பிரபாகரனுடனான யுத்தத்தின் கடைசி நேரக் காட்சிகளை நினைவூட்டுவதாகவே அமைந்திருந்தது என அங்குள்ள பலரும் மீடியாக்களுக்குத் தெரிவித்தனர். பாதுகாப்பு வேண்டி மாதா கோயிலுக்குள் புகுந்தவர்களும் தாக்கப்பட்டனர்; கைகளை உயர்த்திக் கொண்டு சரணடையும் பாணியில் வந்தவர்களும் தாக்கப்பட்டனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# எங்கள் தேசம்

மலர் : 12 இதழ் : 16 ஆகஸ்ட் 15 - 31. 2013

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com


## மோசமான முன்னுதாரணம்

ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பை நோக்காகக் கொண்டே ஆயுதப்படை அமைக்கப்படுகிறது. சிவில் நிர்வாகத்தினால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது அவசர கால நிலை ஏற்படுமானால், இராணுவம் அழைக்கப்படுவது பொதுவான வழக்கம். ஆயினும் வெலிவேரிய, ரதுபஸ்ஸ சம்பவம் அவசர நிலைமையா என்ற நியாயமான கேள்வி எழுகின்றது. பொலிஸாரை அனுப்ப வேண்டிய இடத்துக்கு இராணுவத்தை அனுப்புவது ஆபத்தானது என்று கூறுவது இராணுவத்தினர் மனிதர்களல்ல என்பதற்காக அல்ல. பொலிஸார் மக்களுடன் இணைந்து கலகம் அடக்கும் துறையில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள். பொதுமக்களுடன் தொடர்புறும் கலைகளைக் கற்றவர்கள். இன்றைய பொலிஸ் அவ்வாறுதான் செயற்படுகின்றதா என்பதில் கேள்விகள் இருந்தாலும் பொலிஸாரின் பொதுவான கடமைகள் இவைதான்.

இராணுவத்துடன் இருப்பது குண்டுகள் நிரப்பிய துப்பாக்கிகள்தான். பேச்சுவார்த்தை, சமரசம், இணக்கப்பாடு என்ற எதுவும் அவர்களது அகராதியில் உள்ள வார்த்தைகள் அல்ல. அவற்றுக்கு மதிப்புக் கொடுக்கும் கலாசாரமும் அவர்களிடம் இல்லை. இராணுவம் அப்படித்தான் இருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கண்ணீர்ப் புகை, இரப்பர் குண்டுகள் என்பதெல்லாம் அவர்களிடம் கிடையாது. அவர்களுக்கு மிகக் கிட்டிய அல்லது குறைந்த ஆயுதமே துப்பாக்கிதான். வெலிவேரியவில் அவர்கள் அதனைத்தான் பாவித்தார்கள். கவச வாகனங்கள், ஸ்னைபர்கள், யுத்த டாங்கிகள் எவ்வாறு மக்களை சமாதானப்படுத்த முடியும் என்பதைத் தீர்மானம் எடுத்தவர்கள் யோசித்திருக்க வேண்டும்.

நீண்ட காலம் அவசர கால சட்டத்தில் வாழ்ந்ததாலோ என்னவோ, இலங்கையில் இப்போது அவசர கால சட்டம் அமுலில் இல்லை என்பது பலருக்கு ஞாபகம் வரவில்லை. உண்மையில், அவசர கால நிலை இல்லை எனில், பாதையோரங்களில் ஆயுதந் தாங்கி நிற்கும் இராணுவத்தினர் பங்கர்களுக்குள் முடக்கப்பட்டிருக்க வேண்டும். T56களை ஏந்திய பொலிஸ்காரர்களின் வெற்றிக்காக இணைந்திருக்க வேண்டும். பொதுமக்களை கலைப்பதற்கு இராணுவத்தை அனுப்புவது நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். இராணுவத்தை அனுப்பிய இடங்களில் என்ன நடந்தது என்பது தெரியாமலா தண்ணீர் கேட்ட மக்களை மட்டுப்படுத்த இராணுவத்தை அனுப்பினர்? உண்மையில் அரசாங்கம் தெரிந்து கொண்டே இராணுவத்தை அனுப்பியதாகத்தான் நம்பப்படுகிறது. மின் விளக்குகளை அணைத்து விட்டு, ஊடகவியலாளர்களை விரட்டி விட்டு, துப்பாக்கிகளை இயக்கியது எதற்காக? மக்களைப் பயமுறுத்தி, அடிபணிய வைக்கவே என்று சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலும் வேறு பல இடங்களிலும் துப்பாக்கியால் மக்களைப் பயமுறுத்தும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

பிரபாகரனையும் புலிப்படையையும் அடக்கிய பாணியில் தெற்கு மக்களையும் துப்பாக்கி நிழலில் வைத்திருக்கவே அரசு விரும்புகிறது. போராட்டம், வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம், கடையடைப்பு, ஊர்வலங்கள் என்று அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழாதிருக்க இந்த உத்தி கையாளப்படுவதாகவே தெரிகிறது. பல்கலைக்கழக மாணவர்கள், தொழிற் சங்கங்கள் என்று எல்லோரையும் அடக்கி வைக்கக் கூடிய ஓர் உபாயமாக 'இராணுவ துப்பாக்கி' பயன்படுத்தப்படுகின்றது.

இப்போது வெலிவேரியத் தாக்குதல் பற்றி பல சாக்குப் போக்குகள் சொன்னாலும் அதனை நம்புவதற்கு மக்கள் தயாராக இல்லை. தண்ணீர்ப் பிரச்சினையை தீர்க்க தொழிற்சாலையை மூடுங்கள் என்று கூறுவதற்குப் பதிலாக அன்று அந்த மக்களின் குரலுக்கு செவி சாய்த்திருக்கலாம்தானே. எப்படியோ மூற்றுகை ஒரு மோசமான முன்னுதாரணமாகவே கருதப்பட வேண்டும்.





## Social Media Workshop

நான்கு தசாப்த ஊடக அனுபவத்தின் புதிய பரிமாணம்

Status Photo Ask Question Milestone

Facebook, Twitter, Youtube, Linkedin, Flickr, Blogger, Livestream போன்ற நாம் அனைவரும் பயன்படுத்தும் சமூக வலைதளங்களே சமூக ஊடகங்கள் (Social Media) எனப்படுகிறது.

Post

JMF ஊடக நிறுவனம் Insight Institute உடன் இணைந்து நடத்தும்

### ஒரு நாள் சமூக ஊடக செயலமர்வு

இவ்வருடம் GCE (A/L) எழுதிய மாணவர்களுக்கு விஷேட சலுகை

முதலீடு 2100/= மாத்திரமே (மதிய உணவு, சிற்றுண்டி உள்ளடங்கலாக)

**கொழும்பில்...**

**08.09.2013** (ஞாயிற்றுக்கிழமை)

**காலை 09.00- மாலை 05.00**

(குறிப்பிட்டளவு தொகையினரே அனுமதிக்கப்படுவதால் அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.)

E-Money, E-Marketing என்பன விஷேடமாக கற்றுத் தரப்படும்

சமூக ஊடகங்கள் மூலம் உங்கள் தொழிலை முன்னேற்றலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு 0777 871758, 071 9392121

Just Media Foundation
77, Dematagoda Rd, Colombo-09
www.facebook.com/JMFSriLanka



எங்கள் தேசம் சந்தா விபரம்


உள்நாடு: தனிப்பிரதி: 30.00 வருட சந்தா: 1200.00 ஆறு மாதங்கள்: 600.00


வெளிநாடு: இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்: 3600.00 மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00 அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00 இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொடர்ந்து விலைபோகும் இனவாத அரசியல்





எம்.எச்.எம். ஹஸன்

> " தமிழ் டயஸ் போரா இலங்கைக்கு எதிரான தீவிரத் பிரசாரத்தில் இருந்த சமயத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனது உத்தியோகபூர்வ கடமைகளை இலங்கை தேசியகீதத்துடன் ஆரம்பித்தது. 1983 இன் பின்னர் தமிழ் விழா வொன்றில் விரும்பி தேசிய கீதம் பாடியது இதுவே முதற் தடவை "

**பிரபாகரனின்** தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கம் இலங்கையை கூறுபோட்டு தனி ஈழத்தை அமைக்க முழு மூச்சுடன் போராடியது என்பதை மறுப்பவர்கள் இருக்க முடியாது. மாகாண சபை, பிராந்திய சபை, பேச்சுவார்த்தை, சமஷ்ட்டி என்ற அனைத்தையும் உதறித் தள்ளி விட்டு பயங்கரவாதத்தை விதைத்து, பலாத்கார யுத்தத்தால் ஈழத்தை அமைத்து அதன் தன்னிகரற்ற தலைவனாகும் கற்பனையில் பிரபாகரன் இருந்தார். இதற்கு ஆதரவாக தமிழ்க் கட்சிகளும் அமைப்புகளும் தனி மனிதர்களும் இருந்திருக்கலாம் என்பதையும் மறுப்பதற்கு இல்லை. ஆயினும் விடுதலைப் புலிகளை முற்றாக தோற்கடித்ததன் பின், தமிழ் மக்களையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பையும் பிரபாகரனாகவே பார்ப்பது, ஒரு கவலைக்கிடமான, ஆபத்தான நிலைமையுமாகும்.

இன்றுள்ள தமிழ் 'எம்பீக்கள் பலரும் பிரபாகரனின் தயவால் தேர்தலில் நின்று வெற்றி பெற்றவர்களாக, அல்லது அவர்கள் வாரிசுகளாக இருக்கலாம். அவர்கள் எல்.ரீ.ரீ.ஈ யின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தமைக்கான காரணம், அவர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை என்பதுதான். எல்.ரீ.ரீ.ஈ யை எதிர்த்து நின்றிருந்தால் அவர்களும் அமிர்தலிங்கம், நீலன் திருச்செல்வத்தின் பட்டியலில் சேர்ந்திருப்பார்கள். பிரபாகரன் பற்றிய அதிருப்தியும் வெறுப்பும் அவர்களுக்கு இருந்தது. அண்மையில் ஒரு கூட்டத்தில் உரையாற்றிய வரலாற்றுத்துறை பேராசிரியர் சி. பத்மநாபன் அவர்கள்: இலங்கையின் இன ஒற்றுமையை, சக வாழ்வை வெடி வைத்துத் தகர்த்து சிதரடித்தது பிரபாகரன்தான் என்றார். ஆனால், இந்த மனப்பாங்கை புரிந்து கொண்டு தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் இணைந்து கொள்ள தெற்கின் தலைமை தவறி விட்டது.

தமிழ் டயஸ் போரா இலங்கைக்கு எதிரான தீவிர பிரசாரத்தில் இருந்த சமயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தனது உத்தியோகபூர்வ கடமைகளை இலங்கை தேசிய கீதத்துடன் ஆரம்பித்தது. 1983 இன் பின்னர் தமிழ் விழா வொன்றில் விரும்பி தேசிய கீதம் பாடியது இதுவே முதற் தடவை. பிரபாகரன் தேசிய கீதம் பாடுவதை தடை செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இலங்கை தமிழர்களுக்கு ஏற்படும் சிக்கல்களை கணக்கில் எடுக்காது விடுதலைப் புலிகள் செய்வதையெல்லாம் அனுமதித்தது டயஸ் போரா செய்த பெரும் தவறு என்று டீ.என்.ஏ. கூறியது. உண்மையில் ஐரோப்பாவில் இருந்து கொண்டு சகல விதத்திலும் புலிகளை வளர்க்க டயஸ்போராவே உதவி செய்தது. டயஸ் போராவை திருப்திப்படுத்தி பணம் பெறும் நோக்கத்திலும் விடுதலைப் புலிகள் இலங்கையில் பல அநியாய தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

பிரபாகரனின் கொலைக் கலாசாரத்தினால் தலைவர்கள் இல்லாத சமூகமாக தமிழ் சமூகம் மாற்றப்பட்டது. அந்த அளவுக்கு தமிழ்த் தலைவர்கள் புலிகளால் கொண்றொழிக்கப்பட்டனர். விக்னேஸ்வரன் களத்தில் இறங்க வேண்டியேற்பட்டமைக்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும். இனவாத சிந்தனையற்ற சிங்கள இனத்துடன் இசைவாக்கமடைந்த தனது மகனும் மகளும் சிங்கள இனத்தில் திருமணத்தில் இணைய அனுமதித்த, படித்த நல்ல மனிதர் ஒருவர் வட மாகாண முதலமைச்சர் வேட்பாளரானது பற்றி சிங்கள சமூகம் மகிழ்ச்சியடைய வேண்டும்; பாராட்டுத் தெரிவிக்க வேண்டும். ஆனால், அவரை அண்டன் பாலசிங்கம் என்று இனவாத லேபல் ஒட்டவே சில சிங்கள இனவாதிகள் முயன்றனர். இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் அவருக்கு தனி இடமுண்டு. அவருடைய பிரியாவிடை உரையில் நீதித்துறையினர் குறைபாடுகள் பற்றி மிக விரிவான ஒரு விளக்கத்தை தந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தை வெற்றி கொண்ட அரசாங்கம் தமிழ் மக்களை வெற்றி கொள்ள அன்று தவறினாலும் இன்று விக்னேஸ்வரன் மூலம் கிடைத்துள்ள வாய்ப்பையும் புறக்கணிப்பதில் இருந்து தெரிய வருவது, இனவாதத்தை வளர்த்து அதனை மிக சிறப்பாக சந்தைப்படுத்தியே இந்த நாட்டின் ஆளும் கலையை அவர்கள் மாற்றப் போவதில்லை என்பதே. இனவாதத்திலிருந்து மக்களை மீள விடாமல் இருப்பதற்காகவே தமிழர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என்று அனைத்து சிறுபான்மையினரின் மீதும் அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையிலும் பொது பல சேனா, சிங்கள ராவய, ராவணா பலகா காயண என்பன மிக பாதுகாப்பாக அடாவடித்தனங்களில் ஈடுபட மௌன அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர்.

கிராண்ட்பாஸில் பள்ளியை உடைத்தவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்காமல் இருப்பதில் இருந்து தெரிய வருவதும் அதுவே. அனுமதி பெறாமல் பள்ளிவாசல் கட்டியிருப்பின் அதற்கு எதிராக செயற்பட பொலிஸ், நீதிமன்றம், சட்டம் இருக்கும் போது காவியுடை தாரிகள் ஏன் தடியெடுக்க வேண்டும்?

### குறு நில மன்னர்கள்

அரச வம்சங்கள் ஆட்சி செய்த காலங்களில் பிரதேச ரீதியான குறு நில மன்னர்கள் காணப்பட்டனர். பேரரசர்களுக்கு காணிக்கை செய்து விட்டு தமது அதிகார எல்லையில் எதையும் செய்யும் அதிகாரம் அவர்களுக்கு இருந்தது. மக்களாட்சி மலர்ந்த பின் இந்த நிலைமை மாறியது. ஆனால், இலங்கை போன்ற நாடுகளில் இப்போது நடைபெற்று வரும் நிகழ்வுகளைப் பார்க்கும் போது முடியாட்சிக்கு எந்த வகையிலும் குறைவில்லாத விதத்தில் பிரதேச பாதாள மன்னர்களின் கொட்டம் கொடிகட்டிப் பறக்கிறது. அண்மையில் தரணியகல தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள நூரித் தோட்டத்தின் சுப்ரிண்டனின் கொலையுடன் வெளியான தகவல்கள் நாம் வாழுவது மக்களாட்சி முறையுள்ள நாட்டில்தானா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாதாள கோஷ்டியின் அடாவடித்தனங்களால் நட்டத்தில் இயங்கிய நூரித் தோட்ட நிர்வாகத்தை சீர்படுத்த வந்த நிஹால் பெரேரா கடந்த பெப்ரவரியில் சுப்ரீண்டனாக நியமிக்கப்படுகிறார். 800 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தில் மாதாந்த கொழுந்து அறுவடை 5000 கிலோவுக்கும் குறைந்த நிலையில் அவர் பொறுப்பேற்கிறார். ஆங்கிலேயர் காலம் முதல் இந்திய வம்சாவழித் தமிழர்களே பெரும்பாலும் இத்தோட்டங்களில் வேலை செய்து வருகின்றனர். அதற்கிடையில் ஒரு சிங்களக் குடும்பமும் இருந்தது. தமிழ்க் குடும்பங்களுடன் திருமண உறவில் கலந்த இக்குடும்பத்தின் பிரதான தொழில் கசிப்பு எனப்படும் கள்ளச் சாராயம் வடிப்பதேயாகும். தோட்ட வளாகத்தில் காணப்பட்ட வியாபார நிலையங்களும் அவர்களின் உடமையே. அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களின் மாதாந்த ஊழியத்தின் பெரும் பகுதியை தமதாக்கும் வகையில் தந்திரமாக அமைந்திருந்தது அவர்களது பொருளாதார நடவடிக்கை.

புதிதாக வந்த நிஹால் பெரேரா கசிப்பு வியாபாரத்தை மடக்கி தோட்டத்தில் இருந்து களவாக கொழுந்து வெளியேறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தார். ஏலவே பிரதேச சபையின் தலைவராக இருந்த அத்கொட்டா (கை சொத்தி) என அழைக்கப்பட்ட அனில் சம்பிக்க விஜேசிங்கவும் அவரது பரிவாரமும் மாகாண சபை முதலமைச்சர், பாராளுமன்ற அங்கத்தவர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரையும் தமது பண பலத்தால் கையகப்படுத்தி நிஹால் பெரேராவுக்கு தொல்லை கொடுக்கத் தொடங்கினார். கொலை, கொள்ளை, கற்பழிப்பு கடத்தல், கசிப்பு மரம் வெட்டுதல் என்ற அனைத்து நடவடிக்கைகளும் மிக சாதாரணமாக நடைபெற்றன. பொலிஸில் புகார் ஏற்கப்படுவதில்லை; ஏற்றாலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. சில போது புகார் செய்யப்போனவர் குற்றவாளிக் கூண்டில் அடைக்கப்பட்டார். 17 கொலைகள், எண்ணற்ற கொள்ளைகள், கற்பழிப்புகள் என்று ஓர் அராஜகமே நடந்த போதும் இந்த ஜனநாயக (பண நாயக) நாட்டில் அதனைத் தட்டிக் கேட்கவோ விசாரிக்கவோ ஆள் இருக்கவில்லை. இதனால் பாதாள இராச்சியம் கொடிகட்டிப் பறந்தது.

நூரித் தோட்டத்தின் ஏழைத் தொழிலாளியான செல்லம்மா இது பற்றிக் கூறும் போது: முதலில் எனது மகன் கணேசை இவர்கள் கொலை செய்தார்கள். சொத்தி சமில வீட்டுக்கு வந்து முதல் நாள் அவனை அழைத்துச் சென்றார். அடுத்த நாள் எனது மகன் அநாதைப் பிணமாக பாதையில் வீசப்பட்டிருந்தான். பொலிஸ் நிலையத்துக்குப் போனால் எதுவும் நடக்கவில்லை. அடுத்தது எனது மற்ற மகன் மண்ணுவையும் கொலை செய்தனர். இது பற்றி கேள்வி கேட்ட எனது இளைய மகன் சந்திரனையும் கொன்று போட்டனர். எனது மகள் பகவதி, சாமிநாதன் சத்திய வேலு என்பவருடன் வாழ்ந்து வந்தாள். கள்ளச் சாராயம் கொடுத்து சாமிநாதனைக் கொன்று விட்டு எனது மகளுக்கு சுண்ணாடித் தூளை உணவுடன் கலந்து கொடுத்து சாகடிக்க முயன்று முடியாது போகவே உலக்கையால் அடி வயிற்றில் தாக்கி கொலை செய்தனர். அவளின் மகள் எனது பேத்தி 13 வயதாவதற்கிடையில் இந்த கும்பலுக்கு இரையானாள். இது எனது கதை மட்டுமல்ல, இந்த தோட்டத்திலுள்ள எல்லோரது கதையும் இப்படித்தான் என்று அவர் குறிப்பிட்டது நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவத்தையல்ல கடந்த ஜூலை வரை அரங்கேறிய நாடகத்தின் சாட்சிகள்தான் இவை.

கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான மித்ரபால இது பற்றி கூறுகையில்: சமில விஜேசிங்கவிடம் இருக்கும் கைத்துப்பாக்கி பற்றி நான் பொலிஸில் பல முறை புகார் செய்தேன். ஆனால், கடைசி வரை அது அவரிடமேதான் இருந்தது. தோட்டத்திலுள்ள பெறுமதியான மரங்களை எல்லாம் வெட்டி விற்று விட்டு பக்கத்துத் தோட்டங்களில் உள்ள மரங்களையும் பலாத்காரமாக வெட்டி விற்றார். எங்கும் புகார் செய்ய முடியாத நிலையில் மக்கள் கண்ணீரும் கம்பளையுமாக உயிர் வாழ்ந்த நிலையில், அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவரின் உறவினரான நிஹால் பெரேரா கொலை செய்யப்பட்டமையால் நூரி மக்களுக்கு தற்காலிக விடிவு கிடைத்துள்ள போதும், மேலிடங்களில் உள்ள செல்வாக்கினால் மீண்டும் வந்து அட்டகாசம் புரிவார் என்று மக்கள் தொடர்ந்தும் பீதியிலேயே உள்ளனர்.

இந்த நாட்டில் ஒரு குற்றவாளி கைது செய்யப்படுவதும் பாதிக்கப்பட்டவர் அரசாங்கத்தின் செல்வாக்குப் பெற்ற ஒருவராக இருந்தால்தான் நீதி கிடைக்கும் என்பதைக் காட்டும் ஒரே சம்பவம் இதுவல்ல. வர்த்தகர் சியாம் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட வாஸ் குணவர்தனவின் கதையும் இதுதான். பல நூறு கொலை செய்தாலும் மேலிடத்தில் ஆதரவு இருக்கு மட்டும் பிரச்சினையில்லை என்பது இந்த நாட்டின் தலைவிதியாக மாறியுள்ளது. இதனை மாற்ற மக்களால் முடியும். ஆனால், பெரும்பான்மை மக்களோ இனவாதம் என்ற போதனைக் குட்பட்டு எது நடந்தாலும் யுத்தத்தில் வெற்றி பெற்ற இவர்களே எமது இரட்சகர்கள் என்று நினைக்கும் நிலை தோற்று விக்கப்பட்டிருப்பது பரிதாபகரமானதே. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கியுடனான தொடர்புகள் இலங்கை மக்களுக்கு உந்துசக்தியாகும்

## அமைச்சர் பஷீர் சேகுதாவூத்



இலங்கையை பூமியின் சுவர்க்கமாக்கும் உந்து சக்தியாகவே இலங்கையுடனான துருக்கியின் எல்லாத் தொடர்புகளையும் நோக்குகிறோம். அபிவிருத்தி அடைந்து வரும் எமது இரு நாடுகளுக்கும் இடையில் கடந்த பல வருடங்களாக சிறந்த வர்த்தக மற்றும் கலாசார தொடர்புகள் நிலவிவருகின்றன. அண்மையில் இலங்கையில் தாபிக்கப்பட்ட துருக்கி தூதரகம், இரு நாடுகளுக்கும் இடையிலான பலமானதும் மனப்பூர்வமானதுமான பிணைப்புகளை பகிர்ந்து கொள்வதற்கு சான்றாக அமைந்திருக்கிறது என அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

இலங்கை-துருக்கி பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை அண்மையில் பாராளுமன்றத்தில் அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நடைபெற்ற வேளையில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கைக்கான துருக்கி தூதுவர் இஸ்கெந்தா கே. ஒக்யாய் மற்றும் தமிழ், முஸ்லிம், சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சங்கத்தின் தலைவராக அமைச்சர் பஷீர் சேகுதாவூத் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். சங்கத்தின் போசகர்களாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பிரதம மந்திரி டி.எம். ஜயரத்ன, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, துருக்கி தூதுவர் இஸ்கெந்தா கே.ஒக்யாய் ஆகியோரும் பிரதித் தலைவர்களாக அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, திருமதி சந்திராணி பண்டார ஜெயசிங்க, ஏ.எச்.எம். அஸ்வர் ஆகியோரும் செயலாளராக ஜோன் அமரதுங்கவும் பிரதிச் செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டாராவும் பொருளாளராக ஜகத் புஸ்ப குமாரவும் தெரிவாகினர்.

அமைச்சர் பஷீர் சேகுதாவூத் மேலும் பேசுகையில்:

ஒரு குடியரசாக 1923 இல் துருக்கி பிரகடனப்படுத்தப்பட்டதிலிருந்து பல்வேறு மாற்றங்களுக்கு அதன் பொருளாதாரம் உட்பட்டதால் அது அந்த நாட்டை வெற்றிகரமான நாடாக்கியுள்ளது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது நடு நிலையைப் பேணியதன் மூலம் துருக்கிய மக்கள் சமாதானத்தின் பிரியர்கள் என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

எந்த நாட்டினதும் ஒருமைப்பாட்டிற்கும் இறைமைக்கும் மதிப்பளித்து சர்வதேச உறவுகளை ஏற்படுத்தி வரும் மிதப் போக்கு கொண்ட துருக்கியின் நிலைப்பாட்டினால் இலங்கையர்களாகிய நாம் உயர்ந்த மனப் பதிவுகளை அடைந்திருக்கிறோம்.

மத்திய ஆசிய குடியரசுகள், ரஷ்யா, காக்கசஸ் மலைப் பிராந்திய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகளின் சந்தைகளுக்கு இலங்கைத் தேயிலையை ஏற்றுமதி செய்வதில் ஒரு மத்திய ஸ்தானமாக துருக்கி முக்கிய பாத்திரம் வகிப்பதற்கு அந்நாட்டின் சுதந்திர வர்த்தக வலயங்களுக்கு நன்றி கூற வேண்டும்.

துருக்கியின் காசியான் டொப் நகரத்தை இலங்கையின் இரத்தினபுரி மாவட்டத்துடன் பிணைப்பை ஏற்படுத்திய இரட்டை நகர் வேலைத் திட்டமானது, துருக்கியினது பாரிய கலாசார, கட்டிடக் கலை அனுபவங்களை இலங்கையர்களுக்கு பகிர்ந்து கொள்ள இடமளிக்கிறது. தலைவர் என்ற வகையில் இரு நாடுகளுக்கும் இடையில் நீண்ட உறவு பிணைப்புப் பெறுமானங்களுக்கு எனது பங்களிப்பை வழங்கி, பரஸ்பர நன்மைகளை அளிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட மனப்பூர்வமான எண்ணங் கொண்டிருக்கிறேன்.

பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்ததாவது;

கடந்த சில வருடங்களாக இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையிலான நட்புறவினால் இரு தரப்பு உறவுகள் அபிவிருத்தி அடைந்து உலக பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகிறது. 2002 ஆம் ஆண்டில் துருக்கியுடன் செய்து கொள்ளப்பட்ட பொருளாதார மற்றும் தொழிநுட்ப ஒப்பந்தம் மேலும் பலப்பட்டு இரு நாட்டு ஒத்துழைப்பிற்கு பங்களிப்பு வழங்கிக் கொண்டிருக்கின்றது. 2012 இல் அங்காராவில் இலங்கை தூதரகமும் 2013 இல் இலங்கையில் துருக்கித் தூதரகமும் திறக்கப்பட்டதையடுத்து எதிர் காலத்தில் அதி உயர் மட்டத்தவர்களின் வருகைகளும் விஜயங்களும் அடிக்கடி நிகழும் என எதிர் பார்க்கின்றோம்.

துருக்கிக்கான நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து இரு நாட்டு மக்களும் ஒருவருக்கொருவர் நேரடியாக சந்தித்து உறவாடுவது சாத்தியமாகியியுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துருக்கி செஞ்சிலுவை சங்கம், மிதிகமவில் துருக்கி கிராமம் ஒன்றை நிர்மாணித்துக் கொடுத்திருக்கின்றது. பயங்கரவாதத்தை ஒழிப்பது தொடர்பாக துருக்கி ஐக்கிய நாடுகள் சபைக்கு சமர்ப்பித்துள்ள தீர்வு வரைபுக்கு இலங்கை அந்நாட்டிற்கு பேராதரவு வழங்குகிறது.

# இன்போஃடெல் 2013 இல் இக்டா தேசிய பங்காளி




இன்போஃடெல் 2013 தலைவர் சிந்தக விஜேவிக்ரம இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி ரொஷான் தேவபுரவிடமிருந்து இன்போஃடெல் 2013 இன் தேசிய பங்காளருக்கான சின்னத்தை பெற்றுக் கொள்கிறார்.

'இன்போஃடெல்-2013' தேசிய தகவல் தொழிநுட்ப கண்காட்சியின் பங்காளியாக இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையம் (இக்டா) பங்கு கொள்ள உள்ளது.

இலங்கைத் தகவல் தொழிநுட்ப கைத்தொழில் சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்படும் இந்நிகழ்வு ஒக்டோபர் 24-27ஆம் திகதி இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இம்முறை 'வாழ்க்கையை மேம்படுத்துதல்' என்னும் கருப் பொருளில் நடைபெறவுள்ள இன்போஃடெல் கண்காட்சியில் 250 கும் அதிகமான கண்காட்சிக் கூடங்கள் அமையவுள்ளன. இக்கண்காட்சிக்கு 100,000 கும் அதிக தேசிய மற்றும் வெளிநாட்டு பார்வையாளர்கள் கலந்து கொள்வார்களென எதிர் பார்க்கப்படுகிறது.

தென் கிழக்காசியாவின் முதல் ரக மற்றும் இலங்கையின் மிகப் பாரிய கண்காட்சியாகிய இன்போஃடெலில் கணினி வன் பொருள், மென் பொருள் மற்றும் சேவைகள் அப்ளிகேஷன்கள் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன. அத்துடன் விளிம்புக் கணுவிலிருந்து மேகம் வரையிலான (from edge nodes to the cloud) புத்தாக்கல் செயற்பாடுகளை உருவாக்கும் மற்றும் துரிதப்படுத்தும் விடயங்களும் சிறப்பு அறிவாற்றல்களும் இக்கண்காட்சியில் காண்பிக்கப்படும்.

இக்கண்காட்சியில் சுகாதாரம், போக்குவரத்து, சுற்றுலா, கமத்தொழில் மற்றும் தொடர்பாடல் பற்றி விசேட அவதானம் செலுத்தப்படவுள்ளது. இக்கண்காட்சியைப் பற்றி கருத்துத் தெரிவித்த இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி ரொஷான் தேவபுர: இக்கண்காட்சியில் பங்குபற்றுபவர்களுக்கு சந்தையிலுள்ள தேவை பற்றிய தகவல் மற்றும் அறிவு, புதிய வர்த்தக வாய்ப்புகள், கைத்தொழிலிலுள்ள சவால்கள் மற்றும் அவற்றை வெல்லும் முறைகள் பற்றிய அனுபவ ரீதியிலான அறிவுரைகளை பரிமாறிக் கொள்ள அரிய வசதி ஏற்படுவதில் ஐயமில்லை. இம்முறை இன்போஃடெல் ஒரு முன்னேற்ற படியை எடுத்துள்ளது. அதன்படி தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பிரயோகங்கள் இலக்க முறை உள்ளடக்கங்கள் மற்றும் இலக்கு குழுக்களுக்கு வழங்கும் பங்களிப்பு பற்றி சிறப்பான கவனம் செலுத்தப்பட்டுள்ளது பாராட்ட வேண்டியது என்றார்.

அதேபோல் இக்கண்காட்சியின் சிறப்பியல்புகள் பற்றி கருத்து தெரிவித்த இன்போஃடெல் 2013 தலைவர் சிந்தக விஜேவிக்ரம: இம்முறை இன்போஃடெல் வர்த்தகங்களின் உற்பத்திப் பொருட்கள் மற்றும் அவற்றின் புத்தாக்கல் தீர்வுகளின் பால் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் வர்த்தகத்திலிருந்து வர்த்தகம் மற்றும் வர்த்தகத்திலிருந்து நுகர்வோர் சந்தைகள் பேரில் விசேட கவனம் செலுத்தப்படும் என்றார்.

# பட்டமளிப்பு விழா





ஏ.எஸ்.எம். ஜாவித்

வாழைத் தோட்டம் அல்மஸ்ஜிதுன் நஜ்மிய்யா குர்ஆன் மத்ரஸாவில் குர்ஆன் மனனம் செய்த ஒன்பது மாணவர்களுக்கு அண்மையில் அல்மஸ்ஜிதுன் நஜ்மிய்யா பள்ளிவாசலில் ஹாபிழ் பட்டமளிப்பு விழா இடம்பெற்றது.

பள்ளிவாசலின் தலைவர் என்.எஸ்.எம். உவைஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு எகிப்து நாட்டைச் சேர்ந்த அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் முஹம்மத் மஃமூத் மற்றும் அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் அப்துல் மஜீத் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மத்ரஸாவின் அதிபர் அல்ஹாபிழ் அப்துர் ரஹ்மானிடம் கற்ற ஹாபிழ்மார்கள் எகிப்து நாட்டு பிரதி நிதிகளால் தலைப்பாகை சூட்டப்பட்டு பள்ளிவாசல் நிருவாகத்தினரால் சான்றிதழ்களும் நினைவுப் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராண்ட்பாஸ்: எல்லை மீறிய அத்துமீறல்



*2013.08.10*

"அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல் லாஹ்... அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்..."

கொழும்பு கிராண்ட்பாஸ், சுவர்ண சைத்திய வீதியில் அமைந்துள்ள 'மஸ்ஜித் தீனுல் இஸ்லாம்' பள்ளிவாசலில் மஃரிப் தொழுகை முடிந்து ஸலாம் கொடுக்கிறார்கள். 30 நாட்கள் நோன்பு நோற்று, ஒரு மாதகால ஆத்மிகப் பயிற்சியைப் பெற்று மகிழ்வுடன் பெருநாளையும் கொண்டாடிய அப்பகுதி முஸ்லிம்கள் மஃரிப் தொழுகை முடிந்து கலைந்து செல்ல ஆயத்தமாகிறார்கள்.

'பளீர்... பளீர்...' பள்ளிவாசல் கண்ணாடிகள் உடைகின்றன. சிங்கள மொழியில் வீராப்பு வசனம் பேசிய சில காடையர்கள் பள்ளிவாசலினுள் நுழைந்து தாக்குகிறார்கள். பள்ளிவாசல் முன் கதவு கழற்றி எறியப்படுகிறது... தாக்குதலில் 10 முஸ்லிம்கள் படுகாயமடைகிறார்கள்...

அடித்து உடைத்து தாக்குதல் நடத்தி விட்டு செல்லும் வழியில் நின்ற சில வாகனங்களையும் வீடுகளையும் தாக்கி விட்டு காடையர் கூட்டம் தப்பி ஓடி விடுகிறது.

தாக்குதலில் பள்ளிவாசல் கண்ணாடிகள் மட்டுமல்ல, பல்லாயிரம் முஸ்லிம்களின் உள்ளங்களும் சேர்ந்தே வெடித்துச் சிதறின. காடையர்கள் பள்ளிவாசலின் இருப்புக்கு மாத்திரமல்ல, பௌத்த தர்மத்துக்கும் சேர்த்தே கத்தி வைத்தார்கள்.

எல்லாம் முடிந்த பின்னரே காவல் துறை பள்ளிவாசலுக்கு பாதுகாவல் கொடுத்தது; கூடவே கடமையுணர்வும் வந்தது. காடையர்கள் டாட்டா காட்டி விட்டு பறந்து விட்டார்கள்.

நடத்தப்பட்ட தாக்குதலால் கொதிப்படைந்த கிராண்பாஸ் மற்றும் அதனை அண்டிய முஸ்லிம்கள் அவ்வல் சாவியா, சுவர்ண சைத்திய வீதி முன்பாக ஒன்று திரண்டனர். ஆயிரக் கணக்கான இளைஞர்களும் அங்கு குழுமினர். கலவரம் வெடிக்கும் சூழல் ஏற்பட்டாலும் அங்கிருந்த தூர நோக்குள்ள முஸ்லிம்களால் அதற்கு முற்றுப் புள்ளியிடப்பட்டது. பொலிஸ், இராணுவம் குவிக்கப்பட்டிருந்தமையும் மோதல் ஏற்படாமைக்கான ஒரு காரணம்தான். நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்த போதும் அடுத்த நாள் (11.08.2013) மீண்டும் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சத்தினால் இப்பகுதி முஸ்லிம்கள் உசாராகினர்.

இதற்கிடையில் வருகை தந்த இஸ்லாமிய இயக்கப் பிரதிநிதிகள், முஸ்லிம் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் அப்பகுதி மக்களை சற்று ஆற்றுப்படுத்தின.

**அவர்கள் சொல்வது போல் களஞ்சியசாலைதான் தாக்கப்பட்டது என்று ஒரு பேச்சுக்கு வைத்துக் கொண்டாலும் அதைத் தாக்குவதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? அதற்கான அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கியது யார்? சட்டத்தைக் கையிலெடுத்த காடையர்களின் அடாவடித்தனத்தை சட்டம் கை கட்டி வாய் பொத்தி பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?**

விளைவாக, ஞாயிற்றுக் கிழமை 2.00 மணியளவில் புத்தசாசன அமைச்சில் பிரதமர் டி.எம். ஜயரத்ன தலைமையில் உயர் மட்ட கூட்டம் நடந்தது. இதில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், அரசியல்வாதிகள், இஸ்லாமிய இயக்கப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தாக்குதல் குறித்து முஸ்லிம் அமைச்சர்கள் கடுமையான அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்தனர். நீண்ட கலந்துரையாடலின் பின் புதிய பள்ளிவாசல் பிரச்சினைக்கு தீர்வு முன் வைக்கப்பட்டது.

### பழைய பள்ளிவாசல்-
### புதிய பள்ளிவாசல் நடந்தது என்ன?

தாக்கப்பட்ட புதிய பள்ளிவாசலான 'மஸ்ஜிதுல் தீனுல் இஸ்லாம்' பள்ளிவாசலுக்கும் விகாரைக்கும் அருகாமையில் உள்ள பள்ளிவாசலே பழைய பள்ளிவாசல். அது 1966ஆம் ஆண்டு முதல் அவ்விடத்தில் வணக்க வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது. 1986ஆம் ஆண்டு இப் பள்ளிவாசல் வக்பு சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பள்ளிவாசல் அமைந் திருக்கும் பகுதியில் அப்போது 20 அல்லது 30 முஸ்லிம் குடும்பங்களே வசித்திருந்தனர். ஆனால், தற்போது 430 க்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பழைய பள்ளிவாசலில் சுமார் 75 பேர் நின்று தொழுவதற்குரிய இடவசதி மாத்திரமே உள்ளது. மட்டுமன்றி, அப்பள்ளிவாசலுடன் ஒட்டியிருக்கும் போதி மரத்தின் கிளைகள் பள்ளிவாசலுக்கு இடையூறுவிளைவிப்பதுடன் அதன் வேர்கள் பள்ளி வாசல் கட்டடத்தை ஊடறுத்துச் செல்வதனால் கட்டடம் பாதிப் புக்குள்ளாகியுள்ளது.



கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்கப்பட்ட மறுநாள்

-அபூ அர்வா-

இந்நிலையில், கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் குறித்த அரச மரத்தை வெட்டுவதற்கு பள்ளிவாசல் நிர்வாகத்தினர் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெற்று அதனை வெட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். எனினும், அப்பகுதியிலுள்ள சிங்கள மக்களும் தேரர்களும் மரத்தை வெட்டுவதை எதிர்த்தனர். இதையடுத்தே பழைய பள்ளிவாசல் நிர்வாகிகள் அம்முயற்சியைக் கைவிட்டு பள்ளியை இடமாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டனர். இதன் பின்னரே 166 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பழைய பள்ளிவாசல் தற்போதைய 158ஆம் இலக்கத்துக்கு இடமாற்றப்பட்டது. அந்தப் பள்ளிவாசல் கடந்த 04.07.2013 அன்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. எனினும், குறித்த பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள விகாரையின் பௌத்த பிக்குகளும் அப்பகுதி சிங்கள மக்களும் ஒன்றிணைந்து புதிய பள்ளிவாசல் திறந்து வைக்கப்பட்டமைக்கு எதிராக செயற்பட்டு அன்று மாலையிலேயே பள்ளிவாசலுக்கு மூடுவிழா நடத்தினர். இதனால் அப்பகுதியில் முஸ்லிம்-சிங்கள மக்களுக்கு மத்தியில் முறுகல் நிலை ஏற்பட்டது. நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பொலிஸார் பள்ளிவாசலுக்கு பாதுகாப்பும் வழங்கினர்.

05.07.2013 அன்று கிராண்பாஸ் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற சமரசப் பேச்சு வார்த்தையை அடுத்து புத்தசாசன அமைச்சின் இறுதித் தீர்மானம் வரும் வரை பள்ளிவாசல் தற்காலிகமாக மூடப்பட்டது. 09.07.2013 அன்று புத்தசாசன அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அன்று முதல் ரமழான் மாதம் முடியும் வரை புதிய பள்ளிவாசலில் வணக்க வழிபாடுகளை மேற் கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. எனினும், பௌத்த விகாரையிலிருந்து வந்த குண்டர் குழு புத்தசாசன அமைச்சின் தீர்மானத்தையும் மீறி பள்ளிவாசலைத் திறக்கவிடாது எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும் பொலிஸ் பாதுகாப்பில் பள்ளிவாசல் திறக்கப்பட்டது.

இதன் பின்னர் புத்தசாசன அமைச்சு ரமழான் மாதம் முடியும் வரை புதிய பள்ளிவாசல் இயங்க அனுமதித்த முடிவை மாற்றி தொடர்ந்தும் பள்ளிவாசல் இயங்குவதற்கான அனுமதியை உத்தியோகபூர்வ கடிதம் மூலம் புதிய பள்ளிவாசல் நிர்வாகத்திற்கு அறிவித்தது.

இந்நிலையிலேயே ரமழான் முடிந்ததும் பள்ளிவாசல் தொடர்ந்தும் இயங்குவதைக் கண்டு ஆத்திரமுற்ற காடையர்கள் 10.08.2013 அன்று பள்ளிவாசலினுள் புகுந்து தாக்குதல் நடத்தினர்.

இதன் பின்பே கிராண்ட்பாஸ் முஸ்லிம்கள் வெகுண்டெழுந்தனர்.

ஞாயிற்றுக் கிழமை புத்தசாசன அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, மஸ்ஜித் தீனுல் இஸ்லாம் பள்ளிவாசலை தொடர்ந்து அதே இடத்தில் இயங்குவதற்கான அனுமதி வழங்கி புத்தசாசன அமைச்சினால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் வாபஸ் பெறப்பட்டதுடன், பழைய பள்ளிவாசலை விஸ்தரிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. மட்டுமன்றி, பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள போதிமரத்தை அகற்றுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய 12.08.2013 அன்று அரச மரக் கிளைகளை வெட்டியகற்றும் பணி ஆரம்பமானது.

(13ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# ஆசிரியத்திற்கு களங்கமிழைக்கும் வினாத்தாள் விவகாரம்

ஜெஸ்மி எம். மூஸா

ஆசிரியத்துவம், குருத்துவம் குறித்து உலகில் உள்ள எல்லா சமயங்களும் மேன்மைப்படுத்தியே கூறுகின்றன. இஸ்லாத்தின் நிலைப்பாட்டிலும் ஆசிரியத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டே வந்திருக்கின்றது.


சமயத் தூதுவர்கள் எல்லோரும் மிக சிறந்த ஆசிரியர்களாகவே இருந்திருக்கின்றனர். இலக்கிய காலங்களிலும் புராணக் கதைகளிலும் புலவர்களாகவும் முனிவர்களாகவும் உயரிடம் வழங்கப்பட்டவர்கள் குருத்துவத்தின் மகிமை பேண வலம் வந்தவர்களே.

உலக வரலாற்றில் இவ்வாசிரியத்திற்கு என்றும் நன்மதிப்பு இருந்தே வருகிறது. தன்னை மேல் நிலையில் உயர்த்தி விட்ட ஆசான்களை மேலிடத்தில் வைத்து மதிக்கும் பலர் இன்றும் எம்முள் வாழ்கின்றனர். இதற்குக் காரணம் அவ் ஆசிரியர்களின் நடவடிக்கையும் தம்மை நம்பி வந்த மாணவ சமூகத்தை முன்னேற்ற வேண்டுமென்ற எண்ணமுமே.

இவை ஒரு புறமிருக்க, ஒரு சிலர் இத்தொழிலிற்கு பொருத்தமற்றவர்களாகி முழு ஆசிரிய சமூகத்திற்கும் சாபக்கேடாக மாறியுள்ளனர். அவர்கள் ஏமாற்றுக்காரர்கள், காமுகர்கள், கள்ளர்கள், சமூக துரோகிகள் என பட்டம் கொடுக்கப்பட வேண்டிய நிலையில் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். இப்புனிதமற்ற வேலைகளில் ஒன்றுதான் வினாத்தாள்களை முன்கூட்டியே வெளியிடும் துரோகச் செயலாகும்.

இலங்கையில் கடந்த சில வருடங்களாக உயர்தரப் பரீட்சை மற்றும் அமைச்சு, திணைக்கள மட்டப் பரீட்சைகளில் முன்கூட்டியே வெளியாகி வந்த இவ்வினாத்தாள்கள் இப்போது வலய மட்டப் பரீட்சைகளிலும் வெளியாகத் தொடங்கியுள்ளன. கடந்த இரு வருடங்களுக்கு முன் உயர்தரப் பரீட்சையின் கணித, விஞ்ஞானத் தாள்கள் வெளியானமை புலனாய்வுப் பிரிவால் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் சாட்டுப் போக்குக்காக ஒரே ஒரு வினாத்தாள் மட்டுமே நடத்தப்பட்டது. அவ்வாறாயின் அந்த ஒரு தாளைத்தானும் வெளியிட்ட ஆசிரியருக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டது?

கல்முனை கல்வி மாவட்டத்திலுள்ள வலயம் ஒன்றில் அதிபர் சங்கத்தினால் நடத்தப்பட்ட கல்வி பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை இரண்டாந் தவணை வினாப் பத்திரங்களில் பெரும்பாலானவை முன்கூட்டியே வெளியிடப்பட்டிருந்தன. குறித்த பாடசாலை அதிபரும் ஆசிரியர் குழாமும் இது பற்றி உடன் வலய கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்தனர். இந்நிகழ்வு கடந்த வாரம் இரண்டாந் தவணை விடுமுறை வழங்கப்பட்ட முஸ்லிம் பாடசாலை ஒன்றிலேயே நடந்தேறியது.



பரீட்சை வினாத்தாள் தயாரிப்பதற்கும் அதனை மதிப்பீடு செய்வதற்கும் உட்படுத்தப்படுபவர்கள் தொடர்பில் இலங்கை பரீட்சைத் திணைக்களம் மிக கடுமையான ஒழுக்க பிரமாணங்களை உள்ளடக்கி அதில் உறுதியளிக்க வைக்கிறது. தனது சமயத்தின் மீதும் கௌரவத்தின் மீதும் சாட்சியாக வைத்து ஒப்பமிடும் ஆசிரியர்கள் ஒரு சில சில்லறைகளுக்காக வினாத்தாள்களை வெளியிடுவது கேவலமானதே.

மேல் மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த இத்துரோக செயல்கள் வலய மட்டப் பரீட்சைகளையும் ஆட்கொண்டு வருவது அபாயகரமானது. வினாத்தாள்களை வெளியிட்டுத்தான் தம் இருப்பை தக்க வைக்க எண்ணும் இயலாமை உடையவர்களே இம் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

மாணவர் சமுதாயத்திற்கு ஒழுக்கம், களவு, ஊழல் போன்ற பாதக செயல்களின் வியாக்கியாணங்களை எடுத்துக் கூற வேண்டிய ஆசிரிய சமூகத்தின் அங்கத்தவர்கள் வேலியே பயிரை மேய்ந்த கதையாக மாணவ சமுதாயத்தை சீரழிவுக்கு இட்டுச் செல்ல வழி காட்டுவது தண்டிக்கப்பட வேண்டியதாகும்.

பரீட்சை எதற்காக, இதன் நோக்கம் என்ன? இவற்றை மறந்து விட்டு ஒரு சில மாணவர்களின் குறுநோக்குக்காக பெரும் மாணவர் சமுதாயத்தையே படுகுழியில் தள்ளும் இவ் இழிநிலை இனிமேலும் தொடராமல் காக்க வேண்டியது ஆசிரியர் ஒவ்வொருவரினதும் கடமையாகும். தம்மை அளவிடுவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நிற்கும் மாணவர் சமூகத்தை தவறான பாதையில் இட்டுச் செல்கின்ற சுயநலமுள்ள ஆசிரியர்கள், இத்தொழிலின் புனித தன்மைக்கு களங்கம் ஏற்படுத்தாமல் மாணவர்கள் கல்விக்கு, முன்னேற்றத்திற்கு நேர்மையாக பங்களிப்புச் செய்ய முன் வருவது அவர்கள் மீதுள்ள சமூக கடமையாகும்.

# ஏறாவூரில் சுகாதார விழிப்புணர்வும் பால்மா வழங்கும் நிகழ்வும்





எம்.ரீ.எம். பாரிஸ்

"டெங்கை ஒழிப்போம் ஆரோக்கியமான தேசத்தை கட்டியெழுப்புவோம்" எனும் தெனிப் பொருளில் ஏறாவூர் ஒட்டுப் பள்ளி அல்மீரா பாலர் பாடசாலை மண்டபத்தில் சுகாதார விழிப்புணர்வு செயலமர்வும் குழத்தைகளுக்கான சத்து பால்மா வழங்கும் நிகழ்வும் அண்மையில் ஏறாவூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீர் தலைமையில் இடம்பெற்றது.

ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வின் போது அலுவலகத்தின் வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் எம்.எச்.எம். தாரிக் அவர்களால் டெங்கு நுளம்பின் தாக்கம் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட கிழக்கு மாகாண பிரதி தவிசாளர் எம்.எஸ். சுபைர் அவர்களால் 300 குடும்பங்களை சேர்த்த 1வயது தொடக்கம் 3 வயது வரையான குழந்தைகளுக்கான சத்து பால்மா வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதி தவிசாளர் எம்.எஸ். சுபைர்: இன்று நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளும் சதிகளும் கட்டவிழ்க்கப்பட்டுள்ளன. எமது உரிமை அரசியலை விட்டு விட்டு அபிவிருத்தி அரசியலுக்குப் பின்னால் எமது முஸ்லிம் அரசியல் தலைமைகள் சென்றமையே இதற்குக் காரணம்.

நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வன்முறைகளை தடுத்து நிறுத்த ஒரு போதும் முஸ்லிம் அரசியல் தலைமைகளால் முடியாது. எமது அரசியல் தலைமைகள் எல்லாம் வாய்பேசா ஊமைகளாக மாறி விட்டனர்.

அரசியல் உரிமைகள் என்று அரசியல் வாதிகளுக்கு பின்னால் செல்வத்தைத் தவிர்த்து இறைவனிடத்தில் கையேத்துங்கள். 'துஆ' என்ற ஆயுதம்தான் எம்மைக் காப்பாற்றும் எனக் குறிப்பிட்டார்.

## அகில இலங்கை சமாதான நீதவான்



மன்னார் சிலாபத்துறை ஹாமித் முஹம்மத் சுஐப் அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் புத்தளம் மாவட்ட நீதவான் நீதி மன்றத்தில் நீதவான் எம்.எம். பாரதி ஆர். விஜேரத்ன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

நுரைச்சோலை சஞ்சிதாவத்தையில் வசிக்கும் இவர் மன்/சிலாபத்துரை முசலி ம.வி. பழைய மாணவர் ஆவார். தற்போது புத்/கல்பனையடி றோ.க.த. வித்தியாலயத்தில் ஆசிரியராக பணிபுரியும் இவர் சமூகத்தின் மேம்பாட்டிற்கு அயராது செயற்பட்டமைக்காக சமாதானத்தின் தந்தை என்ற கௌரவ பட்டத்தை பெற்றுக் கொண்டதுடன் அமைச்சர் டப்ளியூ. எம். செனவிரத்ன அவர்களால் 'தேசகீர்த்தி' என்ற பட்டமும் கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.


இவர் மர்ஹூம் அதிபர் ஹாமித் அஸ்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



நிந்தவூர் சோண்டஸ் விளையாட்டுக் கழகத்தின் 21ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட அம்பாரை மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மின்னொளி உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியும் உதைப்பந்தாட்ட வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வும் அண்மையில் நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உதைப்பந்தாட்டத் துறையில் சிறந்து விளங்கிய எம்.ரீ.ஏ. கபூறுக்கு பிரதேச சபை செயலாளர் எம். ஜெளபர் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிப்பதையும் நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம். தாஹீர் உட்பட மற்றும் பலரையும் படத்தில் காணலாம்.

படமும் தகவலும்: ஏ.கே. றஊப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






-மலைஞானி

திருந்தவே மாட்டார்கள் என்று சிலரைச் சொல்வோம். மலையக அரசியல் கட்சிகளை மட்டுமின்றி மலையக வாக்காளர்களையும் இப்படித்தான் அழைக்க வேண்டியிருக்கிறது.

பெரும்பாலான சிங்கள வாக்காளர்கள் பௌத்த-சிங்கள பெருந் தேசிய வாதத்துக்குள் படிப்படிப்பாக சென்று கொண்டிருக்கிறார்கள். அரசாங்கமும் பெருந் தேசிய வாதத்தை அவ்வப்போது கிளறும் வகையில் எதையேனும் மக்களுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறது. 'ஐரோப்பிய புலிகள்',

அவை மேற் கொண்டிருக்கும் சிறுபான்மை விரோத அரசியலும் வன்முறை சார்ந்த இனவாத அணுகுமுறைளும் வரலாற்றை திரிந்து கூறும் லாவகமும்தான் காரணம் என்பதோடு இந்த அமைப்புகளுக்கு அரசாங்கத்தின் ஆசியும் இருக்கவே செய்கிறது.

இத்தகைய ஒரு தேசிய அரசியல் பின்னணியில் சிறுபான்மை கட்சிகள் வகிக்கப் போகும் அல்லது வகிக்கும் பங்கு என்ன என்பது பெரியதொரு கேள்விக்குறி. ஐக்கிய

மனோ கணேசனுக்கும் இது நடந்தது. அவர் குடும்பத்திலிலேயே பிரச்சினைகள் எழுந்தன. பாராளுமன்றத் தேர்தலில் நம்பித் தோற்றுப் போனார். ஆனால், அவரை இன்றளவு அரசியலில் மிதக்கச் செய்வது அவரது ஒரே ஆயுதமான எதிர்ப்பு அரசியல் மட்டுமே. ஆளும் கட்சியொன்றை எதிர்க்க விரும்புகின்றவர்களும் சிறுபான்மை அரசியலில் விடாப்பிடியான போக்கைக் கொண்டவர்களும் தமது எதிர்ப்பை மனோ கணேசனுக்கு வாக்களிப்பதன் மூலம் வெளிப்படுத்துகிறார்கள். வெறுப்பை வாக்குகளாக்கிக் கொள்வதற்கு அப்பால் அவரால் சாதிக்க கூடியது எதுவுமில்லை. கூட்டமைப்பின் அரசியலும் இத்தகையதே. எதிர் வரும் மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்று மாகாண அரசை அமைத்த பின்னரேயே மக்களுக்கு எதிர்ப்பு அரசியலுக்கு அப்பால் சேவைகள் மற்றும் அபிவிருத்தி பணிகளில்

வாறான ஒரு நிலையிலேயே தேங்கி நிற்கிறது என்பது உண்மையானாலும் கட்சியை கடுமையாக விமர்சிக்கும் ஒரு பொறிமுறையை கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியிலும் இயங்குவதைப் பார்க்க முடிகிறது. கட்சித் தலைவரும் அமைச்சருமான ரஊப் ஹக்கீம் இவ்விமர்சனங்களுக்கு பதிலளிக்கவும் செய்கிறார். மெதுவாக இயங்கினாலும் ஒரு சுய சுத்திகரிப்பு பொறிமுறையாக இதைக் கருத முடியும்.

இ.தொ.கா. வில் இவ்வாறான ஒரு 'திருத்தல்' பொறிமுறை இயங்குவதை கற்பனை செய்தும் பார்க்க முடியாது. இதனால் தான் அக்கட்சியை விட்டும் இராஜதுரை எம்.பி. தற்போது வெளியேறியுள்ளார். இதற்கு தொண்டாமானும் கட்சி சார்பாக

# நொண்டிக் கால்களானாலும் வேண்டும் சொந்தக் கால்கள்







சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு, நோர்வே, 13 வது திருத்த சட்டம், ஹலால் எதிர்ப்பு, பள்ளிவாசல்களுக்கு எதிரான தாக்குதல்கள், இராவண சேனா, பொது பல சேனா, இந்திய எதிர்ப்பு, செயலாளரின் கனல் பேச்சுகள் என்று அரசின் அம்புறாத் தூணியில்ஏகப்பட்ட ஏவுகணைகள் உள்ளன. ஒன்றில்லாவிட்டால் ஒன்று என அரசு அவ்வப்போது ஒன்றை ஏவி, சிங்கள மக்கள் மத்தியில் பரபரப்பை தொடர்ச்சியாக தக்க வைத்துக் கொள்கிறது.

சிங்கள மக்கள் மத்தியில் இன்று எடுபடக்கூடிய விடயமாக இருப்பது அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் அல்ல. அபிவிருத்தி பற்றிப் பேசினால், அரசு விட்ட தவறுகள், செய்து முடிக்கத் தவறியவை மற்றும் ஊழல்கள் பற்றி எதிர் பேச்சு எழும். சிறுபான்மை இனத்தவருக்கு கிடைப்பதைப் பறிப்பது, இருப்பதை அவிழ்ப்பது பற்றிப் பேசினால், அவர்கள் எவ்வளவு பயங்கரமானவர்கள் என்பதை இட்டுக் கட்டி விவரித்தால், ஆமாம் சாமி போடுவார்கள் என்றொரு அபிப்பிராயத்தை இன்றைய சிங்கள கட்சிகள் அது மலையாக இருந்தாலும் வெற்றிகரமாக நிலை நிறுத்திவதில் வெற்றி பெற்றுள்ளன. சிஹல உறுமய, பொது பல சேனா, ராவணா பலய, பிக்கு முன்னணி, சிங்கள ராவய உட்பட இன்னும் பல தீவிர வாத சிங்கள கட்சிகளும் அமைப்புகளும் இன்று மக்கள் மத்தியில் வலிமை வாய்ந்த மற்றும் பாரம்பரிய தேசிய கட்சிகளாலும் செய்ய முடியாத காரியங்களை செய்து முடிக்கும் ஆற்றலைக் கொண்டவையாக விளங்க முடிகிறது என்றால் அதற்குக் காரணம்,

அவை முன்வைத்திருக்கும் புரட்சிகரமான அபிவிருத்தி திட்டங்களா அல்லது மக்கள் நல திட்டங்களா?

தேசிய கட்சியே சின்னாபின்னமாக்கப் பட்டுக் கிடக்கிறது. ஓரணியில் திரண்டு ஆளும் கட்சியை எதிர்க்கக் கூடிய அரசியல் பலத்தை எந்தவொரு கட்சியாலும் ஏற்படுத்த முடியாத சூழல் நிலவுகிறது. தேசிய கட்சிகளின் இந்த இயலாமை சிறுபான்மை இனக் கட்சிகளின் நிலையைப் பரிதாப நிலைக்குத் தள்ளி விட்டிருக்கிறது. முஸ்லிம், மலையக கட்சிகள் முற்றாகவே தமது தட்டிக் கேட்கும் தன்மையை இழந்து நிற்கின்றன. எதிர்ப்பு அரசியல் நடத்தும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் கூட அரசின் அழுத்தங்களுக்கு ஆட்படாமல் இல்லை. கூட்டமைப்பையும் அரசு விலைக்கு வாங்கியிருக்கும் எப்போதோ. ஆனால், கூட்டமைப்புக்கு எதிர்ப்பு அரசியலுக்கு அப்பால் தமது மக்களிடம் அளிக்கக் கூடிய வாக்குறுதிகள் எதுவும் இல்லை. எதிர்ப்பு அரசியல் செய்யவில்லை என்றால் அச்சமூகத்தால் அக்கட்சி நிராகரிக்கப்பட்டு விடும்.

முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு அரசியல் மூலம் மக்களிடம் சென்றடைந்த கட்சி. கொள்கை அடிப்படையில் செயற்பட்ட கட்சி. அதன் இன்றைய நிலையை அனைவரும் அறிந்ததே. இரு பெரிய தேசிய கட்சிகளும் அக்கட்சியை பிரித்துப் போட்டு விட்டன.

ஈடுபடுவதற்கான வாய்ப்பு தமிழ்க் கூட்டமைப்புக்கு கிட்டும். கூட்டமைப்பின் உண்மையான உருவம் அப்போதே மக்களுக்குத் தெரிய வரும். எனினும், அரசின் செயற்பாடுகளே மக்களின் கோபத்தை அவ்வப்போது கிளறி கூட்டமைப்புக்கு தணியாத ஆதரவைத் தந்து கொண்டிருக்கிறது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

இந்த பின்னணியில் மத்திய மாகாண சபைத் தேர்தலைப் பார்க்க வேண்டும்.

திட்டமிட்டு சிதறடிக்கப்பட்ட சிறுபான்மை இனக் கட்சிகளில் முதலிடம் வகிப்பது இ.தொ.கா. 80களிலும் தொண்ணூறுகளிலும் 'கிங் மேக்கர்' என்ற அளவுக்கு இ.தொ.கா. வளர்ச்சி அடைந்தது பொறுக்காத பிரதான கட்சிகள் பிளவுகளை இ.தொ.கா. வில் உருவாக்கின என்பது உண்மையானாலும் சௌமியமூர்த்தி தொண்டமானின் மறைவின் பின்னர் ஆறுமுகன் தொண்டமானின் எதேச்சதிகார போக்குகள் காரணமாக அக்கட்சி தொடர்ச்சியாகப் பின்னடைவுகளை சந்தித்து வந்துள்ளது என்பதே சரியானது.

இ.தொ.கா. இன்று முற்றிலும் செயலிழந்துள்ளது. சொந்தமாக அதனிடத்தில் எதுவுமேயில்லை. முஸ்லிம் காங்கிரஸும் இவ்

முத்து சிவலிங்கமும் ஏதேதோ காரணங்களைச் சொல்லலாம். ஆனால், தொடர் கதையாக ஐ.தே.க. வில் இருந்து எம்.பி. மார் விலகிச் செல்வதற்கு ரணில் எவ்வாறு காரணமாக இருக்கிறாரோ அதேபோல, இ.தொ.கா. வில் இருந்து விலகிச் செல்வதற்கு ஆறுமுகன் மட்டுமே காரணமாக இருக்கிறார்.

1994ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலில் மொத்தம் 14 தமிழ் உறுப்பினர்கள் வீற்றிருந்தனர். அவர்களில் பத்துப்பேர் இ.தொ.கா. சார்பாக தேர்ந்து எடுக்கப்பட்டார்கள். கடந்த மாகாண சபைத் தேர்தலில் வெற்றிலை சின்னத்தில் மூன்று தமிழ் உறுப்பினர்களே தெரிவு செய்யப்பட்டிருந்தனர் என்பதும் ஐ.தே.க. சார்பாக ஐவர் தெரிவாகி இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு எல்லா வகையிலும் கட்டெறும்பாகத் தேயும் கழுதையாகவே இ.தொ.க. இருந்து வருகிறது. இந்த தேய்மானத்தின் தொடர்ச்சியை இந்த மாகாண சபைத் தேர்தலின் முடிவிலும் காண முடியாது போனால் அது ஆச்சரியமே.

நுவரெலியா மாவட்டத்தில் 60 சதவீதத்துக்கு சற்றும் அதிகமானவர்கள் தமிழ் வாக்காளர்கள். இவர்கள் ஏதேனும் ஒரு தமிழ் கட்சிக்குத்தான் வாக்களிப்பார்கள் என்பதால் திருநீறு, சந்தனம், பூமாலை முகங்களுடன் தமிழ் வேட்பாளர் முகங்களைக் காட்டி வாக்குகளை வெற்றிலைக்காக அள்ளுவதில் ஆளுங்கட்சி முனைப்பாக இருக்கிறது. எனவே, இ.தொ.கா., ம.ம.மு., பிரஜைகள் முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம் என்பன வெற்றிலையின் வெற்றிக்காக உழைக்க முன் வந்துள்ளன என்பதே சரியான அரசியல் கணக்காகும்.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீதியமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரஊப் ஹக்கீம் நிகழ்த்திய தந்தை செல்வா நினைவு சொற்பொழிவுகள் அடங்கிய நூல் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அண்மையில் தாருஸ்ஸலாத்தில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் அமைச்சர் ரஊப் ஹக்கீம் பேராசிரியர் சந்திரசேகரனுக்கு புத்தகத்தை வழங்குவதையும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அருகில் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.



படமும் தகவலும்: றாசீக் நபாயிஸ்

சமூக சேவை அமைச்சின் அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகத்தின் வழி காட்டலின் கீழ் அங்கவீனமுற்ற நபர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு அண்மையில் கல்முனை பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது. பிரதேச செயலாளர் எம்.எம். நௌபல் குடும்ப பெண்ணொருவருக்கு உதவித் தொகை வழங்குவதையும் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எம்.பீ. சம்சுத்தீன் மற்றும் கல்முனை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எம்.ரீ. அன்சார் ஆகியோரையும் படத்தில் காணலாம்.



ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இப்தார் நிகழ்வு அண்மையில் மருதானை புக்கர் வரவேற்பு மண்டபத்தில் அமைப்பின் தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.எம். சுபியான் தலைமையில் இடம்பெற்றது. இவ் இப்தார் நிகழ்வில் பிரதம அதிதியாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: ஏ.எஸ்.எம். ஜாவித்



மருதமுனை அந்நஹ்ழா அரபுக் கல்லூரி வளாகத்தில் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் அனுசரணையுடன் கட்டி முடிக்கப்பட்ட பள்ளிவாசல் கையளிப்பு வைபவம் அண்மையில் சட்டத்தரணி ஏம்.எம். பதுறுத்தின் தலைமையில் இடம்பெற்றது. இப் பள்ளிவாசலை ஜமாஅத்தின் அம்பாரை பிராந்திய பொறுப்பாளர் ஐ.எல். ரூமில் மற்றும் மருதமுனை ஜம்இய்யதுல் உலமா தலைவர் அஷ்ஷெய்க் கலாநிதி எம்.எஸ்.எம். ஜலால்தீன் (கபூரி) ஆகியோர் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: றாசீக் நபாயிஸ்



மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவு கர்பலா நகரில் இயங்கும் ஸ்டார் இளைஞர் சமூக சேவை அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிரமதானம் அண்மையில் ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெற்றது. இதில் வைத்தியசாலை ஊழியர்கள், கர்பலா பொலிஸ் அரண் சிவில் பாதுகாப்புக் குழு உத்தியோகத்தர்கள் மற்றும் ஸ்டார் இளைஞர் அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் சிரமதானத்தில் ஈடுபடுவதையும் சிரமதான ஒருங்கிணைப்புக் குழுவினரையும் படங்களில் காணலாம் .

படமும் தகவலும்: பழுலுல்லாஹ் பர்ஹான்

# புருணையில் சில நாட்கள்...

தொடர்-08



பஷீர் அலி
kinniyabasheerali@gmail.com

29 மே 1885 இல் மரணமான அப்போதைய புருணையின் சுல்தானாக இருந்த அப்துல் மு.ஃ.மின் தொட்டு தற்போதைய சுல்தானின் தந்தை ஓமர் அலி ஸைபுதீன் உற்பட சுல்தான் குடும்ப அங்கத்தவர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடமான Makam de Raja Brunei நோக்கி எங்கள் கார் விர்ரியது. உச்சந் தலைக்கு சற்றே உயரத்திலிருந்து நெருப்பு மூட்டிக் கொண்டிருந்தது சூரியன். குளிரூட்டப்பட்ட காரிலிருந்து இறங்கிய போதுதான் சூரியனின் ஆட்சிப் பிரதேச எல்லைக்குள் கால் வைத்திருப்பது தெரிய வந்தது.

பொது மையவாடி ஒன்றுடன் இணைந்ததாகவே அரச குடும்பத்தின் அடக்கஸ்தலங்களும் உள்ளன. Makam de Raja Brunei என்பதற்கு புருணை அரச குடும்பத்தினரின் அடக்கஸ்தலம் என்பது பொருள். 1885 இலேயே முதல் ஜனாஸா அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ள போதும் இது 1740 இல் கட்டப்பட்டதாக புருணை மியூசியத்தில் தகவல் ஒன்றை வாசித்தேன்.

அரச குடும்பத்தினரின் அடக்கஸ்தலங்கள் அனைத்தும் பள்ளிவாசல் போன்ற உயரமாக அமைக்கப்பட்டுள்ள கட்டிடம் ஒன்றினுள்ளேயே அமையப் பெற்றுள்ளன.

ஒவ்வொருவருடைய அடக்கஸ்தலத்திலும் வெள்ளைப் பழிங்கு கற்களால் கல்லறைகள் கட்டப்பட்டு அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. அடக்கம் செய்யப்பட்டுள்ள (குறித்த)



சுல்தான் ஓமர் அலி சைபுத்தீன் அவர்களுடைய கபுரறையின் அருகில் நான்

நபர்களுடைய கல்லறைகளில் அரபி மற்றும் மலாய் எழுத்துக்களில் விபரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. நண்பர் இஸ்மத் அலி அரபியில் வாசித்து பொருள் சொன்னார். நானும் சளைத்தவனல்ல என்பதைக் காட்ட மலாய் எழுத்துக்களை கண்டு பிடித்து, கோர்த்து விளக்கம் தர முயற்சித்தார் நண்பர் ஸிஹறான்.

ஊதுபத்திகள் ஏற்றப்பட்டு கமகமத்துக் கொண்டிருந்தது அந்த கட்டிடத்தின் உட்பகுதி. அரச குடும்பத்தவர்களும் அவர்களுக்கு வேண்டியவர்களும் அங்கு வந்து அல்குர்ஆன் ஓதி பிரார்த்தனை புரிவதை காணக் கூடியதாக இருந்தது.

புதிதாக உடல் அடக்கம் செய்யப்பட்டு மண் ஈரம் காயாத அதேவேளை தூவப்பட்டிருந்த பல நிறங்களிலான பூக்கள் கருகுவதற்கு தயாராகக் கிடந்தன. ஒரு வாரத்துக்கு முன்னாள் அரச பரம்பரையில் யாரோ ஒருவர் மரணித்திருப்பதை உணர முடிந்தது. சுல்தானுடைய நெருங்கிய உறவில் 6 வயது சிறு பிள்ளை ஒன்று கடந்த வாரம் மரணித்த செய்தியை பத்திரிகையில் படித்ததாக சேரின் மனைவி பின்னர் சொன்னார்.

மறுபுறம், அரச குடும்ப அடக்கஸ்தல கட்டிடத்துடன் இணைந்ததாக பொது மையவாடி ஒன்றும் உள்ளது. குறித்த மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அங்கு வந்து அல்குர்ஆனை ஓதி பிரார்த்தனை புரிந்து கொண்டிருந்தனர்.

அந்த மையவாடி முழுதும் இலைகளற்ற ஒருவகை அலறி இனத் தாவரம் நடப்பட்டுள்ள அழகே கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பார்ப்பவர்கள் அதனை முஸ்லிம்களின் மையவாடி என்று அடையாளம் கண்டு கொள்ள முடியாதளவு வித, விதமான கல்லறைகள் அமைக்கப்பட்டிருந்தன. தென் கிழக்காசிய நாடுகள் பலவற்றிலும் நான் இந்த நடைமுறையைத்தான் கண்டிருக்கிறேன்.

வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும் போது புருணை மிகச் சிறந்த பிறப்பு-இறப்பு வீதத்தைக் கொண்டிருப்பதை அறிந்து கொண்டேன். 2012 ஆம் ஆண்டின் கணிப்பின் படி உலக நாடுகளின் மரண வீதத்தின் அடிப்படையில் 1000:17 என்ற அதி கூடிய மரண வீதத்தை தென்னாபிரிக்காவும் அதனை அடுத்து ஐரோப்பிய நாடுகளே வகிக்கின்றன. மிகக் குறைந்த மரண வீதத்தைக் கொண்ட கத்தார், சஊதி அரேபியாவுக்கு அடுத்தபடியாக புருணை முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்கது. இங்கு 1000:3 என்ற வீதத்திலேயே மரண வீதம் இருப்பது ஆச்சரியமளிக்கிறது.

வெயில் தனது கடமையில் கண்ணும் கருத்துமாகவே இருந்தது. அதற்காக நாங்கள் உட்கார்ந்திருந்து எங்கள் சோம்பேறி தனத்தைக் காட்ட விரும்பவில்லை. அங்கிருந்து அந்த தென்னாசியாவின் அதிசயத்தைக் காண காரில் ஏறினோம். அதைக் காணும் வரை எனது ரெத்தம் சூடேறிக் கொண்டிருந்தது. என்னால் இருப்புக் கொள்ள முடியவில்லை.

"முட்டைக்கு முடுத்த கோழி பண்ணாம கொஞ்சம் இருங்க! அங்கதான் கூட்டிப் போறம்..."

-தொடரும்-



பொது மையவாடியில் உறவினர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்சத்திரங்களில் ப்ளாஸ்மா உயிர்கள்



ஆலிப் அலி (இஸ்லாஹி)

ஏலியன்ஸ் என்ற பெயரில் பிரபஞ்ச வெளியில் ஏதோ ஒரு படைப்பு இருக்க வேண்டும் என்பதாக கூறும் விஞ்ஞானிகள் சுமார் 50 வருடங்களாக அது பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகளை செய்து வருகின்றனர். அது தொடர்பாக பல திரைப்படங்களையும் நாவல்களையும் வெளியிட்டு வருகின்றனர். அண்மையிலும் Pacific Rim என்றொரு திரைப்படம் வெளி வந்துள்ளது. வேற்றுக் கிரகவாசிகளான ஏலியன்கள் அவர்களது செல்லப் பிராணிகளை பூமிக்கு ஏவி விட்டு புவியை அழிக்க முனைவதாகவும் அதற்கு எதிராக மனிதர்கள் போராடுவது போன்றும் அத்திரைப்படம் தயாரிக்கப் பட்டிருக்கின்றது.

உண்மையில் அத்தகைய வேற்றுக் கிரக ஜீவிகள் இருக்கின்றனவா என்று இதுவரை உறுதியான எந்த தகவலும் இல்லை. 1927ஆம் ஆண்டு பேராசிரியர் பிரான்சிஸ் யங்ஹஸ்பெண்ட் என்பவர் "Life in Stars - நட்சத்திரங்களில் உயிர்கள்" (Sir.Fransis Younghusband - Published. John Murray-London.) என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதினார். இதில் நட்சத்திரங்களில் உயிரினங்கள் வசிக்க வாய்ப்புள்ளது என்று கூறியிருந்தார்.

அதேபோன்று, 1980களில் விஞ்ஞானிகளான பெய்ன் பேர்க் மற்றும் ஷாப்பிரோ (G.Feinberg & R.Shapiro) என்போர் ஓர் ஆய்வு நூலை எழுதுகிறார்கள் "Life Beyond Earth" பூமிக்கு அப்பால் உயிர்கள் (Published by William Morrow and co.Inc.New York-1980). அதில் அவர்கள், நட்சத்திரம் மற்றும் சூரியனின் பிளாஸ்மாக்களில் வேறு உயிரினங்கள் வாழ்வதற்கு வாய்ப்புள்ளது என்றும் இவ் உயிரினங்களுக்கு பிளாஸ்மா பீஸ்ட் (Plasma Beast) என்றும் பெயரிட்டனர்.

பூமியில் கார்பன் மற்றும் நீரின் இரசாயன மாற்றத்தால் வாழும் மனிதன் மற்றும் பல ஜீவராசிகள் இரசாயன உயிரிகளாக (Chemical Life) அழைக்கப்படுவது போன்று, சூரியனின் பிளாஸ்மா வெப்பத்தில் வாழும் உயிரிகள் இயற்பியல் உயிரிகளாக (Physical life) இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருத்துரைக்கின்றனர். ஏற்கனவே ஜின்கள் எரியும் நெருப்பின் கொழுந்தினால் (ப்ளாஸ்மாவினால்) படைக்கப்பட்டவர்கள் என்று நாம் பார்த்தற்கு இணங்க, சூரியனும் ஒரு நட்சத்திரம் என்ற வகையில் ஜின்கள், சூரியக் கதிர்களை சக்தியாகக் கிரகித்து (Radiant energy) செயல்படுவனவாக இருக்கலாம். கீழ்வானை நட்சத்திரங்களைக் கொண்டு அழகுபடுத்தியிருப்பதாக அல்லாஹ் கூறுகின்றான்.

சூரிய வெப்பத்தில் உருவாகும் பிளாஸ்மாக்கள் பிரபஞ்சத்தில் உள்ள தூசு (Cosmic Dust) உடன் சேர்ந்து மின்னூட்டம் பெற்று பூமியில் உள்ள DNA உயிர்கள் போன்று மாறுவதாக ஜேர்மன் மாக்ஸ் பிளாங்க் ஆய்வகம் கூறுகிறது. இதே ஆய்வை விண்ணில்

> **ஏற்கனவே ஜின்கள் எரியும் நெருப்பின் கொழுந்தினால் (ப்ளாஸ் மாவினால்) படைக்கப்பட்டவர்கள் என்று நாம் பார்த்தற்கு இணங்க, சூரியனும் ஒரு நட்சத்திரம் என்ற வகையில் ஜின்கள், சூரியக் கதிர்களை சக்தியாகக்கிரகித்து (Radiant energy) செயல்படுவனவாக இருக்கலாம்.**

அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் (ISS- International Space Station) ரஷ்ய விஞ்ஞானிகள் நிகழ்த்தி பிளாஸ்மா உயிர் உருவாவதை கண்டு பிடித்துள்ளனர். இந்த ஆய்வு இன்னும் ஆரம்ப நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏலியன்களைத் தொடர்பு கொள்ளவென ரேடியோ அலை தொலை நோக்கி (Radio Telescope) மூலம் கடந்த ஐம்பது வருடங்களாக கடும் முயற்சிகள் செய்தும் பலனில்லை என்று கூறும் விஞ்ஞானிகள் அதற்கான காரணத்தை நட்சத்திரங்களில் ப்ளாஸ்மா சக்தியாக இருக்கும் உயிர்களை எலெக்ட்ரோ மாக்னடிக் ரேடியன்ட் ஆற்றல் மூலம் தொடர்பு கொள்ள முடியாது என்கின்றனர். ப்ளாஸ்மா அமைப்பிலான உயிர்கள் என்ற யூகம் அண்மையில்தான் தெரிய வந்துள்ளது என்பதால் இனி அதற்கு பொருத்தமானதொரு தொலை நோக்கி மூலம் ஆராய்ச்சிகளைத் தொடர ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஜூன் (2013) மாதத்தில் வெளி வந்த புகழ் பெற்ற "ASTRONOMY' இதழில் பிரபல்யமான ஐந்து விண்வெளி ஆய்வாளர்கள் செய்த ஆய்வு முடிவு வெளி வந்தது. கடந்த நாற்பது வருடமாக ரேடியோ டெலஸ்கோப் (Radio Telescope) மூலம் ஏலியன் என்னும் பிற உயிரினத்தைத் தேடி அலைந்து தோல்வியுற்றார்கள். தோல்விக்குக் காரணம், பிரபஞ்சத்தில் வெப்பத்தை அடிப்படையாகக் கொண்ட உயிரினங்கள் உள்ளமை தற்போதுதான் தெரிய வந்துள்ளது. அவை அக சிவப்புக் கதிர்களை வெளியிடக் கூடியவை என்றும் கண்டறியப் பட்டுள்ளன.

எனவே, வெப்பத்தை இனம் காட்டும் (Heat Seeking) அக சிவப்புக் கதிர் தொலை நோக்கிகள் (Infra-Red Telescope) மூலம் இனி ஆய்வுகளை மேற் கொள்ள விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளார்கள். இந்த தொலை

(18ஆம் பக்கம் பார்க்க)

# One Click அப்ளிகேஷன்களால் நிறையும் உலகம்




Smart Phone பயன்படுத்துபவரா நீங்கள்? அப்படியென்றால் Google Play இல் இருந்து உங்களுக்குத் தேவையான அப்ளிகேஷன்களை தரவிறக்கம் (Download) செய்திருப்பீர்கள்.

இதேபோல் iPhone களுக்கான Application களை AppStore இலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

Blackberry போன்களுக்குத் தேவையான அப்ளிகேஷன்களை App World இலிருந்தும் Nokia போன்களுக்குத் தேவையான அப்ளிகேஷன்களை Ovi இலிருந்தும் Windows Phone இற்கான அப்ளிகேஷன்களை அதனுடைய Store இலிருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

அதேபோல் Google Chrome இற்கான அப்ளிகேஷன்களை Web Store இலிருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இன்று நாம் பயன்படுத்தும் Facebook, Twitter, Youtube போன்ற சமூக வலைத் தளங்கள் அப்ளிகேஷன்களாக எமக்குக் கிடைக்கின்றன.

இன்று கற்பதற்கும் எமது ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதற்கும் பல விதமான அப்ளிகேஷன்கள் காணப்படுகின்றன.

இந்த வகையில் Khan Academy என்ற அப்ளிகேஷன் கற்பதற்கான சிறந்த அப்ளிகேஷன் ஆகும்.

இது தவிர Samsung மொபைல் போன்கள் பெரும்பாலும் அன்ட்ரோயிட் இயங்கு தளத்திலேயே இயங்குகின்றன. கூகுளின் இயங்கு தளமான அன்ட்ரோயிட் எதிர் காலத்தில் ஆபத்தாக வரலாம் என்பதால் சம்சுங் தனக்கென தனியான Storeஐயும் Operating System (இயங்கு தளத்தையும்) உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. சம்சுங் Smart Phone களில் நீங்கள் சம்சுங் Apps ஐக் காணலாம்.

இந்த வகையில் சம்சுங் தொலைத் தொடர்பாடல் சாதனங்களில் பல சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன. அவையாவன:

Samsung Apps, Music Hub, Game Hub, Readers Hub, Vedio Hub, Learning Hub,S Suggest

இவற்றின் மூலம் பல பயன்பாடுகளைப் பெற முடியும்.

இவை தவிர இஸ்லாத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும் அல்குர்ஆனை ஓதவும் நபி மொழிகளை கற்கவும் பல அப்ளிகேஷன்கள் காணப்படுகின்றன. இவற்றை தரவிறக்கம் செய்யும் போது அவற்றின் நம்பகத் தன்மை பற்றி கவனம் செலுத்துவது மிக அவசியமாகும். பயனுள்ள சில அன்ட்ரோயிட் அப்ளிகேஷன்கள்:

iQuran Lite
Sahih Muslim (Islamic Hadith)
Sahih Bukhari English Free
40 hadiths (An-Nawawi)
Muslim Kids Series: Dua
Muslim Kids Series: Wudu
Dua & Azkar
99 Names of Allah: AsmaUlHusna
Learn Arabic Basics Level 1
Muslim Inventions
Islamic TV Live Free
Huda TV .
Peace TV English Live
Islam Channel UK
Zakir Naik Podcast

இவை தவிர, உங்கள் நாளாந்த செயற்பாடுகளை திட்டமிட்டு ஒழுங்குபடுத்த To. Do, S Planner போன்ற அப்ளிகேஷன்களும் இலவச SMS & Call களுக்கு Viber, WharsApp, ChatOn, Google Hangout போன்ற அப்ளிகேஷன்களும் உதவுகின்றன.

நீங்கள் பதிவிறக்கம் செய்யும் அப்ளிகேஷன்களை ஒரு கிளிக் (One Click) செய்வதால் அவை உங்களை உரிய இடத்திற்கு அழைத்துச் செல்கின்றன. உங்கள் பணிகளை இலகுவாக்குகின்றன. இதனால் தான் இன்றைய மொபைல் போன்கள் அப்ளிகேஷன்களால் நிறையும் உலகமாக மாறிக் காட்சியளிக்கின்றன.

ஜே. எம். அஸீம் (நளீமி)
www.azeemzain.org

**சமூக ஊடகங்கள் (Social Media) பற்றி கற்க ஆர்வமாக உள்ளீர்களா? உங்கள் தொழில் மற்றும் கல்வியை சமூக ஊடகங்கள் மூலம் முன்னேற்ற விரும்புகிறீர்களா?**

follow me · You Tube · f SHARE · tumblr. · Blogger · LinkedIn

அப்படியாயின், **Just Media Foundation** நடத்தும்
ஒருநாள் சமூக ஊடக செயலமர்வில் கலந்து கொள்ளுங்கள்
தொடர்புகளுக்கு: 0777 871758, 071 939 2121

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனைய நகரங்களின் அபிவிருத்தி போன்று யாழ்ப்பாணமும் மாற வேண்டும்

## வடமேல் மாகாண சபை வேட்பாளர் எம். சிராஸ்

யாழ் மக்கள் கடந்த காலத்தைப் போன்று கிணற்றுத் தவளை போல் அல்லாது பதவிக்கு தகுதியானவர்களை தெரிவு செய்ய வேண்டும். நான் எனது பணத்தை செலவு செய்து மக்களுக்கு சேவையாற்றிக் கொண்டிருக்கின்றேன். இத்தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில் எமது மக்களுக்கு இதனை விட மேலாக சேவை செய்ய முடியும். மக்களின் நலனில் அக்கறை உள்ளவர்கள் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதே எனது விருப்பம் என ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி சார்பாக வட மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் தொழிலதிபர் எம். சிராஸ் தெரிவித்தார்.

வட மாகாண சபை தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் தேர்தலுக்கான முன்னாயத்தங்களில் பல கட்சிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. யாழ் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பாக போட்டியிடும் தொழிலதிபரான எம். சிராஸ் எங்கள் தேசத்திற்கு வழங்கிய செவ்வியை இங்கு தருகிறோம்.

**கேள்வி:** *அரசியலில் உங்களது ஈடுபாடு பற்றிச் சொல்ல முடியுமா?*

*பதில்:* நான் ஏற்கனவே மக்கள் சேவை செய்து வருகிறேன். இதனூடாக ஒரு சில விடயங்களை மாத்திரமே மேற் கொள்ள முடிகிறது. ஆனால், அரசியலில் ஈடுபட்டு மக்களுக்கு மென்மேலும் சேவை செய்ய நான் தயாராகியுள்ளேன். தற்போதுள்ள அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றுகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களை அரவணைத்து இன, மத பேதமின்றி சேவை செய்ய வேண்டும் என்பதே எனது நோக்கமாகும். பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ள மக்கள் இதன் மூலம் பயனடைவார்கள் என நம்புகின்றேன்.

தொழிலதிபராக இருந்து யாழ் வறிய மக்களுக்கு அவர்கள் தேவை அறிந்து சமூக பணியில் ஈடுபட்டிருந்தேன். எனக்கும் யாழ் மண்ணுக்கும் நீண்டகால உறவு இருக்கின்றது. அந்தக் காலப்பகுதியில் எனது வேலை தொடர்பாக யாழ் பிரதேசங்களுக்கு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. அந்நிலையில் பலதரப்பட்ட மக்களை சந்தித்து அவர்களின் அடிப்படைத் தேவைகளை எனது சொந்த பணத்தில் பெற்றுக் கொடுத்தேன். மேலும், அதனை முன்னெடுத்து செல்வதற்கு ஜனாதிபதியுடன் இது தொடர்பாக கலந்துரையாடினேன். அந்நிலையில் ஜனாதிபதியின் வேண்டு கோளுக்கு இணங்க வடமாகாண சபை தேர்தலில் யாழ் மாவட்டத்தின் சார்பாக சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடுகின்றேன்.

**கேள்வி:** *வட மாகாணத்தில் என்ன சேவைகள் முன்னுரிமைப்படுத்த வேண்டியுள்ளன.*

*பதில்:* உட்கட்டமைப்பு வேலைகளும் பலகாலங்களாக கைவிடப்பட்ட நிலையில் இருக்கும் கிராமங்களின் அபிவிருத்திகளுமே இன்றைய மக்கள் பிரச்சினைகளாகும். எனவே, இவ்வாறான அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வேலைகளையும் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகளையும் என்னால் இயன்ற வரை செய்து கொடுக்கவே விரும்புகின்றேன்.

இனியும் யாழ் மக்கள் கடந்த காலத்தைப் போன்று கிணற்றுத் தவளை போல் அல்லாது மாகாண சபைக்கு தகுதியானவர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

**கேள்வி:** *மீள்குடியேற்ற நடவடிக்கை தொடர்பாக தங்களின் கருத்து என்ன?*

*பதில்:* யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற்றம் முற்று முழுதாக இடம்பெறவில்லை. ஆயினும், அதற்கான ஏற்பாடுகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அத்தோடு, எமது மக்களின் வீடுகளுக்கான தேவைகளும் புனர் நிர்மாணத்திற்கான தேவைகளும் அதிகம் உள்ளன. அதனை மிக விரைவாக மேற் கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுள்ளேன். குறிப்பாக, தமிழ்-முஸ்லிம் மக்கள் இழந்த உயிரைத் தவிர மற்ற அனைத்தையும் பெற்றுக் கொடுக்க முயற்சி மேற் கொள்ளப்பட வேண்டும்.

**கேள்வி:** *மீள்குடியேறும் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினை தொடர்பாக என்ன நினைகிறீர்கள்?*



*பதில்:* மீள்குடியேறும் மக்களின் தேவை அதிகமாக உள்ளது. பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தற்போது அரசாங்கத்தால் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகிறன. குறிப்பாக, மக்களின் அடிப்படைத் தேவைகளான மின்சாரம், வீதிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் என அபிவிருத்தி நடைபெறுகிறது. இதற்காக, பல மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் அரசாங்கத்தால் மீள் குடியேற்றதிற்கான, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**கேள்வி:** *ஏனைய கட்சிகளின் சார்பாக போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பாக உங்களின் கருத்து அல்லது உறவு நிலை என்ன?*

*பதில்:* ஏனைய கட்சிகள் அவர்களாலான உதவிகளை மக்களுக்கு செய்து வருகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். நான் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதற்காக, ஏனைய கட்சிகளுடன் சுமுகமான உறவை பேணி வருகிறேன். ஆனால், கடந்த கால சூழலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை சில கட்சிகள் வழங்க முன் வராத நிலை இருப்பதாக நான் உணர்கின்றேன். இதனை தவிர்த்து அக்கட்சிகள் மீள்குடியேற்றத்திற்கான பணிகளுக்கு பங்களிப்பு செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

**கேள்வி:** *வட மாகாண சபை தேர்தல் மிக நீண்ட காலத்திற்குப் பின்னர் நடைபெறுகிறது. இத்தேர்தல் குறித்து உங்களது கருத்து என்ன?*

*பதில்:* கடந்த கால யுத்த அனர்த்தங்களால் செயலிழந்திருந்த நிர்வாக கட்டமைப்புகள் தற்போது வழமைக்குத் திரும்புகின்றன. இதற்கென சரியான கட்டமைப்பை ஏற்படுத்த சரியான தலைமை அவசியம். இதனை தெரிவு செய்யத்தான் இத்தேர்தல் அரசாங்கத்தினால் நடத்தப்படுகிறது.

**கடந்த கால யுத்த அனர்த்தங்களால் செயலிழந்திருந்த நிர்வாக கட்டமைப்புகள் தற்போது வழமைக்குத் திரும்புகின்றன. இதற்கென சரியான கட்டமைப்பை ஏற்படுத்த சரியான தலைமை அவசியம். இதனை தெரிவு செய்யத்தான் இத்தேர்தல் அரசாங்கத்தினால் நடத்தப்படுகிறது.**

**கேள்வி:** *அரசாங்கம் மாகாண சபை அதிகாரங்களைக் குறைப்பதற்கான முயற்சிகளை மேற் கொண்டிருக்கின்ற இக்கால கட்டத்தில் நீங்கள் மாகாண சபை தேர்தலில் போட்டியிடுகிறீர்கள். மாகாண சபை அதிகாரங்கள் குறைப்பு தொடர்பாக நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?*

*பதில்:* இதனை ஊடகங்கள்தான் ஊதிப் பெருப்பிக்கின்றன. சரியான நிர்வாகம் அமைகின்ற போது எந்த அதிகார பறிப்பும் சாத்தியப்படாது. இதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு போதும் அனுமதிக்கமாட்டார் என நம்புகிறேன்.

**கேள்வி:** *வட மாகாணம் பல்லின மக்கள் வாழ்கின்ற பிரதேசம். இனங்களுக்கிடையிலான நல்லுறவு இங்கு அவசியமாகின்றது. இந்நிலையில் உங்களது அரசியல் செயற்பாடு எவ்வாறு அமையப் போகிறது?*

**நேர்காணல்: பாறூக் சிகான்**

*பதில்:* என்னுடைய நோக்கம் மக்கள் சமுதாயத்தை முன்னேற்றுவதாகும். அதாவது, மக்களின் நாளாந்த பிரச்சினைகளை தீர்த்து வைத்தல், யாழ் மக்களின் பாரிய பிரச்சினைகளில் ஒன்றான அடிப்படை வசதிகளை உடனடியாக பெற்றுக் கொடுப்பதே எனது முதல் திட்டமாகும். மேலும், சமூக கட்டமைப்பை வலுப்படுத்துவதுடன் அவர்களுக்குள் ஐக்கியத்தை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளினூடே எனதுஅரசியல் செயற்பாடு அமையும்.

**கேள்வி:** *யுத்தத்தினால் இடம் பெயர்ந்து வட மாகாணத்தில் மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்கள் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளை எதிர் கொண்டிருக்கின்றனர். இவர்களது தேவைகளை நிறைவு செய்ய எவ்வாறான நடவடிக்கைகளை மேற் கொள்ளப் போகின்றீர்கள்?*

**பதில்:** மக்களின் தேவை எதுவோ, அதுவே எனது வழியும் கூட. இன்று வரை யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிக்கும் சென்று மக்கள் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்த்து வருகிறேன். சகல மக்களுடனும் இணைந்து எவ்வித வேறுபாடுகளும் இன்றி சேவை செய்கிறேன். இங்குள்ள மக்கள் என்னுடன் அன்பாக பழகுகின்றனர்.

தேர்தலில் வெற்றி பெற்றாலும் பெறாவிட்டாலும் எனது சமூக பணி தொடர்ந்து கொண்டே இருக்கும். எனது குரலும் செயலும் யாழ்ப்பாண மக்களின் அடிமட்ட பிரச்சினைகளையும் அன்றாட பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதாகவே அமையும். இதில் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்கள் என்று பாகுபாடு கிடையாது. போரினால் சகல மக்களும் பாதிக்கப்பட்டனர். தற்போது இவர்களது பிரச்சினைகளை இனங்காண எனது மக்கள் தொடர்பு பணிமனை அமைக்கப்பட்டுள்ளது. நாளாந்தம் அங்கு குவியும் விண்ணப்பங்களைப் பார்த்து மக்களுக்குள்ள பிரச்சினைகளை புரிந்து கொண்டு உடனுக்குடன் சேவை செய்கிறேன். மேலும் செய்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறை விவகாரம்

## குறை யார் பக்கம்

"பிறை கண்டீர்களா?"

"ஆம்"

"பிறைக்கு அரபியில் என்ன சொல்வார்கள் என்று தெரியுமா?"

(இது தேவையற்ற கேள்வி; என்றாலும் நான் சொன்னேன்)

"ஹிலால்... நான் உங்களுடன் அரபியிலும் பேசத் தயார். ஏனெனில், நான் மத்திய கிழக்கில் தொழில் செய்ததால் எனக்கு அரபு தெரியும்"

"நீங்க பொய் சொல்ற மாதிரி வெளங்குது... இன்று பிறை தெரியாதே... வானிலை அவதான நிலையம் சொல்லியிருக்கிறதே..."

"வானிலை அவதான நிலையம் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று அறிவிக்கும். ஆனால், இப்படி ஒன்றும் நடக்காது. இதுதான் வழக்கம். அல்லாஹ்வின் குத்றத்தால் அவனது நாட்டப்படி எதையும் செய்வான்"

"ஓகே... மௌலவியிடம் போனைக் கொடுங்கள்"

அவர்களது கதையில் எம்மை நம்பாமல் நிராகரிக்கும் போக்கே இருந்தது...

ஷவ்வால் மாத தலைப் பிறை சர்ச்சையை அடுத்து கிண்ணியா பிரதேசத்தில் நேரடியாக பிறை கண்டதாகத் தெரிவித்த ஏ.எம்.எம். நஸீர் என்ற சகோதரர் தெரிவித்த கருத்தே இது.

ரமழான் தலைப் பிறை கண்டு பெரும்பாலும் உலகின் பல நாடுகளும் ஒரே நாளில் சந்தோசமாக நோன்பை ஆரம்பித்தன. வழமைக்கு மாறாக, இம்முறை பெருநாள் பிறை சர்ச்சைக்கு முடிவு வந்து விடும் என்ற நம்பிக்கையில் இம்மியளவும் சந்தேகம் இருக்கவில்லை.

ஆனால், 2013.08.07 புதன் அன்று கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்த சகோதரர்கள் ஷவ்வால் மாத தலைப் பிறையைக் கண்டதை அடுத்து அத்தகவலை கொழும்பு பெரிய பள்ளிவாசலும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பிறைக் குழுவும் ஏற்றுக் கொள்ள மறுத்ததினால் இம்முறை நோன்புப் பெருநாள் 'கலபல' யானது.

பிறை விவகாரம் குறித்து சமூக ஊடகங்களும் பத்திரிகைகளும் சக்கை போட்டு விட்டன. கடந்த வாரம் முழுக்க சும்மா கிடந்த வாய்களுக்கெல்லாம் 'அவல்'தான்.

ஒரு மாதம் புலனடக்கி நோன்பு நோற்ற முஸ்லிம்கள் அந்த நோன்புகள் ஏற்படுத்திய மாற்றங்களையெல்லாம் மறந்து உலமாக்களை திட்டித் தீர்க்கவும் பிரதேச வாதம் பேசவும் பொய்யர்களாக்கவும் தமது முழு பலத்தையும் பயன்படுத்தி செயற்பட்ட நிகழ்வு உண்மையில் வெறுக்கத்தக்கதாகும். இதற்கு யாரெல்லாம் பொறுப்பானார்களோ அவர்கள் நிச்சயம் இறைவனிடம் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

குறித்த தினத்தன்று பிறை கண்டதாக கிண்ணியா பிரதேசத்திலிருந்து வந்த அறிவிப்பை ஏற்றுக் கொள்ள மறுத்த, பெரிய பள்ளிவாசலில் வீற்றிருந்த பிறைக்குழு அதற்கு காரணத்தையும் சொல்லியிருக்கிறது.

ஸ்பெசல் பயான்கள், கட்டுரைகள், விவாதங்கள், விமரிசனங்கள் என பிறைக் குழுவின் அத்தனை விடயங்களையும் கூட்டிக் கழித்து பிழிந்தெடுத்த சாறின் சாரம்சம்:

2013.08.07 புதன் ஆகிய அன்றைய தினம் வெற்றுக் கண்ணுக்கு பிறை தென்பட எந்தவொரு சாத்தியக் கூறும் இல்லை.


பிறை கண்டதாகச் சொன்ன நபர்களின் சாட்சிகள் ஏற்றுக் கொள்ள முடியாதளவு முன்னுக்குப் பின் முரணாக இருந்தன என்பதாகும்.

சரி, இந்த இரண்டு கருத்துக்களிலும் நூறு வீதமும் உடன்படுவோம்!

ஆனால், முதலாவது கருத்துக்கான ஒரு சில கேள்விகளைக் கேட்டு விடுவோம்!

அதாவது, அன்றைய தினம் வெற்றுக் கண்ணுக்கு பிறை தென்படவே மாட்டாது என்பதுதான் முடிவு என்றால் ஜம்இய்யதுல் உலமாவும் பெரிய பள்ளிவாசலும்...

-குறித்த தினத்தில் நாடு முழுவதுமுள்ள முஸ்லிம்களை பிறை பார்க்கும் படி கூறியது எதற்காக?



-பல்வேறு துறைசார் அறிஞர்களின் பொன்னான நேரங்களையெல்லாம் செலவிட்டு பெரிய பள்ளிவாசலில் பிறை மாநாடு நடத்தியது எதற்காக?

-இலங்கை வானொலி முஸ்லிம் சேவையை 'புக்' செய்து இன்னும் கொஞ்ச நேரத்தில் அறிவிக்கிறோம் என்று சொல்லிச் சொல்லி மக்களை இளவு காத்த கிளியாக்கியது எதற்காக?

-புதன் கிழமையன்றே கொழும்பிலிருந்து வானிலை அறிஞர்களை கிழக்கு மாகாணத்துக்கு அனுப்பியது எதற்காக?

...என்றெல்லாம் கேட்டால், பிறை தென்படுகிறதோ இல்லையோ; பிறை பார்ப்பது 'சுன்னத்' என்று பதில் வரும். சாத்தியமற்ற நேரத்திலும் பிறை பார்ப்பது சுன்னத் என்றால் அவ்வாறான நேரத்தில் பிறை தென்பட்டால் அது ஹராமாகுவது எப்படி?

அடுத்தது, பிறை கண்டதாக அறிந்த சகோதரர்களின் சாட்சியங்களில் நம்பிக்கை இல்லாமல் நிராகரித்த விவகாரம்...

இது குறித்து விளக்கமளித்த அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி அவர்கள்:

குறித்த தினத்தில் வெற்றுக் கண்களுக்கு பிறை தென்பட முடியாது. அப்படித்தான் தென்பட்டாலும் குறித்த நபர்கள் பிறை கண்டதாக சொல்லும் நேரத்தில் பிறை மறைந்திருக்கும் என்றும் காலம் தாமதித்தே அறிவிக்கப்பட்டதாகவும் கூறியிருந்தார்.

ஆனால், கிண்ணியா கிளை ஜம்இய்யதுல் உலமாவின் உத்தியோகபூர்வ அறிக்கையில், கிண்ணியாவில் 6:30 மணியளவில் பலர் பிறை கண்டமை ஊர்ஜிதப்பட்டதாகவும் அத்தகவல் 6:58 க்கு கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அப்படியாயின், அதனை காலம் தாழ்த்திய அறிவிப்பு என்று எப்படிச் சொல்வது?

தாம் ஊர்ஜிதமாக பிறை கண்டதன் அடிப்படையில் கிண்ணியா பிரதேச மக்கள் நோன்பு பெருநாளைக் கொண்டாடினர். ஆனாலும், அவர்கள் தம் விருப்பப்படி தன்னிச்சையாக பெருநாள் கொண்டாடவில்லை. கிண்ணியா ஜம்இய்யதுல் உலமாவின் ஏகோபித்த முடிவின் பிரகாரமே பெருநாள் கொண்டாடினர்.

எனவே, கிண்ணியா மக்களை தலைமைத்துவத்துக்கு கட்டுப்படாதவர்கள் என்றும் இயற்கை அனர்த்தங்களின் போதான தேவைகளுக்கு மட்டுமே தலைமைகளை நாடுவதாகவும் வெளியிட்ட கருத்தும் அம்மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

கிண்ணியா மக்களை ஆதாரமற்ற விதத்தில் பொய்யுரைப்பவர்களாக சித்தரிக்கப்பட்டிருந்த அதேவேளை, ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் என்ற பெயரில் பிறிதொருவர் போலியான கையொப்பம் வைத்திருப்பதாக அவப் பெயர் சூட்டப்பட்டமையும் அங்கு விமரிசனத்தை ஏற்படுத்தியது.

ஜம்இய்யதுல் உலமாவின் கிண்ணியா கிளைத் தலைவராக இருந்த மௌலவி ஏ.ஆர். நஸார் (பலாஹி) அவர்கள் மேற்படிப்புக்காக வெளிநாடு செல்வதை முன்னிட்டு கடந்த 2013 பெப்ரவரி முதல் அவரது உடன்பாட்டில் அவருக்குப் பதிலாக அஷ்ஷெய்க் ஏ.எம். ஹிதாயதுல்லா (நளீமி) தலைவராக நியமிக்கப்பட்டார். குறித்த பிறைத் தீர்மானத்திலும் அவரே கையொப்பமிட்டிருந்தார்.

உண்மை இப்படி இருக்கும் போது, கடந்த 7 மாதங்களாக தமது கிளை ஒன்றின் தலைவர் அப்பதவியிலிருந்து விலகி புதியவர் நியமிக்கப்பட்டுள்ளமையும் அவரின் கையொப்பத்தையும் அறியாத நிலையில் கொழும்பு தலைமைத்துவம் இருந்துள்ளதா, அல்லது அதனை முறைப்படி அறிவிக்காமல் கிண்ணியா தலைமைத்துவம் இருந்துள்ளதா? என்பது ஜம்இய்யதுல் உலமாவினது தலைமையகத்துக்கும் - கிளைக்கும் இடையிலான பிரச்சினை. அதற்காக கிண்ணியாக்காரர்கள் கள்வர்கள் என்ற தொனியில் சமூகத்துக்கு கருத்து போய் சேர்ந்திருப்பது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

பிறை கண்டதாகக் கூறிய ஒரு நபரிடம் விசாரணை நடத்திய பிறைக் குழு, "நீங்கள் கண்ட பிறையை ஏற்றுக் கொள்ள முடியாது" என்று கூறியதும் ஆவேசமடைந்த அவர், "கடந்த காலங்களிலும் கிண்ணியாவில் கண்ட மூன்று பெருநாட்களுக்கான பிறை -யை நீங்கள் மறுத்துள்ளீர்கள். கிண்ணியாக்காரர்களை அந்தளவு ஏமாற்றுக்காரர்களாகவும் இளிச்ச வாயர்களாகவுமா கணக்கெடுத்திருக்கிறீர்கள்?" என்ற தொனியில் கேள்வி எழுப்பியிருந்தார்.

**-பஷீர் அலி-**

எனவேதான், இனி ஜம்இய்யதுல் உலமாவின் முடிவுகளை எங்கள் மீது திணிக்க வேண்டாம் என்றும் இனிமேல் சில தீர்மானங்களை நாங்களாகவே எடுத்துக் கொள்கிறோம் என்றும் ஆவேசப்பட்டனர். ஏற்றுக் கொள்ள முடியாத இந்த ஆபத்தான கதைகளுக்கு வழி வகுத்தவர்களே இதற்கு பொறுப்பாளிகள்.

மறுபுறம், முஸ்லிம் சமூகத்தில் இடம் பெறும் சின்னச் சின்ன விஷயங்களையே தூக்கிப் பிடிக்க காத்திருக்கும் இனவாதிகளுக்கு நாமே துடுப்புகளை கொடுத்து விட்ட விவகாரமாகவும் பிறை சர்ச்சை மாறி விட்டது.

எனவே, இனி வரும் காலங்களிலாவது இவ்வாறான சர்ச்சைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து, தீர்க்க சிந்தனையுடன் செயற்பட வேண்டியது தலைமைத்துவங்களினதும் அதற்கு கட்டுப்பட வேண்டியது முஸ்லிம் சமூகத்தினதும் கடமையும் பொறுப்புமாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

ஸகிபவுஸ்
(நளீமி)

# எகிப்திய இராணுவம்:

## வெளிப்படுத்தப்படாத மர்மங்கள்



2011ஆம் ஆண்டு ஜனவரி 25 இல் இடம் பெற்ற புரட்சியின் பின், பழைய இராணுவ அதிகாரிகளிடமிருந்து புதிய இராணுவத் தலைமுறைக்கு நாட்டின் பொருளாதாரத்தையும் அரச இயந்திரத்தையும் நகர்த்துவதில் எகிப்திய இராணுவம் வெற்றி பெற்று விட்டது என கலாநிதி தாரிக் ரமழான் குறிப்பிடுகிறார். அதாவது, எகிப்திய புரட்சியைத் தொடர்ந்து நாட்டின் அதிகாரங்கள் அனைத்தும் இராணுவத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டது. ஒரு வருட காலம் எகிப்திய இராணுவமே எகிப்தின் உயர் அதிகாரபீடமாக செயற்பட்டது. கிட்டத்தட்ட 2012ஆம் ஆண்டு ஜூனில் கலாநிதி முர்ஸி பதவியேற்கும் வரையான காலப் பிரிவில் எகிப்திய இராணுவம் தனது அனைத்து பொருளாதார நலன்களையும் தனது அரசியல் எதிர் காலத்தையும் பாதுகாத்துக் கொள்வதில் கவனமாக செயற்பட்டது. அக்குறிப்பிட்ட காலப் பகுதியில் எகிப்திய இராணுவத்தின் புதிய தலைமுறைக்கு பழைய தலைமுறைதான் 60 வருடமாக சூறையாடிய வாரிசு சொத்துக்களை பாதுகாப்பாக நகர்த்துவதில் முனைப்பாக செயற்பட்டது.

என்றாலும், கலாநிதி முர்ஸியின் வெற்றி ஒரு பேரிடியாக இராணுவத்தின் மேல் விழுந்தது. புதிய அரசு தயாரித்த சட்டயாப்பின் வெற்றியால் தனது நலன்கள் அடித்து நொறுக்கப்படப் போகிறது என்ற விடயம் அவர்களுக்கு தெளிவாகவே புரிய ஆரம்பித்தது. இதனால், மீண்டும் ஓர் இராணுப் புரட்சி மேற் கொள்ளப்பட்டது . இதுவே கடந்த இரண்டு வருட காலமாக எகிப்தில் திரைக்கு பின்னால் நடந்த சுருக்கமான நிகழ்வுகளாகும்.

**எகிப்திய இராணுவத்தின் அரசியல் வரலாறு**

கடந்த 60 வருட காலமாக எகிப்திய இராணுவமே நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியலை தீர்மானிப்பதில் மறைகரமாக செயற்பட்ட சக்தியாகும். வெறும் ஒரு புரட்சியால் மாத்திரம் அதனை களத்திலிருந்து நீக்கி விட முடியாது. அதற்கு நீண்டதொரு ஜனநாயக போராட்டம் அவசியப்படுகிறது. எகிப்தில் அனைத்தும் இராணுவத்திற்கு சொந்தமானது என்ற உணர்வில் தான் எல்லா எகிப்திய ஆட்சியாளர்களும் நிர்வாகம் செய்தனர். அதற்கு காரணம், எகிப்திய ஜனாதிபதிகள் கூட இராணுவ மேலதிகாரிகளாக இருந்தவர்கள் என்பதாகும்.

மறுபுறத்தில், எகிப்திய இராணுவத்தின் சர்வதிகாரத்தையும் அதன் சூறையாடல்களையும் மேற்கு சக்திகள் ஊட்டி வளர்த்தன. அதைப் பாதுகாப்பதற்காக அனைத்து விதமான அரண்களையும் அமைத்துக் கொடுத்தன. சுருங்கச் சொன்னால், மேற்கின் நோக்கில் எகிப்திய இராணுவம் வெறும் ஒரு நாட்டு இராணுவம் அல்ல. மாறாக, மேற்கின் திட்டத்தை மத்திய கிழக்கில் செயற்படுத்துவதற்கான முகவராகவே எகிப்திய இராணுவம் செயற்பட்டது.

1970 களுக்கும் முற்பட்ட காலப் பகுதியில் சோஷலிஸவாதியான இராணுவத் தளபதி அப்துல் நாஸரைக் கொண்டு ரஷ்யா தனது நலன்களை அடைந்து கொண்டது. அதன் பின்னர் போலி லிபரல்வாதிகளான அன்வர் சதாத் மற்றும் முபாரக்கைக் கொண்டு அமெரிக்காவும் இஸ்ரேலும் தனது நலன்களை அடைந்து கொண்டன. 1979 களின் பின்னர்தான் எகிப்திய இராணுவம் மேற்கு சக்திகளால் மிக தீவிரமாக அவதானிக்கப்பட ஆரம்பித்தது. அவ்வாண்டு எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் மத்தியில் இடம்பெற்ற கேம்ப் டேவிட் சமாதான ஒப்பந்தத்தை பொறுத்தவரை, இஸ்ரேலின் இருப்பு அதன் வெற்றியில்தான் தங்கியிருந்தது. இஸ்ரேலுக்கு இராணுவ ரீதியாக சவாலாக உள்ள ஒரே தேசம் எகிப்து மாத்திரமே. எனவே, எகிப்திய இராணுவத்தை தனது கைக்குள் வைத்துக் கொள்வது அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் இன்றியமையாததாகும். இன்னும், இஸ்ரேலும் அமெரிக்காவும் நன்றாகவே புரிந்து வைத்துள்ள ஓர் அம்சம்தான், தனது நலன்களுக்கு மத்திய கிழக்கில் ஓர் அச்சுறுத்தல் வரும் என்றால் அது எகிப்தின் பின் புலத்திலேயே ஏற்படும் என்பதாகும். எனவே, அமெரிக்காவின் உளவுப் பிரிவு உட்பட, அதன் இராணுவம் எகிப்தின் இராணுவத்தை தனிக் கரிசனையோடு நோக்கியது.

அமெரிக்க ஆய்வாளரான கைன்ஸ்

## எகிப்து இராணுவத்தின் மனிதக் கொலை வெறியாட்டம் ஆரம்பம்







கடந்த 40 நாட்களாக இராணுவ புரட்சிக்கு எதிராக இடம்பெற்று வரும் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்காக எகிப்து இராணுவம் மிக மோசமான மனிதப் படுகொலைகளை செய்து முடித்துள்ளது.

இக்கொலை வெறியாட்டத்தின் விளைவாக, (இப்பத்தி எழுதப்படும்வரை) 3000ற்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இத்தகைய மிலேச்சத்தனமான மனிதப் படுகொலைகள் இடம்பெற்ற போதிலும், சர்வதேச சக்திகள் வாய் மூடி இருப்பதுதான் ஆச்சரியமான விடயம். எகிப்திய தற்போதைய இராணுவ ஆட்சியை பலப்படுத்துவதற்கு இராணுவம் எதையும் செய்யத் தயார் என்ற செய்தியை அண்மிய படுகொலைகள் அப்பட்டமாக சுட்டிக் காட்டின. மிகவும் கவலை தரும் விடயம் என்னவென்றால், ஏற்கனவே எகிப்தின் இராணுவ அதிகாரத்திற்கு அனுமதி வழங்கிய கட்சிகள் இராணுவத்தின் பாசிஸ் செயற்பாடுகள் நடந்து முடிந்த பின்னர்தான் தமது தவறை உணரத் துவங்கியுள்ளன.

நடந்து முடிந்த இராணுவத்தின் கொலை வெறியாட்டத்தில் பல இஸ்லாமியவாதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் முன்னணி தலைமைகள் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் பிரதித் தலைவர் கைரத் சாதிரின் மகள் மற்றும் மருமகன் மற்றும் இஃவான்களின் அரசியல் பிரிவுத் தலைமைகளில் ஒருவரான கலாநிதி பல்தாஜியின் மகள் போன்றோர் கொல்லப்பட்டனர்.

இராணுவத்தின் இந்த கொலை வெறியாட்டம் மனிதத்தின் அனைத்து விழுமியங்களையும் தாண்டி இடம்பெற்றுள்ளமை இன்னொரு முக்கியமான அம்சமாகும். இராணுவம் தனது குற்றங்களை மறைக்கும் நோக்குடன் அனைத்து உடல்களையும் எரித்து விடும் செயற்பாடுகளில் இறங்கியுள்ளது. இந்த கொலைக் களத்தை எகிப்து வரலாற்றில் ஒரு கருப்பு தினமாக பிரகடனம் செய்யுமாறு உலக இஸ்லாமிய அறிஞர்கள் மன்றத்தின் தலைவர் கலாநிதி யூசுப் அல்கர்ளாவி வேண்டுகோள் விடுத்துள்ளார். இன்னும் கத்தார் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் அரசுகள் இக்கொலைகளை வன்மையாக கண்டிப்பதாக அறிக்கை விடுத்துள்ளன.

அத்துடன் எகிப்தின் இடைக்கால அரசுக்கு ஆதரவளித்த முஹம்மத் பராதி கொலைக் களத்தை கண்டிக்கும் முகமாக பதவி விலகியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இராணுவ புரட்சிக்கு எதிராக களமிறங்கியுள்ள இஸ்லாமியவாதிகள் வெள்ளியன்று (16.08.2013) மீண்டும் நாங்கள் களமிறங்குவோம் என குறிப்பிட்டுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலொக் என்பவரின் அமெரிக்க-எகிப்திய இராணுத் தொடர்பு என்ற தலைப்பிலான ஆய்வில், 1990-1991 களில் அமெரிக்க இராணுவம் எகிப்திய இராணுவத்தை ஆய்வு செய்வதற்கென்றே தனி இராணுவ ஆய்வாளர்களை எகிப்துக்கு அனுப்பியது என்ற ஒரு தகவலை குறிப்பிடுகிறார். இன்னும் அவ்வாய்வாளர்கள் எகிப்திய இராணுவத்தின் இலக்கு, அதன் கட்டமைப்பு, அதன் இராஜதந்திர தொடர்புகள் மற்றும் அதன் அதிகாரிகளது வெளியுறவு எப்படியிருக்க வேண்டும் என்பதை மிக இரகசியமாக எகிப்திய இராணுவத்தின் சிந்தனையில் பதித்தது என கைன்ஸ் மேலும் குறிப்பிடுகிறார்.

வியப்புக்குரிய விஷயம் என்னவென்றால், எகிப்திய இராணுவத்திற்காக அமெரிக்கா தயாரித்த கொள்கையின் படி, எகிப்திய இராணுவமே அரசை விட சர்வதேசத்துடன் உறவுகளைப் பேண வேண்டும். மறுபுறத்தில், எந்தவொரு மேற்கு நாடும் எகிப்தின் அரசை விட இராணுவத்துடன் உறவைப் பேண வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன், எகிப்திய இராணுவம் எவ்வித வெளி அச்சுறுத்தல்களையும் பற்றி சிந்திக்காமல் தனது நலன்களை பெருக்கிக் கொள்வதைப் பற்றி முழுமையாக கவனம் செலுத்த வேண்டும் என்பதும் தெளிவாக வரையப்பட்டிருந்தது. இதன் காரணமாகவே, அமெரிக்க இராணுவ அதிகாரிகளது பரிபாஷையில் எகிப்திய இராணுவம் ஒரு சாம்ராஜ்ஜியம் (Egypt military empire) என அழைக்கப்படுகிறது. இந்த கொள்கையை செயற்படுத்துவதற்காக அமெரிக்கா 1979 முதல் எகிப்திய இராணுவத்திற்கு 1.3 மில்லியன் டொலர்கள் பெறுமதியான இராணுவ உதவிகளை தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது. இன்று வரை 60 மில்லியன் டொலர்கள் எகிப்திய இராணுவத்திற்காக செலவளிக்கப்பட்டு விட்டன.

**எகிப்திய இராணுவமே எகிப்தின் 40 வீதமான சொத்துக்களை வைத்துக் கொண்டுள்ளனர். கேஸ் கம்பனிகள், பெரும் நிலங்கள், சுத்தமான நீர் உற்பத்திக் கம்பனிகள், ஹோட்டல்கள், விடுதிகள், மற்றும் கார் இறக்குமதி ஏஜண்டுகள் போன்றவை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. மேலும், எகிப்தின் முன்னணி 35 கம்பனிகள் முழுமையாக இராணுவ அதிகாரிகளின் உரிமையின் கீழே உள்ளன. எகிப்தில் காணப்படும் பல கால்பந்தாட்ட மைதானங்களை இராணுவ அதிகாரிகளே சொந்தமாக வைத்துக் கொண்டுள்ளனர்.**

அமெரிக்காவில் இராணுவ உபகரணங்களை உற்பத்தி செய்யும் கம்பனிகள் எகிப்திய இராணுவத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி, அமெரிக்க அரசு வழங்கும் டொலர்களுக்கு அமெரிக்க கம்பனிகளிடமிருந்தே ஆயுதங்களை எகிப்திய இராணுவம் தருவித்துக் கொள்ள வேண்டும். இதற்காக அமெரிக்க கம்பனிகள் எகிப்திய இராணுவத்திற்கு பல்வேறு சலுகைகளையும் வழங்குகிறது. இதுவரை கொடுக்கப்பட்டுள்ள டொலர்களில் 40 மில்லியன் டொலர்களுக்கும் மேற்பட்ட தொகை, மீண்டும் அமெரிக்காவிற்குள்ளேயே திரும்பிச் சென்றுள்ளது என அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. ஏனைய பல கோடி டொலர்களை இராணுவ மேலதிகாரிகள் சுதந்திரமாக தனது சொந்த சொத்தாக மாற்றிக் கொண்டுள்ளனர்.

1980 களின் பிற்பகுதியில் நடைபெற்ற இரகசிய பேச்சுவார்த்தைகளின் படி, முபாரக் அரசு எவ்வித யாப்பு மாற்றங்கள் செய்தாலும் எகிப்திய இராணுவ மேல் அதிகாரிகள் தங்களது சொத்துக்களை பேணிக் கொள்வதில் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் மற்றும் அவை எவ்வித விசாரணைக்கும் உட்படுத்தப்படக் கூடாது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

எகிப்திய இராணுவத்தின் இன்னொரு மறைக்கப்பட்ட பக்கத்தை ஆதாரத்துடன் ஆய்வாளர்கள் தோலுரித்துக் காட்டுகின்றனர். அதாவது, எகிப்திய இராணுவமே எகிப்தின் 40 வீதமான சொத்துக்களை வைத்துக் கொண்டுள்ளனர். கேஸ் கம்பனிகள், பெரும் நிலங்கள், சுத்தமான நீர் உற்பத்திக் கம்பனிகள், ஹோட்டல்கள், விடுதிகள், மற்றும் கார் இறக்குமதி ஏஜண்டுகள் போன்றவை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. மேலும், எகிப்தின் முன்னணி 35 கம்பனிகள் முழுமையாக இராணுவ அதிகாரிகளின் உரிமையின் கீழே உள்ளன. எகிப்தில் காணப்படும் பல கால்பந்தாட்ட மைதானங்களை இராணுவ அதிகாரிகளே சொந்தமாக வைத்துக் கொண்டுள்ளனர்.

அவர்கள் தங்களது பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக, பல இராணுவ முகாம்களிலும் இராணுவ சிப்பாய்களும் தங்களது பொருட்களை மாத்திரமே வாங்கி உபயோகிக்க வேண்டும் என உத்தியோகபூர்வமற்ற சட்டங்களை இராணுவத்தினுள் செயற்படுத்துகின்றனர். இதனோடிணைந்த வகையில் குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு அம்சம்; எகிப்திய இராணுவத்தின் பல்லாயிரக்கணக்கான சிப்பாய்கள் உயர் இராணுவ அதிகாரிகளது கம்பனிகளிலும் உற்பத்திசாலைகளிலும் தொழிலுக்காக அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பாதுகாப்பு அமைச்சு இராணுவ அதிகாரிகளாக கருதி, மாதாந்த சம்பளம் வழங்குகிறது. எனவே, உயர் அதிகாரிகள் அச்சிப்பாய்களை இலவசமாக தங்களுக்கு கீழால் வேலைக்கு அமர்த்துகின்றனர். எகிப்தின் சர்வதிகாரியாக இருந்த முபாரகின் காலத்திலேயே இராணுவத்தின் பொருளாதார பலம் சட்டவிரோதமாக அதிகரித்தது. அதற்கான பிரதான காரணம், இராணுவத்திலிருந்து தனக்கெதிராக இராணுவ புரட்சி இடம்பெறக் கூடாது என்பதற்காக முபாரக் உயர் இராணுவ அதிகாரிகளை 50 வயதிலேயே ஓய்வு வழங்கி, பல பொருளாதார நலன்களை அவர்களுக்கு திறந்து கொடுத்தார்.

மேற்கு நாடுகளுக்கு ஓய்வுக்காக அரச செலவில் பயணிப்பதற்கான ஏற்பாடுகளை மேற் கொண்டார். எகிப்தின் பாதுகாப்பு அமைச்சின் செலவில் ஓய்வு பெற்ற ஓர் இராணுவ அதிகாரி 2011 ஆம் ஆண்டு வரை வருடத்திற்கு பல முறை அமெரிக்காவுக்கு குடும்பத்துடன் ஓய்வுக்காக சென்று வருபவராக இருந்தமை நோக்கத்தக்கது.

உண்மையில், இத்தகைய எகிப்திய இராணுவத்தின் பின்னணியை புரிந்து கொள்ளும் போதுதான் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் எகிப்தின் இராணுவத்திற்கெதிரான போராட்டம் எவ்வளவு ஆழமானது என்ற அம்சத்தை அறிந்து கொள்ளலாம். இஃவான்களின் போராட்டம் எவ்வளவு சவால் மிக்கது என்பதுவும் தெளிவாகிறது.

மிட்ல் ஈஸ்ட் மொனிடா என்ற வெப்தளத்தின் அரசியல் விமர்சகரான தாவுத் அப்துல்லாஹ் எழுதும் போது: இன்று எகிப்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டம் முழு மத்திய கிழக்கையுமே பாதுகாப்பதற்கான போராட்டம். அதில் மக்கள் உறுதியாக நிற்கின்றனர். அவர்களின் உறுதியும் சாத்வீக வழி முறையும் இராணுவத்தை கதிகலங்க வைத்துள்ளது. வளை குடா நாடுகளும் மேற்கும் நினைத்தும் பார்க்காத அளவுக்கு மக்களின் எழுச்சி சீறிப் பாய்ந்து கொண்டிருக்கிறது என்கிறார்.

## பஸர் அல்அஸத்தின் சொந்த மாகாணத்திலிருந்து மக்கள் இடம்பெயர்வு



சிரியாவின் கடலோர நகரான Latakia விலிருந்து 3000 ற்கும் அதிகமான குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபைக் காரியாலயம் தகவல் வெளியிட்டுள்ளது.

Latakia நகரில் உள்ள 30 கிராமங்களில் வசித்து வந்த குடும்பங்கள் இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளதாக மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் (OCHA) தகவல் திரட்டியுள்ளதாக ஐக்கிய நாடுகள் தாபன உதவிப் பேச்சாளர் Eduardo del Buey தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் சிரியாவின் கடலோர மாகாணமான Latakia வில் சிரிய அரச படையினருக்கும் புரட்சிக் குழுவுக்கும் இடையே கடும் சண்டை மூண்டது. இதையடுத்தே இவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இந்த Latakia மாகாணம் ஜனாதிபதி பஸார் அல் அஸதின் சொந்த மாகாணம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஹிரோஷிமா, நாகசாகியின் 68 வது நினைவு தின நிகழ்வில் பெருந்திரளானோர் பங்கேற்றனர்



ஜப்பானில் 2ஆம் உலகப் போரின் போது ஹிரோஷிமா, நாகசாகி ஆகியவற்றில் அமெரிக்கா அணுகுண்டு வீசியதன் 68வது நினைவு தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. 1995ஆம் ஆண்டு நடைபெற்ற உலகப் போரின் போது ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய ஜப்பானிய பிரதேசங்கள் அமெரிக்காவின் அணுகுண்டு வீச்சினால் கடுமையாக பாதிக்கப்பட்டதுடன் ஹிரோஷிமாவில் 1 இலட்சத்து 40 ஆயிரம் பேரும் நாகசாகியில் 70 ஆயிரம் பேரும் உயிர் இழந்தனர். இத்தினத்தின் 68 வது நினைவு தினம் பல இலட்சம் மக்களால் அனுஷ்டிக்கப்பட்டது. இத்தாக்குதலால் உயிர் தப்பியோர், அவர்களது குடும்பத்தினர், அரச அதிகாரிகள், இன்னும் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இப்படுகொலையில் உயிர் இழந்தவர்களை நினைவு கூர்ந்து 1 நிமிட மௌன அஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பங்கேற்ற ஹிரோஷிமா நகர மேயர் பேசுகையில்: அணுகுண்டு என்பது மனித தன்மைக்கு அப்பாற்பட்ட கெடுதலான ஆயுதம். எமது நாடும் மீண்டும் அணு உலையை இயக்கும் முயற்சியை கைவிட வேண்டும் என்று கூறினார்.

அணு சக்தியை அரசு பயன்படுத்துவதற்கு பாதிக்கப்பட்ட அப்பிரதேச மக்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலுடனான சமாதான பேச்சுவார்த்தை வீணான செயல் – ஹமாஸ்



இஸ்ரேலுடனான சமாதான பேச்சுவார்த்தை வெறும் வீணான செயல் என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் அமெரிக்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இஸ்ரேல்-பலஸ்தீன பேச்சுவார்த்தையின் இரண்டாம் சுற்று கலந்துரையாடல் நடைபெற்றன. இதன் விளைவாக 26 பலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் விடுவித்துள்ள நிலையில் பலஸ்தீனின் காஸாவின் ஆதிக்க சக்தியாக காணப்படும் ஹமாஸ் அமைப்பு இப்பேச்சுவார்த்தையை கடுமையாக எதிர்த்து வருகின்றது.

இது தொடர்பாக ஹமாஸின் சிரேஷ்ட உறுப்பினர் மஹ்மூத் சஹ்ரா கூறுகையில்; இந்த வீணான பேச்சுவார்த்தையை நாம் எதிர்க்கிறோம். சர்வதேச சமூகத்திடம் நல்ல பிள்ளையாகக் காட்டுவதற்கே இஸ்ரேல் இந்த பேச்சுவார்த்தையை பயன்படுத்துகிறது எனத் தெரிவித்தார்.

அதேநேரம் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸிற்கு, இஸ்ரேலுடனான சமாதான பேச்சுவார்த்தைக்கு எந்த அதிகாரமும் இல்லை என ஹமாஸ் தெரிவித்திருப்பதுடன் இஸ்ரேல் சட்டவிரோத குடியேற்றங்களை மேற் கொண்டு வருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இவ்வார சிந்தனைக்கு**

**தயக்கத்தை தவிர எந்தப் பழக்கமும் இல்லாத மனிதனை விட மிகப் பரிதாபகரமான ஒருவன் இருக்க மாட்டான்**

-வில்லியம் ஜேம்ஸ்-

# வெற்றியின் ரகசியம்;
## சுய மதிப்பீடு


வெற்றியின் ரகசியத்தை அறிந்து கொள்வதற்கு முன், உங்களின் உள் மனதை அறிந்து கொள்வது மிகவும் அவசியம். உங்களைப் பொறுத்த வரையில்;

வாழ்க்கையில் வெற்றி என்பதற்கு என்ன அர்த்தம்?

யார் வெற்றி பெற்றதாக நீங்கள் கருதுகிறீர்கள்?

என்ற கேள்விகளுக்கு தெளிவான பதில் இருக்க வேண்டும்.

நீங்கள் வெற்றி பெறுவதற்கு தேவை கல்வியா, பணமா,



பதவியா, புகழா, அந்தஸ்தா, மகிழ்ச்சியான உறவா அல்லது எல்லாம் கலந்த கலவையா?

எல்லாம் தேவையென்றால் எது எந்த அளவுக்கு முக்கியம்?

இதில் குழப்பம் என்றால் உங்களைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளுங்கள். வெற்றிப் பாதையில் நாம் கடக்க வேண்டிய முதற் படி, நம்மை நாமே புரிந்து கொள்வது. ஏனென்றால், நம்மைப் பற்றி, நம் மனதில் வரைந்து வைத்துள்ள சுய சித்திரம்தான் ஒரு நாள் நிஜமாகப் போகிறது.

மனித மனம், ஒரு நிலையில் இல்லாத அலைச்சல் கொண்டது. அதை ஒரு நிலைப்படுத்தி, நாம் எப்படிப்பட்ட மனிதர்? நம் வாழ்க்கையில் என்னவெல்லாம் சாதிக்க வேண்டும் என்ற கேள்விகளுக்கு நம்மிடத்தில் தெளிவான பதில் இருக்க வேண்டும்.

நம்மைப் பற்றி புரிந்து கொள்வதற்கு அடிப்படைத் தேவை நம்மை நாம், முழுமையாக நேசிக்க வேண்டும். முதலில் நமக்கு நாம் உண்மையாளக இருக்க வேண்டும். அடிப்படைக் குணங்கள், விருப்பு, வெறுப்பு, எதிர் பார்ப்புகள், தேவைகள் பற்றிய தெளிவு இருக்க வேண்டும். நம் வாழ்க்கை லட்சியம் என்ன, அதை அடைய எதை இழக்க தயாராக இருக்கிறோம்? என்ற கேள்விகளுக்கு நம்மிடத்தில் பதில் தயாராக இருக்க வேண்டும்.

மனதை ஒருநிலைப்படுத்த ஓர் அமைதியான இடத்தில் நம்மைத் தனிமைப்படுத்தி, கண்களை மூடி மெதுவாகவும் சீராகவும் நீண்ட மூச்சை எடுத்து, உடலையும் மனதையும் தளர்த்திக் கொள்ள வேண்டும்.

பின்னர் இறைவனை வழிபடலாம் அல்லது தியானம் செய்யலாம். அதன் பின், கீழ் கண்ட கேள்விகளுக்கு நம் அடிமனதிலிருந்து வரும் உண்மையான பதிலை மனதில் பதிவு செய்ய வேண்டும்.

நான் அடிப்படையில் எப்படிப்பட்ட மனிதர்?

எது நிரந்தர மகிழ்ச்சியையும் துக்கத்தையும் கொடுக்கும்?

மிகவும் பிடித்தது மற்றும் பிடிக்காதது என்ன?

வாழ்க்கையில் வெற்றியடைய என்னவெல்லாம் சாதிக்க வேண்டும்?

என்னைப் பற்றி மற்றவர்கள் என்ன அபிப்பிராயம் வைத்திருக்க வேண்டும்?

என்னுடைய பலம் எது, பலவீனம் எது?

வருங்காலத்தில் யாரைப் போல் ஆக வேண்டுமென்று விரும்புகிறேன்?

மேற் கண்ட கேள்விகளுக்கு பதில்களை ஆராய்ந்து பார்த்து, முரண்பாடான விஷயங்களையும் நடைமுறைக்கு ஒத்துவராத யோசனைகளையும் தவிர்த்து விட வேண்டும்.

அதையே எழுதி வைத்தால் நம்மைப் பற்றியும், நாம் சாதிக்க நினைப்பதைப் பற்றியும், அதற்காக செய்ய வேண்டிய தியாகத்தைப் பற்றியும் தெளிவும் மன வலிமையும் கிடைக்கும். இப்படி எழுதி வைத்ததை பத்திரப்படுத்தி வாழ்க்கையில் குழப்பம், சலிப்பு மற்றும் சோர்வு ஏற்படும் போது அதை எடுத்துப் படித்தால், நிச்சயமாக புத்துணர்வு கிடைக்கும். மன உறுதியும் தெளிவும் பிறக்கும்.

வாழ்க்கையில் என்ன வேண்டுமென்பதில் தெளிவு இருந்தால் மட்டும் போதாது, என்ன தேவையில்லை என்பதிலும் தெளிவு வேண்டும். சிலருக்கு வருடா வருடம் வாழ்க்கையின் லட்சியங்கள் மாறிக் கொண்டே இருக்கும். இதற்கு முக்கிய காரணம், இவர்களுக்கு எந்த லட்சியத்திலும் தீவிரமான பற்று இருப்பதில்லை. மேலும், வெற்றியடைந்த யாரைப் பார்த்தாலும் அவர்களைப் போல வர வேண்டும் என்று, திடீர் ஆர்வம் காட்டுவர்.

குறிக்கோளை நிர்ணயம் செய்யுமுன், நம்மை நம்பியுள்ள குடும்பத்தினரையும் கலந்து ஆலோசிப்பது அவசியம். அவர்களுடைய ஆதரவு இல்லாத போது, நம்முடைய லட்சியப் பாதையில் சறுக்கல் வரலாம். தேவைப்பட்டால் நெருங்கிய உறவினர் மற்றும் நண்பர்களிடத்தில் கருத்துக் கேட்கலாம்.

ஒவ்வொரு நிகழ்வும், இந்த உலகத்தில் இரு முறை நிகழ்வதாக கூறுகின்றனர். ஒன்று, மனத்திரையில்; இன்னொன்று, நிஜத்தில். அதனால், ஒவ்வொரு நாளும் நம் அன்றாட வாழ்க்கையை தொடங்குவதற்கு முன், நாம் என்னவாக வேண்டும் என்பதை மனத்திரையில் பதிவு செய்ய வேண்டும்.

நாம் எந்த நிலையை அடைய வேண்டுமென்று மனதில் ஆழமாக பதிவு செய்கிறோமோ அந்த நிலையை விரைவில் அடைவது உறுதி.

## அறிவுத் துணுக்குகள்


- கைரேகையை வைத்து குற்றவாளிகளை கண்டு பிடிக்கும் முறையை கண்டறிந்தவர் எட்வர்ட் ஹென்றி.
- மீன் தன் வாழ்நாள் இறுதி வரை வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும்.
- பசுமைப் புரட்சி என்று கேள்விப்பட்டிருப்போம். அது இளஞ் சிவப்புப் புரட்சி. அதாவது மருந்து வகைகள் உற்பத்தியை பெருக்குவது ஆகும்.
- நீலப் புரட்சி என்பது மீன் உற்பத்தியை பெருக்குவதும் வெண்மைப் புரட்சி என்பது பால் உற்பத்தியைக் குறிப்பதும் ஆகும்.
- மஞ்சள் புரட்சி என்பது எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை பெருக்குவது ஆகும்.

## துணுக்குச் செய்திகள்

தொகுப்பு: எஸ்.எம். அர்ஷத்தீன்
இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்



வட மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பிரதேசத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு உழைத்து வருகின்ற கிளிநொச்சி மாவட்டம் திருநகர் வடக்கைச் சேர்ந்த தவச்சிறி சாள்ஸ் விஜயரட்ணம் (49) என்ற பெண் சர்வதேச 'என்' (N) சமாதான விருதுக்காக தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். 'என்' (N) சமாதான வலயமைப்பின், இந்த விருது வழங்கும் நடவடிக்கையானது, ஆசிய பிராந்தியத்தில் ஐ.நா. மன்றத்தின் அபிவிருத்தி திட்டத்தின் (UNDP) கீழ் செயற்பட்டு வருகின்றது. இம்முறை 2013 ஆம் ஆண்டுக்கான இந்த சமாதான விருதுக்காக ஆப்கானிஸ்தான், நேபாளம், பிலிப்பைன்ஸ், இலங்கை, இந்தோநேசியா, திமோர் லெஸ்டே ஆகிய நாடுகளில் இருந்து ஆளுமை மிக்க 7 பெண்களும், பெண்களின் சமத்துவத்திற்காக பாடுபட்ட இந்தோநேசியாவைச் சேர்ந்த உதவி அமைச்சராகிய ஆண் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.



இந்தியாவில் கட்டப்பட்ட அணு சக்தியால் இயங்கக் கூடிய முதல் நீர்மூழ்கி கப்பலான, ஐ.என்.எஸ் அரிஹாந்த் கப்பலில் பொருத்தப்பட்டுள்ள அணு உலை இயங்க ஆரம்பித்துள்ளது. பிரதமர் மன்மோகன் சிங் கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி ஐ.என்.எஸ் அரிஹாந்த் கப்பலை வைபவரீதியாக கடற்படையிடம் ஒப்படைத்தார். அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், சீனா, பிரிட்டன் ஆகிய பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் மட்டுமே இத்தகைய அணு சக்தி நீர்மூழ்கி கப்பல்களை இயக்குகின்றன. அதேவேளை, இந்தியா முதன் முறையாக உள்நாட்டில் உருவாக்கிய, விமான தாங்கிக் கப்பல் தனது கன்னிப் பயணத்தை 12 ஆகஸ்ட், 2013 இல் தொடங்கியது. ஐ.என்.எஸ் அர்ஹாந்த் என்ற இந்தக் கப்பல் இந்தியாவின் தொழிநுட்ப முன்னேற்றத்தில் ஏற்பட்டுள்ள முக்கிய மைல் கல் என்று அந்நாட்டு அதிகாரிகள் வர்ணித்துள்ளனர்.



உசைன் போல்ட் ஆடவருக்கான நூறு மீற்றர் ஓட்டத்தில் மீண்டும் உலக பட்டத்தை வென்றுள்ளார். மொஸ்கோவில் நடைபெற்று வரும் உலக தடகளப் போட்டிகளில் இரண்டாம் நாளன்று மழைக்கு மத்தியில் இறுதிப் போட்டியில் ஓடிய அவர் முதலிடம் பெற்று, உலக சாம்பியன் பட்டத்தை மீண்டும் பெற்றுள்ளார். நூறு மீற்றர் ஓட்டத்தை அவர் 9.77 நொடிகளில் ஓடி தங்கப் பதக்கம் வென்றார். இரண்டாவது இடம் அமெரிக்காவின் ஜஸ்டின் கால்டினுக்கு சென்றது. அவர் ஓடிய நேரம் 9.85 நொடிகள். வெண்கல பதக்கத்தை உசைன் போல்ட்டின் சக நாட்டவரான நெஸ்டா கார்ட்டர் வென்றார்.



மூளையில் இரத்த உறைவை ஏற்படுவதை நீக்கும் நவீன ரோபோ கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. விபத்து மற்றும் தாக்குதல் போன்ற சம்பவங்களால் தலையில் காயம் ஏற்படும் போது மூளையில் இரத்த உறைவு ஏற்படுகிறது. அதை அகற்ற அறுவை சிகிச்சை மேற் கொள்ளப்படுகிறது. இந்த நிலையில், புதுமையான முயற்சியாக தற்போது மூளையில் உறையும் இரத்தத்தை அகற்றும் புதிய ரோபோ கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது மூளையின் உட்புறம் மிக ஆழமாக சென்று அங்கு உறைந்து கிடக்கும் இரத்த கட்டிகளை அகற்றுகின்றது. அதற்காக மிக நுண்ணிய ஊசிகள் ரோபோ மூலம் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ரோபோவை அமெரிக்காவின் டென்னிசே மாகாணத்தில் நாஷ்வில்லேயில் உள்ள வாண்டர்பில்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருமன இணைவும் ஆண்-பெண் வித்தியாசமும்

-இப்னு ரஷீத்-

ஆணையும் பெண்ணையும் சமப்படுத்து கின்ற ஒரு முயற்சி 'பெண்ணிலைவாதம்' என்ற பெயரில் இன்று பரவலாக இடம் பெற்று வருகின்றது.

ஆனால், எம்மைப் படைத்த இறைவன் ஆணும் பெண்ணும் வித்தியாசமானவர்கள் என்பதை அல்குர்ஆனில் மிகத் தெளிவாக சொல்லி விட்டான். ஆணை நேரடியாக மண்ணால் படைத்த அல்லாஹ ுத்தஆலா பெண்ணை அந்த ஆணிலிருந்துதான் படைத் தான்.

இது ஆண் சிறந்தவனா, பெண் சிறந்த வளா என்பதற்கான விவாதமல்ல. மாறாக, படைக்கப்பட்ட விதத்திலிருந்தே வித்தி யாசப்படும் இந்த ஆணையும் பெண்ணையும் ஒரே மாதிரி நோக்க வேண்டும் என்பது மனித இயல்புக்கு எதிரான சவாலாகும்.

ஆனால் ஆச்சரியம் என்னவென்றால், ஆணும் பெண்ணும் சமன் என்று கூறிய வர்கள் எல்லாம் பெண்ணின் மானத்தைக் கப்பலேற்றும் வேலையைத் தவிர வேறு எதனையும் செய்யவில்லை என்பதுதான்.

இஸ்லாம் ஆணையும் பெண்ணையும் போட்டி போடுகின்றவர்களாக பார்க்க வில்லை மாறாக, முழுமை படுத்துகின்ற வர்களாகத்தான் பார்க்கிறது. இருவரையும் இஸ்லாம் ஓரிடத்தில் சமப்படுத்துகின்றது. அதுதான் இறையச்சமாகும். இந்த இடத் தில் ஆண்-பெண் வித்தியாசம் இல்லை. யார் அதிக இறையச்சம் உள்ளவராக இருக்கின்றாரோ அவர்தான் அல்லாஹ் வின் பார்வையில் சிறந்தவராவார்.

உடல், உளவியல், அறிவு, உணர்வு ரீதியாக ஆண்களும் பெண்களும் வித்தி யாசப்படுகிறார்கள். வித்தியாசமான இந்த இரண்டு இயல்புகளும் ஒன்று சேரும் போதுதான் மனித வாழ்க்கை முழுமை பெறுகிறது. அதை விடுத்து பெண்களும் ஆண்களைப் போன்று இருக்க வேண்டும்; ஆண்கள் செய்கின்றவற்றை பெண்களும் செய்ய வேண்டும் என்பது அநீதியான கோஷமாகும்.

உலகளவில் பொதுவாகவும் மேற்கில் குறிப்பாகவும் குடும்ப வாழ்க்கை சீரழிந்து போயிருப்பதற்கான அடிப்படைக் காரணம், பெண்கள் ஆண்களின் வேலையை செய்யப் போனதுதான். இதை நான் சொல்ல வில்லை; பெண்ணிலை வாதத்தின் தூண் களில் ஒன்றாக இருந்த LAURA DOYLE என்ற பெண்மணி சொல்கிறார். இரண்டு, மூன்று திருமணங்கள் முடித்தும் அவரது திருமண வாழ்க்கை தொடர்ந்தும் தோல்வி யிலேயே முடிவுறுகிறது. அதன் பின்னர் தான் அவர் அதற்கான காரணத்தை சிந்திக்கிறார். அப்போது ஓர் உண்மை புலப்படுகிறது. நான் ஒரு பெண்ணாக இல்லை. அதுதான் காரணம் என்பதை அவர் கண்டறிகிறார். பின், இன்னொரு திருமணம் முடித்து இன்று வரை தனது கணவனுடன் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தி வருகின்றார். தனது இந்த அனுப வத்தை 'THE SURRENDERED WIFE' என்ற புத்தகத்தில் அவரே எழுதுகின்றார்.

யாராவது திருமணம் முடித்து திருமண வாழ்வில் வெற்றி பெற வேண்டுமாயின் அவர்கள் ஆணும் பெண்ணும் வித்தியாச மானவர்கள் என்ற உண்மையை விளங்கி அந்த வித்தியாசங்களைப் படித்து அதனை தமது வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லாத போது திருமணங்கள் நடக்கும்; ஆனால், இரு மனங்களும் ஒரு நாளும் ஒத்து வாழமாட்டாது.




தயாரிப்பு: சமீலா யூசுப் அலி



# 'கொலை வெறி' சுடிதார்

-ரஸ்மின்-

பெருநாள் சந்தோஷத்தை கழிப்பதற்காக இஸ்லாமியர்கள் புத்தாடை வாங்கும் பட லத்தை நோன்பின் ஆரம்பத்திலேயே துவங் கியிருந்தார்கள். பெருநாளில் புத்தாடை அணிவதை இஸ்லாம் தாராளமாக வரவேற் கின்றது.

ஆனால், பெருநாள் சந்தோஷத்தை கழிப் பதற்காக, ஆடை வாங்குவதாக கூறிக் கொண்டு புனிதமிக்க நோன்பு இறுதிப் பத்தின் புனித மான நேரங்களை வீணடிப்பதை இஸ்லாம் ஒரு போதும் அனுமதிப்பதில்லை.

ரமழானின் இறுதிப் பத்தை எடுத்துக் கொண்டால், ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும் குடும்பத்துடன் இரவு, பகல் பாராமல் ஆடைக் கடைகளில் நிரம்பி வழிந்ததை காண முடிந்தது. இறுதிப் பத்தென்றாலே பெருநாள் ஆடை வாங்கு வதற்குரிய நாட்கள்தான் என்ற ஒரு நிலைப் பாடு மக்கள் மத்தியில் உருவாகியிருக்கிறது.

### கொலை வெறி சுடிதார்தான் எனக்கு வேண்டும்

இதேநேரம் இஸ்லாத்தை படித்து அதன் படி குழந்தைகளை வளர்க்க வேண்டிய பெற்றோர் சினிமாவின் நிழலில் பிள்ளை களை வளர்த்தெடுப்பதன் விளைவு, பெருநாள் ஆடையைக் கூட சினிமாக்காரனின் ஆடை யாக இருக்க வேண்டும் என்று கூறுமளவு நம் பிள்ளைகள் மாறியிருக்கிறது.

பெருநாள் தினம் நெருங்கி விட்டாலே திரைப்படங்களின் பெயர்களிலும் ஹீரோ, ஹீரோனிகளின் பெயர்களில்தான் ஆடை கள் வெளியிடப்படும். மக்கள் சினிமா மேல் வைத்துள்ள மோகத்தை வைத்து வியாபா ரத்தைப் பெருக்குவதற்கான வியாபாரிகளின் யுக்தியிது.

இஸ்லாம் ஏற்படுத்தியுள்ள இரு பெரு நாட்களிலும் பெருநாள் அல்லாத நாட்களிலும் இஸ்லாம் காட்டித் தந்த அடிப்படையில்தான் நமது ஆடைகள் இருக்க வேண்டுமே தவிர, நாம் நினைப்பதைப் போல் மார்க்கத்தை குழி தோண்டிப் புதைக்கும் விதமாக இருக்கக் கூடாது.

மணிக்கட்டு வரை மறைக்க வேண்டிய நமது முஸ்லிம் பெண்மணிகள், முழுக் கையையும் திறந்து, இறுக்கமாக ஆடை அணிந்து, மறைக்க வேண்டிய பகுதிகள் காட்சிபடுமளவுக்கு திரியக் கூடிய நிலையை அன்றாடம் காண முடிகின்றது.

திருமறைக் குர்ஆன் நமக்குச் சொல்லும் அறிவுரையைப் பாருங்கள்:

"விளையாட்டும் வீணும் கவர்ச்சியும் உங்களுக்கிடையே பெருமையடித்தலும் பொருட் செல்வத்தையும் மக்கள் செல்வத்தை யும் அதிகமாக்கிக் கொள்வதும் ஆகியவையே இவ்வுலக வாழ்க்கை என்பதை அறிந்து கொள்ளுங்கள்! (இவ்வுலகின் நிலை) மழையைப் போன்றது. அதன் (காரணமாக முளைத்த) பயிர்கள் (ஏக இறைவனை) மறுப் போருக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. பின்னர் அது காய்ந்து விடுகிறது. அது மஞ்சள் நிறமாக மாறுவதைக் காண்பீர். பின்னர் கூழமாக ஆகிறது. மறுமையில் (தீயோருக்கு) கடும் வேதனையும் (நல்லோருக்கு) அல்லாஹ் விடமிருந்து மன்னிப்பும் திருப்தியும் உண்டு. இவ்வுலக வாழ்வு ஏமாற்றும் வசதிகள் தவிர வேறில்லை" (அல்குர்ஆன்: 57:20)

மேற் கண்ட திருமறை வசனம் உலக வாழ்வின் யதார்த்தத்தை மிகத் தெளிவாக விளக்குகின்றது.

"இவ்வுலக வாழ்க்கை வீணும் விளை யாட்டும் தவிர வேறில்லை. மறுமை வாழ்வு தான்வாழ்வாகும்; அவர்கள் அறியக் கூடாதா?" (அல்குர்ஆன்: 29:64)

"இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும் வீணும் தவிர வேறில்லை. (இறைவனை) அஞ்சுவோருக்கு மறுமை வாழ்வே சிறந்தது; விளங்க மாட்டீர்களா?" (அல்குர்ஆன்: 6:32)

# இரண்டு யூதர்கள்



அபூ ஸாலிஹா

அவர்கள் சாமுவேல் மற்றும் பெஞ்சமின்; நெடுந் தொலைவு சுற்றுப் பயணம் மேற் கொண்டிருந்த இரு யூதர்கள். ஒரு பாலை வனத் தைக் கடந்து செல்லும் போது ஏற்பட்ட கடும் மணற் புயலால் தம் திசையைத் தொலைத்து விட்டனர்.

எங்கு அலைந்து தேடியும் செல்ல வேண்டிய வழி புலப்படவில்லை. கையில் கொண்டு வந்திருந்த உணவும் நீரும் தீர்ந்து விட்டதால் பசியின் பிடியில் சிக்கித் தவித்தனர்.

கிட்டத்தட்ட சுய நினைவை இழக்கும் தறுவா யில், விடிகாலை நேரத்தில் ஒரு குடியிருப்புப் பகுதி கண்ணில் பட்டது; இருவரும் மகிழ்ச்சி யடைந்தனர். தொழுகைக்கான பாங்கு சப்தம் அந்த இடத்திலிருந்து கேட்க, நெருங்கிச் சென்று பார்த்த போது அது ஒரு பள்ளிவாசல் என்பதை அறிந்தனர்.

ஏதோ உணர்ந்தவனாக சாமுவேல் கூறி னான்; பெஞ்சமின், இதோ பார். இது முஸ்லிம் கள் வசிக்கும் பகுதி என்பது நிச்சயம். நாம் முஸ்லிம்கள் என்று நடித்தால் மட்டுமே உணவு கிடைக்கும். எனவே, என் பெயரை முஹம்மத் என்று சொல்லப் போகிறேன் என்றான்.

பெஞ்சமின் இதற்கு ஒப்புக் கொள்ள வில்லை. என் பெயர் பெஞ்சமின்தான். பொய் சொல்லி அவர்களை ஏமாற்றி உண்ண விரும்பவில்லை என்றான்.

களைத்து, தளர்ந்து போய் பள்ளிவாசலுக் குள் புகுந்த இருவரையும் கனிவோடு வரவேற்ற இமாம், அவர்களிருவரின் பெயர் விபரங்களை விசாரித்தார்.

நான் முஹம்மத் என்றான் சாமுவேல்.

நான் பெஞ்சமின், நானொரு யூதன் என்றான் பெஞ்சமின்.

அவர்களின் உருவத்தை வைத்தே பசியில் இருப்பதை அறிந்து கொண்ட இமாம், பள்ளிவாசலின் உட்புறம் திரும்பி உதவியா ளர்களை அழைத்தார்.

தயவு செய்து உடனடியாக பெஞ்சமினுக்கு உணவு கொண்டு வாருங்கள் என்றார்.

அதிர்ச்சியில் உறைந்து போய் உட்கார்ந்தி ருந்த சாமுவேலிடம் இமாம் கூறினார்; முஹம்மத், இது ரமழான் மாதம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

திகைத்துப் போய் நின்றான் சாமுவேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

(9ஆம் பக்கத் தொடர்...)

## நொண்டிக் கால்களானாலும்...

எனவே, இக்கட்சிகளின் தேர்தல் பிரசார பேச்சுகள் பெரும்பாலும் ஜனாதிபதி உங்களுக்கு என்னதெல்லாம் செய்திருக்கிறார். எதிர் காலத்தில் எவற்றையெல்லாம் பெற்றுத்தரவுள்ளார் என்பதைப் பற்றியதாக இருக்குமே தவிர, நாங்கள் என்னவெல்லாம் செய்வோம் என்பதைச் சொல்வதாக இருக்காது. ஏனெனில், இவ்வளவு காலமாக நொண்டிக் கால்களானாலும் சொந்தக் கால்களில் நின்று கொண்டிருந்த இம் மலையக கட்சிகள் இன்று வெற்றிலைக் கால்களில் நின்று கொண்டிருக்கின்றன.

ஆனால் ஒன்று,

மிக மோசமான பொருளாதார நிலையில் இருக்கின்ற போதிலும் வன்னி வாக்காளர்கள் கொள்கை அடிப்படையில் உரிமைகளுக்காக வாக்களித்ததைப் பார்த்து நாடே வியந்து போனது. அந்த உறுதி நுவரெலியாவில் எப்போதும் வரப் போவதில்லை. ஏனெனில், அந்த மக்கள் முன்னர் யானைக்கு வாக்களித்தார்கள். இப்போது வெற்றிலை சின்னத்துக்கு வாக்களிக்கிறார்கள். தமக்காக, தமது அடையாளத்தை வெளிப்படுத்தும் சின்னமொன்றுக்காக வாக்களிக்கும் உரிமை எப்போதோ அவர்களிடமிருந்து பறிக்கப் பட்டு விட்டது. இங்கே வேட்டி சட்டை அணிந்த தமிழர்களை தெரிவு செய்ய முடியும் என்பதோடு இத்தமிழ் வாக்காளர்களின் கடமை முடிந்து போகிறது.

இரத்தினபுரியில், அதாவது சப்ரகமுக மாகாண சபைத் தேர்தலின் போது அனைத்து மலையக தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து. சேவல் சின்னத்தில் போட்டியிட்டன. கேகாலை மாவட்டத்திலும் இரத்தினபுரி மாவட்டத்திலும் இரண்டு தமிழர்கள், இ.தொ.க. வினர் தெரிவாகினர். அனைத்து தமிழ் ஊடகங்களிலும் இந்த குறிஞ்சி தேசமும் கூட இதை பெரிய வெற்றி, திருப்புமுனை, சாதனை என்றெல்லாம் சிலாகித்து எழுதின. அடுத்து வரும் மத்திய மாகாண சபைத் தேர்தலுக்கான முன் வியூகம் என்றெல்லாம் கருத்து வெளியிடப்பட்டது. எனினும், இது வெற்றிக்கான தவிர்க்க முடியாத கூட்டணி என்பதையும் இதை மத்திய மாகாண சபைத் தேர்தலில் தொடர்வது சாத்தியப் படாது என்பதையும் இ.தொ.க. தெரிந்தே வைத்திருந்தது.

எனவே, இனிமேல் மலையக கட்சிகள் எக்காலத்திலும் ஒன்றிணைந்து தமது பலத்தை வெளிப்படுத்தப் போவதில்லை என்பது தெளிவு. எதிர் வரும் பாராளுமன்றத் தேர்தலில் கட்சிகள் இணைந்து நின்று வாக்குக் கேட்டால் பேரம் பேசும் சக்தியாவது கிட்டும். ஆனால், அவ்வாறான ஒரு பொதுத் தளத்தில் இக்கட்சிகள் நின்று வாக்குக் கேட்கும் என்று எதிர் பார்ப்பதற்கில்லை.

ஏனெனில், மலையக அரசியல் தளம், நோக்கம் என்பன முற்றிலும் மாறி விட்டன. அரசியலே இல்லாத அரசியலாக, அடிவருடி அரசியலாக மாற்றம் பெற்று விட்ட மலையக அரசியலை மறுபடி மாற்றி அமைத்து கொள்கை, கோட்பாடு, இலட்சியம் ஆகிய தளங்களில் நின்று செயற்பட வைக்கும் ஆற்றல் கொண்ட அந்த தலைவர் எங்குமே கண்களில் தெரிவதாக இல்லை.

தமது இருப்பை, பணம் செய்யும் மெஷினை, செல்வாக்கு தளங்களை தக்க வைத்துக் கொள்வதற்காக மட்டுமே மலையக கட்சிகள் அனைத்தும் மத்திய மாகாணத்தில் தற்போது களமிறங்கி உள்ளன என்பதைத் தவிர, வேறு பொருத்தமான வியாக்கியானம் கிடையாது.

வெற்றி பெறப்போவது யானையா, வெற்றிலையா? எது நடந்தாலும் மலையக கட்சிகளுக்கு எந்த கவலையும் கிடையாது. வருகிற பணம் வந்து கொண்டிருக்கும்.

## (இராணுவ மயமாகும்)...

(3ஆம் பக்கத் தொடர்)

சிங்களவர் மீது தொடுக்கப்பட்ட இத்தாக்குதல் மனிதாபிமான யுத்தத்தின் மனிதாபிமானமற்ற காட்சிகளை மீளக் கொண்டு வருவதாகவே அமைந்தது. ஊடகவியலாளர்களை விரட்டி விட்டு, மின் விளக்குகளை அனைத்து விட்டு நடத்திய ஒரு பாரிய யுத்தமாகவே இது கருதப்பட்டமையை பார்க்கும் போது எல்.ரீ.ரீ.ஈ. எதிரிகளுடன் எவ்வாறு நடந்து கொண்டிருப்பர் என்பதை கற்பனை செய்ய முடியும் என்றும் அந்த மக்கள் கூறினார்கள். எப்படியோ சில துணிச்சல் மிக்க ஊடகவியலாளர்கள் முழு நிகழ்வுகளையும் படம் பிடித்துள்ளனர்.

இந்த தொழிற்சாலை தனியார்த் துறை பொருளாதார ஜாம்பவானான தம்மிக பெரேராவுக்குச் சொந்தமானது. பட்டியல் படுத்தப்பட்டுள்ள இலங்கையின் கம்பனிகளில் பத்து சதவீதத்துக்கு அவரே சொந்தக்காரர். அரசாங்கத்துக்கு மிகவும் வேண்டியவர். பல சூதுக் கம்பனிகளினதும் உரிமையாளர். சம்பத் வங்கியின் தலைவர். போக்குவரத்து அமைச்சின் செயலாளராகவும் சில காலம் இருந்தவர்.

இராணுவ மயமாகும் இலங்கைக்கு இது ஓர் உதாரணம் மட்டுமே. வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமின்றி, இப்போது எல்லாவற்றுக்கும் இராணுவம் அழைக்கப்படுகிறது. நாட்டின் அபிவிருத்தியை, நகர நிர்மாணத்தைக் கட்டுப்படுத்தும் சக்தியாக இராணுவம் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றமை கண் கூடு. இலங்கை இராணுவம் கடைசி கால யுத்தத்தில் எவ்வாறு நடந்து கொண்டிருக்கும் என்பதற்கு சர்வதேசத்தில் வழங்கும் ஒரு சாட்சியாக இது அமையும் என்றும் கூறப்படுகின்றது.

(11ஆம் பக்கத் தொடர்)

## நட்சத்திரங்களில்...

நோக்கி (The Colossus Telescope) ஒரு மில்லியன் டொலர் செலவில் தயாரிக்கப்பட்டு இன்னும் ஐந்து ஆண்டுகளில் செயற்பாட்டுக்கு வருமாம்.

அல்லாஹ்வின் பிரதான படைப்புகளான மனிதன், மலக்குகள், ஜின்கள் என்பவற்றோடு நாம் அறியாத இன்னும் படைப்புகள் இப்பிரபஞ்சத்தின் எங்காவது ஒரு கோடியில் வாழ்கின்றனவோ என்னவோ அவை பற்றிய சரியான தகவல்கள், நம்பகமான ஆதாரங்கள் இல்லை. இக்கட்டுரை ஓர் ஆய்வு என்ற அடிப்படையில் முன்வைக்கப்பட்டதால் மாற்றுக் கருத்துக்களும் இருக்கலாம்.

(3ஆம் பக்கத் தொடர்)

## கிராண்ட்பாஸ் வன்முறை:...

ஆனானப்பட்ட எல்.எல்.ஆர்.சி (நல்லிணக்க ஆணைக்குழு) அறிக்கையையே குப்பையில் போட்டவர்கள் ஆளும் திரு நாடு எம் நாடு. மஹிந்த சிந்தனையின் அடுத்த ஹஜ் பெருநாள் பரிசாக மாடு களமிறங்கும் என்பதற்கான கனைப்புக்கள் இப்போதே கேட்க தொடங்கி விட்டன.

இந்த கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் விடயத்தில் உண்மையான ஹீரோக்கள் அப்பகுதி முஸ்லிம்கள்தான் என வந்த செய்திகள் கேட்டு சந்தோசமாக இருந்தது. முடியும் மட்டும் எல்லா வகையான போராட்டங்களுக்கும் முகம் கொடுத்த அந்த முஸ்லிம்களின் வீரம் மகத்தானது. அவர்களின் முன்னைய எச்சரிக்கைகளை, முறைப்பாடுகளை முஸ்லிம் தலைவர்களும் கண்டு கொள்ளவில்லைஅரசாங்கமும் கண்டு கொள்ளவில்லை என்பதால் போராட்டம்தான் ஒரே வழி என்ற நிலைப்பாட்டுக்கு அவர்களைக் கொண்டு வந்தது. சபாஷ் கிராண்ட்பாஸ் முஸ்லிம்களே!

முஸ்லிகளுக்கு செய்த இந்த அநியாயங்களுக்காக பொது பல சேனா, சிங்கள ராவணா என்பன பாவ பிராயச்சித்தம் செய்து கொள்ளட்டும்.

(7ஆம் பக்கத் தொடர்)

## கிராண்ட்பாஸ் ...

அப்போதும் பௌத்த கடும் போக்கு காடையர்கள் மூக்கை நுழைத்து அரச மரத்தை வெட்டும் பணிக்கு முட்டுக்கட்டையிட்டனர்.

எனினும், 2012.08.15 அன்று கொழும்பு மாநகர சபை ஊழியர்களினால் குறித்த போதி மரம் முற்றாகத் தறிக்கப்பட்டது.

பள்ளிவாசல் தாக்குதல் இடம்பெற்ற உடனே ஸ்தலத்துக்கு விரைந்து, நிலைமையை அவதானித்து மோதல் நிலையை தவிர்ப்பதில் பங்காற்றிய ஐ.தே.க. யின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், பைரூஸ் ஹாஜி மற்றும் சுமுகமான தீர்வு எட்டப்படும் வரை உழைத்த பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா, அமைச்சர்களான ரிஷாத் பத்யுத்தீன், ரஊப் ஹக்கீம், ஏ.எச்.எம். பௌசி, பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மற்றும் கொழும்பு மேயர் முஸம்மில், அலவி மௌலானா ஆகியோரின் ஒன்றுபட்ட முயற்சி வரவேற்றுகத்தக்கது.

### பொறுப்பற்ற பொலிஸார்

நோன்பு நிறைவடைந்த பின் மஸ்ஜித் தீனுல் இஸ்லாம் பள்ளிவாசலுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்ட நிலையிலேயே காடையர்கள் பள்ளிக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். அப்போது பாதுகாப்பில் கடமையாற்றிய பொலிஸாரினால் தாக்குதல் நடத்தியவர்களை தடுத்து நிறுத்தவோ, அவர்களை கைது செய்யவோ முடியவில்லை. பொலிஸார் பக்க சார்பாக நடந்தனரா அல்லது இது அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட செயலா என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளதுடன் காவல் துறையின் மீது மக்கள் நம்பிக்கை இழக்கும் நிலையையும் தோற்று வித்துள்ளது.

காடையர்கள் தாக்குதல் நடத்தும்போது பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த காட்சிகள் சி.சி.டி.வி. கமராவில் பதிவாகியிருப்பதாகவும் பொலிஸாரின் இத்தகைய பக்கசார்பான நடவடிக்கைகளை வன்மையாக கண்டிப்பதாகவும் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரிஷாட் பத்யுத்தீன் தெரிவித்துள்ளார்.

பள்ளிவாசலை மூடும் படி தடை விதிக்க காடையர்களுக்கு அனுமதி கொடுத்தது யார்? வழமை போன்றே தாக்குதலை கைகட்டி வேடிக்கை பார்த்த பொலிஸார் நாட்டுக்கு அவமானத்தை தேடிக் கொடுத்துள்ளனரே என அஸாத் சாலி தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

### வெலிவேரிய தாக்குதலை மறைப் பதற்கான சதி முயற்சியா?

வெலிவேரியவில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களை மூடி மறைக்கும் நோக்கிலேயே கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக ஐ.தே.க. வின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார். வெலிவேரிய மற்றும் கிராண்ட்பாஸ் தாக்குதல் சம்பவங்கள் அரசாங்க தலைவர்களுக்குத் தெரியாமல் நடந்திருக்க வாய்ப்பில்லை எனக் கூறும் அவர், இத்தாக்குதலுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பும் சொல்ல வேண்டும் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பழைய பள்ளிவாசல் விருத்தி சாத்தியமா?

பழைய பள்ளிவாசல் கட்டிடத்தை தேவைக்கேற்ப விருத்தி செய்து கொள்வதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதுடன் 1.2 பேர்ச்சஸ் நிலப்பரப்பிலுள்ள பள்ளிவாசல் வளாகத்தை 6 பேர்ச்சஸ் அளவில் விஸ்தரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது. குறித்த அரச மரத்துக்கு அருகில் சிங்கள சகோதரர் ஒருவரின் வீடும் அமைந்துள்ளது. அவரது வீட்டுக் காணியையும் அரச மரம் நிற்கும் காணியையும் சேர்த்தே 6 பேர்சர்ஸ் உள்ளடங்குகிறது.

குறித்த சிங்கள சகோதரர் தனது காணியை பள்ளிக்கு வழங்கத் தாயரில்லை எனவும் தெரிவித்துள்ளார். நிலைமை இப்படியிருக்க பள்ளிவாசல் விஸ்தரிக்கப்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

### தாக்கப்பட்டது பள்ளிவாசல் அல்ல களஞ்சியசாலை?

பள்ளிவாசல் தாக்குதல் தொடர்பாக ரீ.என்.எல். தொலைக்காட்சி சேவையில் சுவர்ண சைத்திய வீதி பன்சலை விகாராதிபதி உட்பட மூன்று மத குருமார் மற்றும் முஸ்லிம் தரப்பு சார்பாக மே.மா.சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அஸாத் சாலி, அ.கி.மு. காங்கிரஸின் பொதுச் செயலாளர் வை.எல்.எஸ். ஹமீட் ஆகியோருக்கு மத்தியில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, தாக்கப்பட்ட மஸ்ஜித் தீனுல் இஸ்லாம் பள்ளிவாசல் ஒரு களஞ்சிய சாலையே தவிர, அது பள்ளிவாசல் அல்ல; பள்ளிவாசலுக்கான எந்த ஓர் அடையாளமும் அந்தக் கட்டடத்தில் இல்லை. களஞ்சிய சாலையைக் கட்டுகின்றோம் என்ற பெயரிலேயே அந்த கட்டிடம் நிர்மாணிக்கப் பட்டது. எனவே, தாக்கப்பட்டது பள்ளிவாசல் அல்ல; களஞ்சியசாலையே என மூன்று பிக்குகளும் வலியுறுத்திக் கூறியதோடு, குறித்த பள்ளிவாசல் நிர்வாக சபையின் இரட்டை வேடமே பிரச்சினை இவ்வளவு தூரம் செல்லக் காரணம் எனவும் குற்றம் செலுத்தினர்.

தாக்குதல் நடத்தியவர்கள் யார் என்றே தெரியாது என்றும் அவர்கள் கதையளந்தனர்.

சீ.சி.டி.வி. யில் பதிவாகியிருக்கும் காட்சிகளை பரிசீலித்தால் தாக்குதல் நடத்தியது யார்? சம்பவ இடத்தில் நின்றவர்கள் யார்? அவர்கள் என்ன பேசினார்கள் என்பது எல்லாம் வெளிச்சத்துக்கு வருமல்லவா?

அவர்கள் சொல்வது போல் களஞ்சிய சாலைதான் தாக்கப்பட்டது என்று ஒரு பேச்சுக்கு வைத்துக் கொண்டாலும் அதனைத் தாக்குவதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? அதற்கான அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கியது யார்? சட்டத்தை கையிலெடுத்த காடையர்களின் அடாவடித் தனத்தை சட்டம் கை கட்டி வாய் பொத்தி பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

இதுவரை இலங்கையில் 24 பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டிருக்கிறதே! தாக்கப்பட்ட 24 பள்ளிவாசல்களுக்கும் களஞ்சியசாலைக் கதை போன்று வேறு ஏதும் நியாயம் இருக்கிறதா?

கிராண்ட்பாஸில் முஸ்லிம்கள் காட்டிய எதிர்ப்பும் ஆவேசமும் நெறிப்படுத்தப்படாமல் இருந்திருந்தால் விரும்பத்தகாத அசம்பாவிதங்கள் நிகழ்ந்து பெரும் பூகம்பமே வெடித்திருக்கும்! இன உறவுக்கு தீ மூட்டப் பட்டிருக்கும்! அல்லாஹ் காப்பாற்றினான்.

எனவே, இன உறவுக்கு உலை வைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கும் பொது பல சேனா, ராவணா பலகாய போன்ற கடும் போக்கு அமைப்புகளுக்கும் அவ் அமைப்பின் விஷமத்தனமான பிரசாரங்களை கன்மூடித்தனமாக நம்பி முஸ்லிம்களுடன் போர் தொடுக்க முயற்சிக்கும் கடும் போக்காளர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பல்லவா?

(2ஆம் பக்கத் தொடர்)

## கிராண்ட்பாஸ் பள்ளிவாசல்...

ஆயினும் ஏறத்தாழ மூன்றரை மணி நேரம் இந்த விவகாரம் பற்றி அலசி ஆராயப்பட்ட பின்னர், பள்ளிவாசல் தர்மகர்த்தாவின் இணக்கத்தின் பேரில், பழைய பள்ளிவாசலிலேயே சமய கடமைகளை நிறைவேற்றுவதாக அறிவித்தார்கள்.

எதிர் காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாதிருக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மிக நிதானமாக, சாணக்கியமாக மேற் கொள்ளப்பட வேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்

மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழி பெயர்ப்புத் தொடர்



(தொடர் 20)

(சென்ற இதழ் தொடர்)

நபித் தோழர்கள் அல்லாஹ்வின் தூதருக்கு கட்டுப்படுவதிலும் அவரது சுன்னாவை பின்பற்றுவதிலும் கண்டிப்பானவர்களாக இருந்தும் கூட சிலபோது சூழ்நிலையுடன் தொடர்புபட்ட ஆதாரங்களின் அடிப்படையில் அவரது செயல்களுக்கு முரண்படுபவர்களாகவும் அவர் தடுத்தவற்றை செய்பவர்களாகவும் இருந்தனர்.

முதலாவது, தூதரது ஏவலோ, விலக்கலோ, கடமையையோ, கட்டாயத்தையோ காட்டமாட்டாது என கண்ட போது, அவர்கள் அவ்வாறு நடந்து கொண்டனர். அடுத்தது, நபிகளாரது செயல் அவருடன் கலந்துரையாடுவதற்குரிய அல்லது முரண்பட முடியுமான, அவரது பகுத்தறிவின் மூலம் முன்வைக்கப்பட்ட உலக விவகாரங்களில் ஒன்று என அறிந்த போது, அவர்கள் முரண்பட்டனர். மூன்றாவதாக, சமூகத்தின் தலைவர் நாட்டின் தலைமை என்ற வகையில் நபிகளார் செய்த விடயங்களில் அவர்கள் முரண்பாடாக நடந்து கொண்டனர். ஏனெனில், அவை அச்சந்தர்ப்பத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டவையாகும். மாற்றமாக அவை அனைத்து சமூகத்திற்கும் மறுமை நாள் வரைக்குமான, நிரந்தரமான, பொதுமையான சட்டவாக்கமாக அமையாதவையாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நபித் தோழர்களை 'விசால்' அமைப்பில் (முதல் நாள் நோன்பைத் திறக்காமல் மறு நாள் நோன்பை தொடர்ந்து நோற்றல்) நோன்பு நோற்பதை தடுத்ததையும் இதற்கு (நபிகளாருடன் முரண்பட்டமைக்கு) உதாரணமாக சொல்ல முடியும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அதை தடுத்தும் நபித் தோழர்கள் அல்லாஹ்வின் தூதர் தம்மீது கொண்ட இரக்கத்தின் காரணமாகவே அப்படித் தடுத்திருக்கின்றார் என்ற எண்ணத்தில் விசால் அமைப்பில் நோன்பு நோற்றனர்.

நபித் தோழர்கள் சிலபோது எண்ணத்தின் அடிப்படையில் எடுத்த நிலைப்பாடுகள் தவறாக அமைந்தன. பிரயாணத்தில் கஷ்டத்தின் போதும் நோன்பை விடாதிருந்ததை இதற்கு உதாரணமாக சொல்ல முடியும். அவர்கள் குறித்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பாவிகள் என்று கூறினார். (ஸஹீஹ் முஸ்லிம்)

மேலும், மதீனாவின் விளைச்சலில் மூன்றிலொரு பகுதியைக் கொடுத்து நுத்பான் கோத்திரத்தாருடன் சமாதானம் செய்து கொள்ளவும் அதன் முற்றுகையிலிருந்து படையினை விலக்கிக் கொள்ளவும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நாடிய போது தோழர்கள் அதற்கு முரண்பட்டதையும் இங்கு சுட்டிக்காட்ட முடியும். குறிப்பாக, இரண்டு 'ஸஃது'களும் அதனை ஏற்க மறுத்தனர்.

**நபித் தோழர்கள் சிலபோது எண்ணத்தின் அடிப்படையில் எடுத்த நிலைப்பாடுகள் தவறாக அமைந்தன. பிரயாணத்தில் கஷ்டத்தின் போதும் நோன்பை விடாதிருந்ததை இதற்கு உதாரணமாக சொல்ல முடியும். அவர்கள் குறித்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பாவிகள் என்று கூறினார். (ஸஹீஹ் முஸ்லிம்)**

"யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் முரணாக நடந்து கொள்ளும் வகையில், நரை மயிருக்கு சாயம் பூசுங்கள்" (ஸஹீஹ் புகாரி) என்பது நபிகளாரது கட்டளையாக இருந்தும் கூட நபித் தோழர்களில் பலர் நரை மயிருக்கு சாயம் பூசுபவர்களாக இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உயிருடன் இருக்கும் போது நபித் தோழர்கள், வஹியாக அமைந்தவை எவை? வஹியாக அமையாதவை எவை? கடமையானவை எவை? கடமையாக அமையாதவை எவை? என்பன பற்றி நபிகளாரிடம் வினவுபவர்களாக இருந்தனர்.

பத்ர் யுத்தத்தில் ஹப்பாப் பின் முன்திரின் நிலைப்பாட்டை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பத்ரில் தங்கிய போது "அல்லாஹ்விடத்திலிருந்து வந்த வஹியின் அடிப்படையில் இங்கு தங்குகின்றீர்களா? அல்லது சூழ்ச்சி, போர் தந்திரம் மற்றும் உங்கள் அறிவின் அடிப்படையில் எடுத்த முடிவின் பிரகாரம் இங்கு தங்குகின்றீர்களா? என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் அவர் வினவினார்" (ஸீரத்து இப்னி ஹிஷாம்)

முகீசுடனான பரீராவின் நிலைப்பாட்டிலும் இதனை மிக தெளிவாகக் காணலாம். இச்சம்பவத்தை முந்தைய இதழ்களிலும் நாம் குறிப்பிட்டுள்ளோம்.

கழுதை இறைச்சியை சாப்பிட வேண்டாம் என கைபர் யுத்தத்தின் போது நபிகளார் பிறப்பித்த தடை உத்தரவை ஹப்ருல் உம்மா, தர்ஜுமானுல் குர்ஆன் அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட ஒரு நலனுக்காக நபிகளாரால் இடப்பட்ட தடையாக கருதுகின்றார். பிரயாணம் செய்வதற்குரிய வாகனமாக கழுதைகள் அவர்களுக்குத் தேவைப்பட்ட நிலையில் அவற்றை பெருமளவில் அறுத்து சாப்பிட்டால் கழுதைகள் அழிந்து விடும் என்பதனால் கழுதைகளை அழிவிலிருந்து பாதுகாப்பதற்காகவே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்கள் என்பது இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களது வாதமாகும்.

---

(சென்ற இதழ் தொடர்)

# இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவம்

சட்டத்தரணி ஸகி இஸ்மாயில்



இலங்கை முஸ்லிம்கள் தமது அடையாளத்தின் அடிப்படையாகக் கருதுகின்ற சமய கடமைகளை அனுஷ்டிப்பதிலும் பொருளாதாரத்தை அனுபவிப்பதிலும் எவ்வித தடைகளும் ஏற்படாத வரையில் தமது சமூக அரசியல் குறித்து பெரிதாக கரிசனை கொண்டது கிடையாது. இதை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட சிங்கள அரசுகள் இவ்விரு விடயங்கள் குறித்தும் முஸ்லிம் தலைமைகளை திருப்திப்படுத்தியதன் மூலமாக தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டன. தமிழ் மக்களின் கோரிக்கையாக இருந்த அரசியல் சுயாட்சி என்பதை நிராகரித்த சிங்கள அரசுகள் முஸ்லிம்களை தமது அரசாங்க நடவடிக்கைகளில் தந்திரோபாயமாக இணைத்துக் கொள்வதன் மூலம் முஸ்லிம்களை தனித்துவம் மிக்க ஓர் இனமாக வெளிக் கொணர்ந்தன. சிங்கள அரசின் இத்தகைய நடவடிக்கைகளை 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த தமிழ் தலைமைகள் அப்போது தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் இடம்பெற்ற பிரிவினைக்கு அடிப்படைக் காரணியாக கருதினர். வடக்கு, கிழக்கு மாகாண தமிழ்-முஸ்லிம் இனங்களுக்கிடையே வன்முறைகள் தீப்பற்ற இரு சமூகங்களுக்கும் இடையிலிருந்த பரஸ்பர ஒற்றுமை சீர்குலைத்ததுடன் இது மக்களின் வாழ்விலும் மீளாத் துயரங்களை ஏற்படுத்தியது.

### கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் தலைமைகளும் அவர்களின் தெரிவும்

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் 1980ஆம் ஆண்டில் முஸ்லிம் காங்கிரஸின் தோற்றம் முக்கியத்துவம் வாய்ந்தது. இக்கட்சியானது அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னாவை பின்பற்றுகின்ற கட்சி என்றும், இலங்கை முஸ்லிம்களுக்கு இஸ்லாத்தின் அடிப்படையில் சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகளை வென்று கொடுக்க அது பாடுபடும் என்றும், இதன் மூலம் முஸ்லிம் மக்கள் மத்தியில் இஸ்லாம் மார்க்கம் நிலைப்படுத்தப்படும் என்றும் இக்கட்சி தனது பிரச்சார நடவடிக்கைகளில் முன்னெடுத்துச் சென்றது. இத்தகைய உணர்ச்சி மிக்க பிரச்சாரமானது அன்று வரை அரசியல், பொருளாதார காரணிகளால் ஒடுக்கப்பட்டுக் கிடந்த வடக்கு-கிழக்கு முஸ்லிம்களை வெகுவாக கவர்ந்தது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸானது தன்னை இலங்கை முஸ்லிம்களின், குறிப்பாக வடக்கு-கிழக்கு முஸ்லிம் மக்களின் ஏக குரலாக வெளிக்காட்டிக் கொண்டதுடன் தனது அரசியலை சுதந்திர கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய பெரும்பான்மை சிங்கள கட்சிகளுடன் கூட்டாக முன்னெடுத்து வந்தது. இத்தகைய சிங்கள அரசுடனான முஸ்லிம் காங்கிரஸின் கூட்டு அரசியலும் அதன் வழியேயான அரசியல் உபாயங்களும் விடுதலைப் புலிகளுக்கு பல நெருக்கடிகளை உருவாக்கியதால் முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவரான மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியலில் பெயர் குறிக்கப்பட்டார். இத்தகைய சமய மற்றும் இன அடையாளம் குறித்த இடர்பாடுகளுக்கு மத்தியில் முஸ்லிம் காங்கிரஸானது 1988 இல் இடம்பெற்ற மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டது. என்றாலும், இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது முஸ்லிம் காங்கிரஸ் அவ்வொப்பந்தம் பற்றி தனது அதிருப்தியை வெளிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்தேர்தலில் அஷ்ரஃப் அவர்கள் வடக்கு-கிழக்கு மக்களின் வாக்குகளை வென்று போதியளவு ஆசனங்களை தனதாக்கிக் கொண்டார்.


1990ஆம் ஆண்டில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வலுக்கட்டாயமாக துரத்தியடிக்கப்பட்டனர். 1991ஆம் ஆண்டில் பள்ளிவாசல்களில் தொழுது கொண்டிருந்த நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கொன்று குவிக்கப்பட்டனர். வடக்கு-கிழக்கில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் அம்பாரை ஆகிய மாவட்டங்களில் முஸ்லிம்களின் சொத்துக்களும் உரித்துக்களும் சூறையாடப்பட்டன. இத்தகைய வன் செயல்கள் முஸ்லிம், தமிழர்கள் மத்தியில் சமய மற்றும் இன குரோதங்களை மேலும் வலுப்படுத்திற்று. எனவே, இவ்வன் செயல்கள் முஸ்லிம் காங்கிரஸ் தனது அரசியலில் வாக்கு வங்கியினை நிரப்பிக் கொள்ள ஏதுவாக அமைந்தன எனலாம்.

முஸ்லிம் காங்கிரஸ் தமக்கு கிடைத்த அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி சிங்கள அரசுடன் கூட்டு அரசியலை உருவாக்கிக் கொண்டதன் மூலமாக முஸ்லிம்களுக்கு குறிப்பிடக் கூடிய அளவில் அபிவருத்தி மற்றும் தொழில் நியமனங்களை பெற்றுக் கொடுத்தது. தலைவர் அஷ்ரஃப் அவர்களும் கட்சி பிரதிநிதிகளும் அரசாங்கத்தில் முக்கிய அமைச்சுக்களுக்கும் பதவிகளுக்கும் நியமிக்கப்பட்டனர்.

முஸ்லிம் காங்கிரஸின் இத்தகைய அதிவேக பயணமானது பல்வேறு இடர்களுக்கு மத்தியில் மேற் கொள்ளப்பட்டதால் அது நெடுங்காலத்திற்கு நீடிக்கவில்லை. அஷ்ரஃப் அவர்களின் மரணத்தின் பின் அதன் நடவடிக்கைகள் நிச்சயமற்றதாகவே இருந்து வந்தது. அஷ்ரஃப் அவர்களை அடியொட்டியதாக ரஊப் ஹக்கீம் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாலும் கிழக்கு முஸ்லிம்கள் மத்தியல் கட்சி குறித்தும் அதன் நடவடிக்கைகள் குறித்தும் நம்பகமான கருத்தொன்று ஏற்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஆரோக்கிய தேசம்

▲ தொகுப்பு: எஸ். பாயிஸா அலி ▲

# தனியாக இருக்கும் போது மாரடைப்பு வந்தால் என்ன செய்யலாம்?

வளர்ச்சியடைந்த நாடுகளில் வாழ்வோர் அவசர மருத்துவ சேவையை அழைப்பதன் மூலம் உடனடியாக வைத்திய உதவிகளைப் பெறுகின்றனர். இவ்வசதி எமது நாட்டில் போதியளவு இல்லாதிருப்பதால் உடனடியாக நாம் ஏதாவது உபாயம் செய்து வைத்திய உதவி கிடைக்கும் வரை இருதயத்தை செயல் பெறச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் வாழ்கின்றோம். அதற்கான ஒரு யுக்தியை வைத்திய நிபுணர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

## மாரடைப்பு ஏற்படுவதை அறிந்து கொள்வது எப்படி?

உலகளவில் பெரும்பாலானோரின் மரணத்திற்கு மாரடைப்பே முதற் காரணம். துரதிஷ்டவசமாக மாரடைப்பு ஏற்படும் போதெல்லாம் இறப்பவர்கள் அதிகமாக தனியாகவே இருந்திருக்கின்றார்கள்.

இரத்த நாடிகள் கொண்டு செல்லும் இரத்தத்தில் இருந்து இதயம் ஒக்சிசனையும் ஊட்ட சத்துக்களையும் பெறுகிறது. இந்த இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டால் இதய தசைகள் இரத்தம் கிடைக்கப் பெறாமல் இறக்கின்றன. இதுவே மாரடைப்பு எனப்படுகிறது. மாரடைப்பின் தீவிரத் தன்மை இதய தசைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்பைப் பொறுத்து அமைகிறது.

இறந்த தசைகள் இதயத்தின் இரத்தம் செலுத்தும் திறனைக் குறைத்து அதன் செயற்பாட்டை வெகுவாக பாதிக்கலாம். பாதங்களில் வியர்த்தல் மற்றும் மூச்சு விட முடியாமை போன்ற நிலையை உருவாக்கி இதயத்தில் செயலற்ற நிலையை ஏற்படுத்தலாம்.

ஒரு நாளில் சராசரியாக ஒரு லெட்சம் முறை துடிக்கும் இதயம் ஒவ்வொரு துடிப்பின் போதும், உடலின் மற்ற பாகங்களுக்குத் தேவையான உணவையும் ஒக்சிசனையும் எடுத்துச் செல்லும் இரத்தத்தை, இரத்த நாடிகள் வழியாக அனுப்புகிறது. இதற்காக கடினமாக உழைக்கும் இதய தசைகளுக்கும் தேவையான உணவையும் ஒக்சிசனையும் எடுத்துச் செல்ல மூன்று முக்கிய இரத்தக் குழாய்கள் உள்ளன.

இவை ஒவ்வொன்றும் இதயத்தின் வெவ்வேறு பாகங்களுக்கு ஒக்சிசன் கலந்த இரத்தத்தை எடுத்துச் செல்கின்றன. இந்த இரத்தக் குழாய்களின் இரத்த ஓட்டத்திற்கு தடையாக சிறிய தடைக் கற்கள் போல அடைப்புகள் ஏற்படுகின்றன.

சில காரணங்களால் இத்தடைக் கற்கள் பெரிதாகி உடைந்து, அதன் மேல் இரத்தம் உறைந்து இரத்தக் குழாயை முழுமையாக அடைத்து விடுகிறது. இதனால் இந்த இரத்தக் குளாய் மூலம் இரத்தத்தைப் பெறும் இதயத்தின் தசைப் பகுதி ஒக்சிசன் மற்றும் ஊட்டச் சத்து ஆகியன கிடைக்கப் பெறாததால் செயலிழக்கிறது. இதுவே மாரடைப்பு எனப்படுகிறது.

## வீட்டில் தனியாக இருக்கும் போது மாரடைப்பு வந்தால் உங்களை நீங்களே எப்படி காப்பாற்றிக் கொள்வது?

வேலைப்பளுவின் காரணமாகவோ, 'வேறு பிரச்சினைகள் காரணமாகவோ உங்கள் மனம் மிகவும் அழுத்தத்துடன் உள்ளது. நீங்கள் மிகவும் படபடப்பாகவும் சோர்வாகவும் உள்ளீர்கள். திடீரென்று உங்கள் இதயத்தில் அதிக வலி ஏற்படுவதை உணர்கிறீர்கள். அந்த வலியானது மேல் கை முதல் தோள் பட்டை வரை பரவுவதை உணர்கிறீர்கள். உங்கள் இதயம் வேகமாகத் துடிக்கிறது. நீங்கள் சுய நினைவை இழக்க வெறும் 10 நொடிகள்தான் உள்ளன. இப்போது நீங்கள் செய்ய வேண்டியது: தொடர்ச்சியாக மிக ஆக்ரோஷமாக இருமுதல் வேண்டும். ஒவ்வொரு முறை இருமலுக்கு முன்னரும் மூச்சை இழுத்து விட வேண்டும். இருமல் மிக ஆழமானதாக இருக்க வேண்டும். இருதயம் இயல்பு நிலை திரும்பும் வரையில், அல்லது வேறொருவர் உதவிக்கு வரும் வரையிலோ இரண்டு நொடிகளுக்கு ஒரு தடவை மூச்சை இழுத்து விட்டு இருமிக் கொண்டே இருக்க வேண்டும்.

மூச்சை இழுத்து விடுவதால் நுரையீரலுக்கு ஒக்சிசன் சீராக செல்ல வழி வகுக்கிறது. இருமுவதால் இருதயம் நிற்பதில் இருந்து தொடர்ச்சியாக துடித்துக் கொண்டே இருக்க உதவும். இதனால், இரத்த ஓட்டம் சீரடையும். இருமுவதால் ஏற்படும் அதிர்வினால் இதயம் சீராக துடிக்கும்.

பின்னர், இருதயம் சீரடைந்ததும் அருகில் உள்ள மருத்துவமனைக்கு செல்லலாம்.


உயிரை காக்கும் இது போன்ற விசயங்களை உங்கள் நண்பர்களோடும் பகிர்ந்து கொள்ளலாமே!

# பயமுறுத்துகிறதா பருமன்?

கொழுப்பு கல்லீரலில் உற்பத்தி செய்யப்படுகின்றது. அளவுக்கு அதிகமான கொழுப்பு உடலில் சேர்வதால் உடற் பருமன் ஏற்படுகிறது.

### அதிக உடல் பருமனுக்கான காரணங்கள்

அதிகளவு உணவு எடுத்துக் கொள்ளல், குறைவான சக்தியை செலவிடல், அதிக சக்தி தரும் உணவுகளை உட்கொள்ளல் (இனிப்புகள், ஐஸ்கிரிம், குளிர் பானங்கள்) மற்றும் மதுப் பழக்கம் போன்றவற்றால் அதிக உடற் பருமன் ஏற்படுகிறது. வயது மற்றும் பரம்பரைக் காரணிகளும் கூட உடற் பருமனுக்கு காரணமாகும். தைரோயிட் சுரப்புக் குறைவதாலும், அதிரினல் சுரப்பு அதிகரிப்பதாலும் உடற் பருமன் அதிகரிக்கும். அதிக உடற் பருமனால் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், மூட்டு வாதம், மன அழுத்தம் போன்றவை ஏற்படுகின்றன.



### உடல் பருமனுக்கு எளிய சித்த மருத்துவம்

இஞ்சியை தோல் சீவி அரைத்து, ஒரு டேபிள் ஸ்பூன் சாறு எடுத்து, அதனுடன் சம அளவு தேன் சேர்த்து ஒரு டம்ளர் இளம் சூடான நீரில் கலந்து, காலையில் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இஞ்சியில் உள்ள ஜின்ஜெரால், ஜின்ஜிபெரின் மற்றும் தேன் ஆகியவை செரிமானத்தை தூண்டுவதுடன் தேவையற்ற கொழுப்பையும் எரிக்கும்.

கீழா நெல்லி, வெந்தயம், மஞ்சள், கறி வேப்பிலை, நெல்லிக்காய் போன்றவற்றை சம அளவு எடுத்துப் பொடித்து காலை, மாலை நேரங்களில் அரை ஸ்பூன் நீரில் கலந்து உண்ண உடலின் கொழுப்பு குறைந்து, எடையும் சீராகும்.

பெருஞ்சீரகத்தைப் பொடித்து காலை, மாலை அரை ஸ்பூன் தண்ணீர் சேர்த்து அருந்த உடல் எடை குறையும்.

எலுமிச்சஞ்சாறு ஒரு டேபிள் ஸ்பூனுடன் சம அளவு தேன் சேர்த்து ஒரு டம்ளர் நீரில் கலந்து பருக வேண்டும். இதிலுள்ள விட்டமின் C இரத்தத்தை சுத்திகரிப்பதுடன் கொழுப்பைக் குறைத்து உடலின் எடையையும் குறைக்கிறது.

### சேர்க்க வேண்டிய உணவு வகைகள்

தக்காளி, கோஸ், பப்பாளி, வெள்ளரி, தர்பூசணி, அப்பிள், ஓட்ஸ், வால்நட், பாதாம், பருப்பு வகைகள், மோர் போன்றவை.

### தவிர்க்க வேண்டிய உணவு வகைகள்

இனிப்புகள், வெள்ளை ரொட்டி, பட்டை தீட்டப்பட்ட தானியங்கள், துரித வகை உணவுகள், எண்ணெய் மற்றும் கொழுப்பு மிகுந்த உணவு வகைகள்.

தினமும் இரண்டு லீட்டர் தண்ணீர் அருந்த வேண்டும். நடைப் பயிற்சி, நீச்சல் பயிற்சி, சைக்கிள் ஓட்டுதல் முதலியவற்றை மேற் கொண்டால் உடல் பருமன் நிச்சயம் குறையும்.

# குப்பைகளை எரித்தால் 'ஹார்ட் அட்டாக்' வரும்

குப்பைகளை எரிப்பதால் உருவாகும் நச்சு வாயு, ஹார்ட் அட்டாக்கை ஏற்படுத்தும் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் சிகாகோ நகரைச் சேர்ந்தவர் சரோஜா பாரதி. இவர் இந்திய வம்சாவளியை சேர்ந்த இதய நோய் சிகிச்சை நிபுணர். தனது மருத்துவத்துறை அனுபவ நூலொன்றில் பின்வரும் தகவலை பதிவு செய்துள்ளார்:

வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நச்சு வாயுக்கள் மற்றும் அவை ஏற்படுத்தும் மாசுகளால் மக்களுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படுகிறது. அதேபோல, குப்பைகளும் மக்களுக்கு பெரும் தீங்கை ஏற்படுத்துகின்றன. குப்பைகளை எரிப்பதால் ஏற்படும் நச்சு வாயு உடனடியாக ஹார்ட் அட்டாக்கை ஏற்படுத்தும் அபாயம் கொண்டவை.

இன்று இதயம் தொடர்பாக பல்வேறு விதமான நோய்களால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதய நோய்களால் ஏற்படும் இறப்புகளும் அதிகளவில் உள்ளன. எனவே, குப்பைகளை மறு சுழற்சி செய்ய வேண்டும். குப்பைகளை எரிப்பது மிக மிக ஆபத்தானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்புறவியல்

ஏ.எம்.எம். ஸியாத் - இறக்காமம்

## கிழக்குத் தென்கோடி

(சென்ற இதழின் தொடர்)

### விடுகதைகள்

நொடிபோடுதல் அல்லது புதிர் போடுதல் கிராமிய மக்களின் சிந்தனைக் கிளறல் முறையாகும். சிறுவர், சிறுமியர்களை சிந்திக்கத் தூண்டி அவர்களுடைய நேரங்களை பயனுள்ளதாக மாற்றி மகிழ்ந்தனர் எம் மூதாதையர்.

சிந்திக்கத் தூண்டும் விடுகதைகள் சிறந்த பொழுது போக்கு விளையாட்டாகவும் காணப்படுகின்றது. ஒருவர் மாறி ஒருவராக விடுகதை கூறி விடை கண்டு மகிழ்வதும் விடையறியாது திண்டாடுபவரை நையாண்டி பண்ணுவதும் அதற்கு அவர் அதைவிடக் கடினமான விடுகதையைத் தொடுப்பதும் என ஓய்வு நேரம் பயனுள்ளதாக கழிக்கப்பட்டது. ஆனால், இந்நிலை மாறி வருவது கவலை தருவதாகவே உள்ளது. வெறும் வெள்ளாட்டு மேய்ச்சலை ஒத்த விளையாட்டுக்களில் இளையோர் ஈடுபடுவது, எதிர்கால வாழ்வுச் சிக்கல்களை அவிழ்க்க முடியாத தன்மையை ஏற்படுத்தி விடுவதோடு, தற்கொலை போன்ற தன்னை மாய்த்துக் கொள்ளும் செயல்களில் கொண்டு நிறுத்தவும் செய்கின்றது.

எமது முன்னோர்களின் சிந்தனை மட்டத்திற்கும் கலாசார பண்பாட்டு நிலைக்கும் ஏற்ற விதத்தில் பரவலாக பின்பற்றப்பட்டு வந்த விடுகதைகள் சிலவற்றை நோக்குவோம்.

அண்ணனுக்கு எட்டாது தம்பிக்கு எட்டும் அது என்ன? உதடு

ஓர் அகப்பைப் பாலால் ஊரெல்லாம் கலியாணம் அது என்ன? நிலவு

செவப்புப் பையில சில்லறைக் காசி கலகலக்குது அது என்ன? செத்தல் மிளகாய்

தந்தை சொறியன்; தாய் பரட்டை; தம்பி சீனிக்கட்டி; தங்கை மாக்கட்டி அது என்ன? பலாப்பழம்

வெள்ளை மனுசனுக்கு கறுப்புத் தொப்பி அது என்ன? தீக்குச்சி

காக்கி சட்டைக்காரன்; வீட்டுக்கு காவற்காரன்? பூட்டு

ஒரு குப்பிக்குள்ள ரெண்டு எண்ணெய் அது என்ன? முட்டை

வெள்ளை மாளிகைக்குள் தங்க புதையல் அது என்ன? முட்டை

வெள்ள றோட்டுல கறுத்த கார் ஓடுது அது என்ன? கண்

கழற்றிய சட்டையை திரும்ப போடமாட்டார் அவர் யார்? வாழைப்பழம்

ஐயா வந்தார் கோட்டைக் கழற்றினார் கிணத்துக்குள் விழுந்தார் அவர் யார்? வாழைப்பழம்

குஞ்சி ஊட்டுக்க கொள்ளி அடுக்கிருக்கு அது என்ன? பல்

நாலு கால் உண்டு நடக்கத் தெரியாது அது என்ன? கதிரை

வெட்ட வெட்ட தழைப்பது என்ன மரம் ஐயா?
தலைமுடி

வேடர் கொண்டு போவது என்ன மரம் ஐயா?
அம்பும் வில்லும்

இரும்பால அடிப்பது என்ன மரம் ஐயா? கொல்லன்

இருவரையும் கொண்டு செல்வது என்ன மரம் ஐயா?
சவப்பெட்டி

கன்று நிற்க கயிறு ஓடும் அது என்ன?
பூசணிக்கொடி சுரக்கொடி

கட்டக் கட்ட மரத்தில போள் போள் பந்து அது என்ன?
விளாங்காய்

வானத்தில பொல் தொங்குது அது என்ன?
முருங்கைக்காய்

பட்டையை பட்டையக் கெளப்பி, பதினாறு பட்டையக் கெளப்பி முத்துப் பட்டையைக் கெளப்பி முன்னால் நிற்காள் தேவிடியாள் அது என்ன? சோளங்கதிர்



# வரலாற்றுத் தடயங்களை பகிர்ந்து வரும் பாலமுனை பாறுக்கின் குறுங்காவியம்

இலக்கியம் என்பது காலத்துக்குக் காலம் பல வடிவங்களில் பிறப்பெடுத்து வந்துள்ளது. இலக்கண கட்டமைப்புக்குள் இறுக்கமான சொற்கோர்ப்புக்களால் ஒரு காலத்தில் கவிதைகளும் காவியங்களும் எழுதப்பட்டன. அந்த வரன் முறையை பாரதி வசன கவிதையின் மூலம் வேறு திசைக்குத் திருப்பினார். அவர் வழியை பின் பற்றிய ஈழத்துக் கவிஞர்களும் பல்வேறு வடிவங்களில் பாக்களை யாக்கத் தலைப்பட்டனர். அம் முயற்சியில் அவர்கள் வெற்றியும் கண்டனர்.

பாலமுனை பாறூக் எழுத்துலகில் பிரவேசித்து நாற்பது வருடங்கள் கழிந்து விட்ட நிலையில் ஒரு புதிய கோணத்தில் தன் பார்வையை திருப்பி புனைகதை வடிவில் குறுங்காவியங்களைக் கூற முனைந்துள்ளார். அதன் முதல் முயற்சியாகவே 'கொந்தளிப்பு' எனும் குறுங்காவியம் (2010)இல் வெளி வந்தது. அதனைத் தொடர்ந்து 'தோட்டுப் பாய் மூத்தம்மா' (2011) குறுங்காவியம், 'எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு' (2012) குறுங்காவியம் ஆகியன வெளி வந்துள்ளன.

நாற்பது வருடங்களாக எழுதி பண்பட்ட அனுபவ முதிர்ச்சியின் முத்திரைகளைத் தாங்கி இக்காவியங்கள் படைக்கப்பட்டுள்ளதால் தளர்ச்சியற்ற பாங்கில் அலுப்புத் தட்டாத அழகிய நடையில் வாசகனை இவரது கவிதைகள் வழி நடத்திச் செல்கின்றன. அதீத கற்பனை இழையோடாத வகையில் அப்பட்டமான நிகழ்வுகளை அமைதியாக பாயும் நீரோட்டமாக, அடுக்கித் தந்திருக்கின்றார். இது அவரின் தனித்துவ பாங்கு. சுனாமியால் பல்லாயிரக் கணக்கான உயிர்களும் உடைமைகளும் சுருட்டிச் செல்லப்பட்டது. இது நடந்து முடிந்த கதை. ஆனால், 'கொந்தளிப்பு குறுங்காவியம்' இருக்கும் வரை சுனாமியின் சோக நிகழ்வுகள் வாழ்ந்து கொண்டேயிருக்கும். அது மட்டுமன்றி, தென் கிழக்கு மண்ணில் தேய்ந்து போய்க் கொண்டிருக்கும் பண்பாட்டுக் கோலங்களை படம் பிடித்துக் காட்டிக் கொண்டேயிருக்கும்.

'தோட்டுப் பாய் மூத்தம்மா' ஒரு நாட்டார் கதையென்றாலும் ஒவ்வொருவர் வீட்டிலும் நடக்கும் நடப்புக்களை சுட்டு விரல் நீட்டி சொல்லிக் கொண்டேயிருக்கும். பீறிட்டெழுந்த பெண்மையின் விஷ்வரூபத்தை கோடிட்டுக் காட்டி ஆண் குலத்தின் அகந்தைப் போக்கிற்கு சவால் விட்டுக் கொண்டிருக்கும். இறுதிக் காவியமான 'எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு' ஒரு மாறுபட்ட கோணத்தில் மாற்றங்களுக்கான பிரார்த்தனையாக ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

காலத்தின் கல்வெட்டாக திகழ்வன இலக்கியங்கள். அவற்றை ஆய்கின்ற ஆராய்ச்சியாளர்கள் பல வரலாற்று சான்றுகளை அவற்றின் கண்ணே கண்டெடுத்து அறிவுலகுக்கு வெளிக் கொணர்ந்துள்ளனர். அதேபோன்று, பாலமுனை பாறூக்கின் முக் குறுங்காவியங்களும் மூன்று நிகழ்வுகளின் சான்றாதாரங்களாக முகிழ்ந்துள்ளன.

வலியவன் தன் வல்லமையால் எதையும் செய்வான். இது உலக நியதி, சமூக இயல்பு. ஆனால், நலிந்தவனோ தனது இயலாமையால் ஒதுங்கி நின்றாலும் அவனிடமுள்ள ஒரே சக்திமிக்க ஆயுதமான பிரார்த்தனையின் மூலம் இறைவனிடம் மன்டியிட்டு குறையிலிருந்து நிறைவு காண்பான். அந்த அரிய இயல்பினையே எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு எனும் குறுங்காவியத்தின் உத்தியாக கவிஞர் கையாண்டிருப்பது அவரது படைப்பாற்றலின் சிகரமாக விஞ்சி நிற்கின்றது.

கலையன்பன்
எஸ்.எம். அப்துல் அஸீஸ்



# நினைவுகளில் தொங்கும் நீர் ஊஞ்சல்

-ஒட்டமாவடி அறபாத்-

தொடர்– 45

எனது எழுத்துலகில் நிறைய சுவாரஸ்யங்கள் உள்ளன. 91.06.15ஆம் திகதி எழுச்சிக் குரல் பத்திரிகையில் 'மச்சானே அழைத்திடுங்க' என்ற கவிதை வெளி வந்த போது ஒரு சம்பவம்; பத்திரிகையை தூக்கிக் கொண்டு ஆசிரியர் ஒருவர் ஓடி வந்தார். நான் சைக்கிளை உழத்திக் கொண்டு ஓட்டமாவடி மையவாடிக்கு பக்கத்து தெருவில் போய்க் கொண்டிருந்தேன்.

அவர் மூச்சுவாங்க என்னெதிரே நின்றார். நான் சைக்கிளை நிற்பாட்டி என்னவென்றேன். விடுமுறையில் வந்து நின்ற என்னிடம் சுகம் விசாரிப்பார் என்று நினைத்திருந்தேன். எழுச்சிக் குரலை உயர்த்திப் பிடித்தபடி இந்தக் கவிதய நீங்களா எழுதினது? ஓம் என்றேன்.

என்னத்துக்கு இந்தக் கவிதயெல்லாம். இதெல்லாம் விட்டுப் போட்டு வேலையப் பாருங்க என்றார். ஆசிரியராக இருந்தும் எழுத்தில் தடம் பதிக்க ஆரம்பித்துள்ள என்னை அவர் ஊக்கப் படுத்தவில்லை. நெஞ்செல்லாம் கருகியது.

முஸ்லிம்களுக்கெதிரான பிரபாகரனின் பாசிசத்தை பகிரங்கமாகவே எதிர்த்து எழுதிய போது உண்மையில் என் மீது அக்கரையுடன் சிலர் புத்தி சொன்னதுண்டு. இப்படி பகிரங்கமாக சொந்தப் பெயரில் எழுதாமல் புனைப் பெயரிலாவது எழுதுங்களேன் என்று. அவர்களின் அன்பையும் கரிசனையையும் இன்றும் நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றேன். அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

அந்த ஆசிரியர் படித்து விட்டு இதயெல்லாம் எழுதாதீங்க என்று புத்தி சொன்ன அந்த நெடுங் கவிதையிலிருந்து சிலவரிகள்:

... சின்னனவள் சாமத்தில்
உங்களைக் கேட்டழுதாள்.
'இத்தா' வுக்குள் 'இரி'யென்று ஏன் பறந்து போனீங்க?
இருட்டான என் வாழ்வில்
இனி வருமா விடிவெள்ளி?

பிள்ளைகள் அடம் பிடித்தால்
பிடிச்சோறு ஊட்டிட
தொல்லைகள் அதிகரித்தால் தோளில் கிடத்தி உலாத்திட
ஏந்திழை நான் காத்திருந்தேன்
கனவுகளை கபனிட்டு
என் நினைவை புதைத்திட
புலி அடித்துக் கொன்றதோ?
பள்ளிக்குள் துப்பாக்கி படபடத்து தீ கக்க
நெஞ்செல்லாம் அனல் அடிச்சி,– எதிர்காலம் சாம்பலாச்சி
பட்ட கடன் தீர்க்க நான் – அப்பம் சுட்டு வாழுறன்
பார்ப்பதற்கு யாருண்டு?
பாரினிலே அழுகிறேன்.
கண்மணிகள் இருவரும் பட்டினியால் வாடுவதை
என் விழியால் பார்த்திட்டு – எப்படி நான் துயில் கொள்வேன்?

இரண்டு வருடத்திற்கு முன் அதே ஆசிரியர் என் முன் நிற்கிறார். எனக்கு ஒரு கவிதை எழுதித் தாங்க நான் அமைச்சர் ஒருவர வாழ்த்த வேண்டும்.

எனக்கு அழுவதா, சிரிப்பதா? தெரியவில்லை. எனக்கு அப்படிக் கவிதை எழுதி பழக்கமில்லை என்றேன். நிஜமாகத்தான் சொன்னேன்.

இதுவரை யாரையும் வாழ்த்தியும் தூற்றியும் எழுதவே இல்லை. நிச்சயம் அவர் பழி தீர்த்திருக்கின்றேன் என்று நினைத்திருப்பார். இயலாத ஒன்றை எழுதப் போய் வம்பில் மாட்டுவதை விட இயலாது என்று ஒப்புக் கொள்வது வாத்சல்யம்.

அரசியல்வாதிகளுக்கு சாமரம் வீசுவது இலேசுப்பட்ட காரியமா? அதற்கென்று பச்சோந்திக் கவிஞர்கள் நிறையப்பேர் இருக்கின்றார்கள்.


எனது 'வேட்டைக்குப் பின்' கவிதைத் தொகுதிக்குப் பின்னர் கவிதை எழுதுவதை முற்றாக நிறுத்தி விட்டேன். நல்ல கவிதைகளை படிப்பதுடன் நின்று விடுவதுண்டு. பிற்காலங்களில் சிறு கதையில் மட்டுமே கவனம் குவித்து வந்தேன். அதுதான் எனக்கு இலகுவாக வசியப்படுகிறது. (கவிதையை இலகுவான கலை என்பவர்கள் மன்னிக்க வேண்டும்.)

வேட்டைக்குப் பின் என்றவுடன் அந்த தொகுதி தொடர்பான சில அனுபவங்கள் நினைவில் வந்து தொலைக்கின்றன. என்னை புத்தகம் போடும் அளவிற்கு வளர்த்து விட்டது ஒருவரின் துரோகமே என்றால் ஆச்சரியமாக இருக்கும் இல்லையா?

ஊஞ்சல் இன்னும் ஆடும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணி மந்திரம்



சல்மாவுக்கு காலெல்லாம் கொப்புளம். டொக்டராவது ஆஸ்பத்திரியாவது? என்ன பீபி தாத்தாவுக்கு தெரியாத வைத்தியமா? நாடி பிடிக்காமலே அவவுக்கு விஷயம் எல்லாம் விளங்கிப் போய்விட்டது. அதாவது 'கண்ணூறு' இந்த நோஞ்சான் சல்மாவுக்கு பார்த்துத்தான் ஊரில் யாரும் கண்ணூறுபட வேண்டுமா? அவர்களுக்கு கண்ணூறு பட்டுக் கொண்டிருப்பது தவிர வேறு வேலையே கிடையாதா? இதெல்லாம் கேட்டு பீபி தாத்தாவிடம் தப்பித்துக் கொள்ள முடியுமா? ஹாசிம் லெவ்வையிடம் ஒரு முட்டித் தண்ணீர் மந்திரித்து கழுவிப் போட்டு விட்டால் எல்லாம் சரியாப் போய்விடும் என்று ஒரே தீர்மானமாக கூறிவிட்டா பீபி தாத்தா.

தண்ணி மந்திரிக்கிறதென்றால் இக்கால இளவட்டங்களுக்கு ஏதோ லேசுமாசான விஷயம் என்றுதான் படும். அதிலிருக்கிற சாத்துமாத்துக்கள், நுணுக்கங்கள் பீபி தாத்தாவுக்கல்லவா தெரியும். தண்ணி மந்திரிக்கிறதென்றால் அதற்கு வெறும் கிணற்றுத் தண்ணீர் சரிவராது. பள்ளிவாசல் ஹவ்லில் தண்ணீர் எடுக்க வேண்டும். அதுவும் அவ்வல் சுபஹிலே எடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல, எடுக்கும் போது யாரோடும் ஒரு வார்த்தை மறந்தும் கதைக்கக் கூடாது. எனவே, பீபி தாத்தா அதிகாலை 4 மணிக்கே நித்திரை விட்டெழுந்து பள்ளிவாசல் நோக்கிப் புறப்பட்டா.

கன்னாங்கரிய இருட்டுக்குள்ளே அதுவும் கபுறுக் காட்டைத் தாண்டி பள்ளி ஹவ்லுக்குப் போவதென்றால் லேசான காரியமல்ல. இடையிடையே என்னென்ன பழைய ஜின் சைத்தான்கள் இருக்குமோ. இதை நினைக்கும் போது என்னதான் முரட்டுத் தைரியமுள்ள மனுஷியாயினும் பீபி தாத்தாவுக்கும் கொஞ்சம் நெஞ்சு படக்கு என்று அடித்துக் கொள்ளத்தான் செய்தது. எதற்கும் இரும்பு கையிலிருந்தா ஒன்றும் நெருங்காது என்று சொல்லுவாங்க என்று ஒரு கையில் பேய் விரட்டக் கத்தியும் மறு கையில் செம்பு முட்டியுமாக வெளியே புறப்பட்டு விட்டா பீபி தாத்தா

தொழும் பழக்கம் பெரும்பாலும் இல்லாதபடியால் பீபி தாத்தாவுக்கு இவ்வளவு நேரகாலத்தோடு எழும்பிய அனுபவம் இல்லை. அத்தோடு கும்மிருட்டும் சேர்ந்து கொள்ளவே காற்றில் அசையும் ஒவ்வொரு புதரும், சிறகடித்துப் பறக்கும் ஒவ்வொரு வௌவாலும் அவவுக்கு ஜின்களாகவும் சைத்தான்களாகவுமே காட்சியளித்தன. எனவே, என்றுமில்லாதவாறு அரையும் குறையுமாக பாடமுள்ள அத்தனை குர்ஆன் வசனங்களும் ஆச்சரியத்தக்க விதமாக பீபி தாத்தாவுக்கு ஞாபகம் வந்தன. அவை உரத்த சப்தங்களாக வெளிப்படவே இனந் தெரியாத சிறு பிராணிகள் பயந்து அங்குமிங்கும் ஓடத் தலைப்படவே மேலும் பல வசனங்களை ஓத வேண்டிய அவசியமும் அவவுக்கு ஏற்பட்டது.

பள்ளியினுள்ளே இருந்த லாந்தர் விளக்கின் ஒளி ஹவ்லைச் சுற்றியிருந்த இருட்டை விரட்ட முயற்சித்துக் கொண்டிருந்தது. அப்பாடா! ஒருவாறு கஷ்டப்பட்டு வந்து விட்டோம் என்று ஹவ்லோரம் போக காலைத் தூக்கி வைத்தாவோ இல்லையோ அவ்வளவுதான், பீபி தாத்தாவின் சப்த நாடிகளும் அடங்கி விட்டன. ஹவ்லின் கடைக் கோடியில் குந்திய நிலையில் ஓர் உருவம்! இவ்வளவு ஓதல்கள் ஓதியும் ஒன்றும் பயன்தராமல் போய் விட்டதே! யாரோ பில்லி, பிசாசுகளை ஏவி விட்டிருக்கிறானோ தெரியாது. எதற்கும் ஹாசிம் லெவ்வையிடம் முன்னாடியே ஒரு வார்த்தை சொல்லிக் கொள்ள முடியாமல் போய் விட்டதே. சரி எதற்கும் இப்போது திரும்பிப் போகவும் முடியாது. என்ன செய்ய, வருவது வரட்டும் என்று பேய் விரட்டும் கத்தியை வேகமாக ஆட்ட ஆரம்பித்தா பீபி தாத்தா. இதற்கிடையில்,

"யாரு மோதினாரா?"

என்ற சப்தம் அவ்வுருவத்திலிருந்தே கிளம்பியது.

முஹிதீன் ஆண்டவருடைய காவல்! நல்ல காலம்! குரலிலிருந்து குந்தியிருப்பது சாட்சாத் ஹாசிம் லெவ்வையவர்களே என்று அறிந்த பீபி தாத்தா முஹிதீன் ஆண்டவருடைய பறகத்து, விஷயம் இவ்வளவு எளிதில் முடியும் என்று நான் நினைக்கவில்லை என்று எண்ணிக் கொண்டே முன்னே நகர்ந்தா. பேசினாற்தான் காரியம் பழுதாய்ப் போய் விடும்.

ஹாசிம்லெவ்வை என்றால் ஊரே கலங்கி நிற்கும். பேய், பிசாசு, ஜின், சைத்தான் ஒன்றும் அவரிடம் வாலாட்ட முடியாது என்பது மட்டுமல்ல, எந்தக் காட்டிலுள்ள ஜின், சைத்தானையும் சிண்டைப் பிடித்து ஏவி விட்டு எந்த வேலையையும் அவர் செய்து விடுவார் என்பது ஊரவரது நம்பிக்கை. ஊரில் பெரிய பெரிய வியாதிகளுக்கு மட்டுமல்ல, சிறு தடிமற் காய்ச்சலுக்கு கூட அவரிடம் போய் ஒரு காரியம் பார்த்து விட்டு அப்புறம்தான் ஆஸ்பத்திரி டொக்டரெல்லாம். எனவே, கபுறுக்காடு போன்ற பயங்கர பிரதேசங்களில் இரவில் அகால வேளைகளில் உலாவி, தனது அச்சமின்மையையும் பேய் பிசாசின் மீதுள்ள ஆதிக்கத்தையும் ஊரவருக்கு எடுத்துக் காட்டுவது ஹாசிம்லெவ்வையின் வழக்கம். அதன்படிதான் அன்றும் ஸுபஹுக்கும் முன்னே யாரும் வராத வேளையில் பள்ளியில் நுழைந்து ஊர் முழங்கக் கனைத்தல், இருமல்களோடு காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வுழு எடுக்கக் குந்தியிருந்தார்.

இந்நிலையில் யாரோ மெல்ல அடி வைப்பது கேட்டுத்தான் யார் மோதினாரா என்றார். ஆனால், பதில் வராது போகவே கொஞ்சம் உற்றுப் பார்த்தார். என்ன, உருவத்தைப் பார்த்தால் ஏதோ கொஞ்சம் வித்தியாசமான தோற்றம் போல இருக்கிறதே என்று எண்ணி இன்னும் சிறிது விழித்துப் பார்த்தார். உண்மையில் லெவ்வையவர்கள் அத்தகைய ஒரு தோற்றத்தை, தான் எப்போதாவது தனது யாதார்த்த வாழ்வில் சந்திப்போம் என்று கனவிலும் எதிர் பார்த்திருக்கவில்லை.

உடல் ஏகமும் மூடிய வெள்ளைத் துணி. ஒரு கையில் கத்தி, மறு கையில் உருண்டையான ஏதோ ஒரு பொருள். பேசினால் பதிலில்லை! போதாக் குறைக்கு கத்தியை வேறு ஆட்ட ஆரம்பித்திருக்கிறது. இதையெல்லாம் கண்ட லெவ்வையவர்களின் அடிவயிற்றிலிருந்து ஏதோ குபீர் என்று மேலெழுந்து தொண்டையை இறுக்கிப் பிடிப்பது போன்றிருந்தது.

எனினும், சமாளித்துக் கொண்டு மீண்டும் "யாரது" என முழங்கினார். ம்... ஹூம்... பதிலில்லை! ஆனால், அவ்வுருவமோ கத்தியை உயர்த்திக் கொண்டு ஹவ்லை நெருங்குவது தெளிவாகத் தெரிந்தது. லெவ்வையவர்களின் சர்வாங்கமும் தன்னிச்சையாக வெட வெட வென்று டான்ஸ் ஆட ஆரம்பித்தது.

நாற்பது வருட காலம் பேய்களை விரட்டுவதில் தேர்ச்சி பெற்றிருந்த ஹாசிம்லெவ்வையவர்கள் இப்போதுதான் தனது வாழ்க்கையிலே ஓர் அசல் பேயை முழு உருவத்தோடும் சந்தித்திருப்பதாக உணர்ந்தார். இத்தகைய ஓர் அனுபவம் அபார துணிச்சலுள்ள தன்னை இவ்வளவு மோஷமாக பாதித்து விடும் என்று அவர் துளி கூட எண்ணியிருக்கவில்லை. இனி தாமதிக்க நேரமில்லை. பேய் பிசாசுகளை காட்டியே மக்களிடம் பிழைத்து வந்த தன்னை ஆண்டவனே தண்டிக்க இப்படியொரு பேயை ஏவி விட்டானோ என்ற எண்ணம் அவருக்கேற்பட்டது. உடனே, ஆண்டவனே! என்னை இந்த முறை மட்டும் காப்பாற்றி விடு; இனி இந்த மாதிரியான காரியங்களில் தலையிடவேமாட்டேன் என்று மானசீக பிரார்த்தனை புரிந்தார். எனினும், தான் செய்திருக்கும் திருவிளையாடல்களுக்கு அவ்வளவு விரைவாக மன்னிப்புக் கிடைத்து விடும் என்ற நம்பிக்கை அவருக்கில்லை. எனவே, சகல நம்பிக்கைகளையும் இழந்தவராக குர்ஆன் வசனங்களை உரத்த குரலில் உச்சாடணம் செய்ய ஆரம்பித்தார்.

ஆனால், பேயோ இதற்கெல்லாம் மசியக் கூடிய ஒன்றாக காணப்படவில்லை என்பது ஒரு புறமிருக்க ஹவ்லை நெருங்குவதை அது விடுவதாகவும் இல்லை.

உடனே சட்டென்று லெவ்வையவர்களுக்கு ஓர் உபாயம் தோன்றியது. பிறந்த மேனியைக் கண்டால் பேய் அப்படியே பறந்து ஓடிப்போகும் என்று யார் சொல்லியோ கேள்விப்பட்டது அப்போது ஞாபகத்துக்கு வந்தது, அவ்வளவுதான்! லெவ்வையவர்களின் தொப்பி, ஷேர்ட் மட்டுமல்ல சாரமும் பெல்ட், திறப்புக் கோர்வை சகிதம் சலார் என்று கீழே விழுந்தன.

ம்... ஹூம்... லெவ்வையவர்களின் எந்த வித்தைகளைக் கண்டும் அந்தப் பேய் அசைவதாக இல்லை.

என்ன செய்யலாம். மரணத்துக்கு அவ்வளவு இலேசில் தயாராகி விட முடியுமா? கடைசி உபாயம்.

"அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்..."

ஊரே முழங்க பாங்கு சொல்ல ஆரம்பித்தார் லெவ்வை.

கடைசியில், தான் மேற் கொண்ட அத்தனை உபாயங்களும் அந்த உண்மையான பேயிடம் செல்லாது போனதைக் கண்ட ஹாசிம்லெவ்வையவர்கள் தன்னை மறந்தார். தன் நிலையை, தொழிலை மறந்தார். மரணம் தன் முன் நிழலாடுவதைக் கண்டு தான் செய்வதைக் கூட மறந்தார்.

"என்னைக் காப்பாத்துங்கோ... பிசாசி, பிசாசி"

என உரக்கக் கூவிக் கொண்டே தன்னால் ஆனமட்டும் வேகமாக ஓட ஆரம்பித்தார்.

அப்போதுதான்,

"என்னத்தன் மாமா இவ்வளவு பயம்... நான்தான் தெரியல்லியா... பீபி"

என்று ஒரு கீச்சுக் குரல் எழுந்தது அவ்வுருவத்திடமிருந்து.

இவ்வார்த்தை ஹாசிம்லெவ்வையின் உள்ளத்திற் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி அவரை பிரேக் போட்டு நிறுத்தியது. அடுத்த கணம் ஹாசிம்லெவ்வை அவ்வுருவத்தை உற்றுப் பார்த்தாரோ இல்லையோ?,

"அடீ பண்டீ... வேசே... ஒன்னைக் கீறி வளத்திற... இந்த இருட்டுக்குள்ள பிசாசி மாதிரி வந்து என்னைப் பயமுறுத்தின..."

என்று சொல்லிக் கொண்டே பாய்ந்தாரே பார்க்கலாம் பீபி தாத்தாவை நோக்கி. அவர் உள்ளத்திலே மூண்டிருந்த அவ்வளவு பயமும் நொடியில் அசுர கோபமாக மாறி விட்டது.

**ஸைபுன்னிஸா (அமீனா அஹ்மத்)**

என்ன, இன்று என்றுமில்லாதவாறு நேரகாலத்துடனே பாங்குச் சத்தம் கேட்கிறதே, அதுவும் மோதினாருடைய குரலும் அல்ல ஏதோ வித்தியாசமாக நடந்திருக்க வேண்டும் என்று எண்ணி ஓடி வந்த ஊர் ஜனங்கள் தக்க சமயத்தில் லெவ்வையவர்களைப் பிடித்து பீபி தாத்தாவைக் காப்பாற்றினார்கள்.

அடுத்த நாள் டொக்டர் வில்ஸனின் ஸ்டெதஸ்கோப் ஹாசிம்லெவ்வையவர்களின் நெஞ்சுப் பிரதேசம் எங்கும் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தது. இந்த லெட்சணத்தில் பீபி தாத்தாவாவது தண்ணி மந்திரிக்கிறதாவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குப்பி விளக்குக் கவிதை



நுரையோடையில்
உமிழ்ந்து மறைகிறது
காற்று

ஏகாந்த குருட்டு
இருளில்
கனவுகளைத் தோண்டி
பூமரம் நடும்
வெளவால்கள்

வறுமை புழுக்கத்தில்
வெந்து கருகும்
விழிகள்
தூக்கத்தில் விடியலை பின்னி
மனப்பால் அருந்தும்

பஞ்ச போர்வைக்குள்
ஊறியபடி
விழிகொட்டும் நீரை
உறுஞ்சும்
நில தூசு

கருத்த புதையலாய்
ஆன்மாவின்
தூசைக் கிளப்பும்
கடன் மனசு

மனசின்
பயண பாதையில்

சுருண்டு கிடக்கும்
மலைப்பாம்புகள்
வாழ்க்கை செலவை
விசாலித்து நீட்டும்

எங்கும் அடர்ந்துள்ள
எதுவும் இல்லாததான
உணர்வுகள்
மனக் குப்பிக்குள்
ஜீவனை சிறைவைக்கும்

கடைசிப் பொட்டு
வியர்வையை
தேடிப்பிடித்து
மனக் குப்பிக்குள்
உள்ள
ஜீவத் திரியை
பற்ற வைக்கும்
நம்பிக்கை

முபஷ்ஷிரா நௌபர்
உடத்தலவின்ன

## விதவை

கண்ணீரை புசித்து
கானலை இரசித்து
சம்மதமில்லாமல்
வாழ்பவள் விதவை

வண்ண ஆடை தொலைத்து
வசந்தங்கள் புதைத்து
சமுதாய சாக்கடையுள்
தள்ளப்படுகிறாள் விதவை

நாயும் பேயும் பேசிட
'மௌனம்'
மறுமொழியாய் உரைப்பாள்
விதவை

எம்.கே. அஸ்ரம்
இறக்காமம்

## சுவர்க்கத்தில் சேர்வோம்



கைகொட்டி வாழ்ந்த உறவு
கை நழுவிப் போனதேனோ?
வேடிக்கை கொண்டு சிரித்த மனம்
இன்று வேதனையால் துடிப்பதேனோ?

சண்டைகள் மூண்டதுண்டு
சமாதானம் ஆனதுண்டு
கவலைகள் எழுந்ததுண்டு
கலந்து அதைப் பகிர்ந்ததுண்டு

மறவாத அவ்வாழ்வை
மீட்டிப்பார் தினமும்
சுதந்திர வாழ்வதைப் பெற
சுவர்க்கத்தில் சேர்வோம் தோழியே!

எம்.எஸ். ஸீரின் சிதாரா
மருதமுனை

## கச்சான் காற்று!

நீ ஊருக்கு வந்ததாக கேள்விப்பட்டேன்
அழையா விருந்தாளியாய்
ஆண்டு தோறும் வந்துபோகும்
உன் வருகை பற்றியதான முகச்சுழிப்பு
உம்மாவின் பேச்சில் தெரிந்தது

வாய்க்கு அரிசிபோட வந்ததாக
தமிழ் கிராமத்து கிழவி ஒருத்தி
முணுமுணுப்பதாய்
யாவாரத்துக்குப் போன வாப்பா
சொல்லிச் சிரிச்சாங்க!

நல்ல காலம் நான்
ஊரிலில்லை
இல்லா விட்டால்
என்ட வாயிலயும் மண்ணு!

உனக்கு இன்னொரு
பெயர் சொல்றாங்க உண்மையா
'பேய்க் காத்து'!

- பஷீர் அலி



## கோடைக்கு பிடித்த காற்று

ஒலை அசைத்து
காற்றை எரித்தது
என்
வாசற்படி தாண்டி!

வந்தவர்கள் எழும்பி நின்று
பக்கத்தில்
அமரச் செய்தார்கள்,
வீசியது காற்று
எல்லாவற்றையும்
அள்ளி எடுத்து!

கோடை என்றாலும்
என்றும் பிடிக்காதவர்கள்
சுகத்தை அனுபவித்தார்கள்
காற்றின்
இனிமையை உணர்ந்தார்கள்!

மின்சார விசிறி
உசும்பி உசும்பி
ஓரமாய் நின்றாலும்
ஓலைக் காற்று வீசியது
யாரும் காணாத
ஊர் சண்டியனாய்!

ஒன்றும் கொடுக்காத
ஓலைக் காற்று
தன்பாட்டில் வீசியது!

பக்கத்து தென்னைக்கே
எல்லாம் சேரும்
வந்தவர்கள் சொன்னார்கள்!

அபார்

## 'சோ, சா, வே' தனைகள்

கரைந்தோடும்
கண்ணீர்த் துளிகளில்
கவலைகள் மட்டும்
கரைந்து போகுமாயின்
காயங்கள் என்றும்
கானல் நீராய் மாறிடும்

சோதனைகள்-நம்மில்
காவு கொள்ளும் போது
சோர்ந்து விட்டால்
சாதிக்க எழுபவர் யாரோ?

சோதனையின் பின்
சாதனைகள் தோன்றிட
வேதனைகள் பலதை
கடந்துதானே ஆக வேண்டும்?
வேண்டாம் என்று விரட்டினாலும்
ஒட்டிக் கொள்வதுதான்
அந்த 'சோ,சா,வே' தனைகள்
அறியாயோ நீ!

வரமாய் வந்த வாழ்க்கை
நல் வரவுகளால்
வழியனுப்பி வைத்திட
வந்து சேரும் துயரங்களை
இறை நம்பிக்கையுடன்
உன் போராட்டங்கள் மூலம்
தூரத்தித் துரத்தி விடு

தீனா சலீம்
ஹுசைனியா புரம்

## ஆடம்பர் அறிகளே!



விருந்துபசாரம் செய்வதற்காய்
கோடி கோடியாக கொட்டுகிறாயே
உணவில்லாமல் உயிர் பிரியும்
ஆன்மாக்கள்- உனக்கு
விளங்கவில்லையா?

மலைபோன்ற உன் தொப்பையை
மறைப்பதற்காய்
ஆடம்பரத்தால் போத்துகிறாயே!
துணியில்லாமல் தவிக்கும்
குமரிகள் பற்றி
நீ சிந்தித்ததுண்டா?

குற்றவியலை சீர்தூக்கி
நான் இஸ்லாமியன் என
பறைசாற்றுகிறாய்
புலித்தோல் போத்திய பசுபோல...!

மருதமுனை சஜீத்
இஸ்லாஹிய்யா அரபுக்கல்லூரி

## ஆதிக்க சக்தி

கடல் பொங்க எழுந்து அலைகளாய் உயர்ந்து வீழ்ந்து
நாடு நகர் எங்கும் புகுந்து அழித்தும் ஓயுது
தன் நிலையில் அமைதியாய் இருந்த பூமித்தாய்
துணிவை இழந்து நடுநடுங்கி அதிர்வினால் அழிவை ஏற்குது

மனிதனுக்கு உதவிடும் தீ அகோரமாய்ப் பரவியே
அனைத்தையும் புசித்து வீடு, கடை எனத் தொடருது
இதமான தென்றலாய் நுகரும் காற்றும் சடுதியாய்
இகமதை புரட்டிட சுழன்று வேகமாக வீசி அழிவை ஆக்குது

இவையெலாம் வாழ்வில் கண்டும் கேட்டுமுளோர்
இயக்குபவனின்றி இயங்கும் செயல் எனக் கொள்வதா?
உலகில் செயற்பாடு எதுவும் இயல்பாய் நடந்திடும் என்பதா?
அலகு ஒன்றின் செயலை அலசினால் காரணகர்த்தா துலங்கிடும்
அவ்வாறெனில் 'இயற்கை' நிகழ்வு என்பதுதான் ஏது?
எவனோ நின்று இயக்குகிறான் என்பதே யதார்த்தம்
எதனையும் சிந்திக்க முனைந்திட்டால் தெளிவு பிறந்திடும்

ஆதிக்க வல்லமை உள்ளான் ஏகன் கருணையாளன்
இறையோன் அழிவை எங்கும் எதிலும் திணித்திட முனையான்
மறைவழி தவிர்ந்து தீநெறி ஒழுகும் மக்களை நன்னெறியில்
மாண்புறச் செய்திட அதிர்வலையாய் அழிவைத் தந்திடுவான்

வெலிப்பன்னை அத்தாஸ்



## மன்னிப்பு

மன்னிப்பு-அது
மாற்றத்துக்கு
மருந்து கட்டும்!
இதயக் கதவை
அகலத்
திறந்து வைக்கும்!

துருப்பிடித்த உணர்வுகளை
கொஞ்சம்
துலக்கி வைக்கும்!

ஹிந்தாவை மன்னித்த
மாநபியின் வாரிசுகள் நாம்
மன்னிப்போம்!



--அபூ அர்வா--

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# பெண்களின் இம்மை, மறுமை வாழ்வுக்காக!



- குடும்ப நலனுக்கும், எதிர்கால நலனுக்கும்
- சிறுதொழில் வாய்ப்புக்கும், கைத்தொழிலுக்கும்
- வீட்டிலிருந்தே சம்பாதிப்பதற்கும்
- ஓய்வு நேரத்திலும், பகுதிநேரத்தில் சம்பாதிப்பதற்கும்
- விரைவில் தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கும்
- தொழில் புரிந்துக்கொண்டுள்ளோர் மேலும் தகைமை பெற்று உயர்வடைவதற்கும்.
- வெளிநாட்டில் உயர்கல்வி, தொழில், மைக்ரேஸன் பெற்றுக் கொள்ள உள்ளவர்கள் (விசாவுக்கு உதவி)

## தொழில் சார் பாடபயிற்சிகள் நவீன தொழில் நுட்பங்களுடன்

- மொண்ட சூரி டீச்சர் டிரைனிங் (AMI)
- தையல் கலை
- மணப்பெண் அலங்காரம்
- அழகியற் கலை
- சிகை அலங்காரம்
- சர்வதேச தரத்திலான குக்கரி
- பேஷ்ட்ரி
- கேக் வடிவமைத்தல்
- பேக்கரி வகைகள்
- ஆங்கிலம் கதைப்பதற்கு பயிற்சிகள்
- கிரபிக் டிசைன்
- கொம்பியூட்டர் எகவுண்ட்
- ஒடோ கட்
- மரவை அலங்காம்
- போகே அலங்காரம்
- மருதாணி வரைதல்
- திருமண இதழ் அமைத்தல்

**10 சான்றிதழ்கள் வழங்கப்படும்.**

## 6 மாதக் காலங்கள்

காலை முதல் மாலை வரையில் தினசரி

பாதுகாப்பான தங்குமிட வசதியும் 3 வேளை உணவும் (பார்வையிடுவது .... காட் வசதிகளுக்கு)

- திருமணத்திற்காக காத்திருக்கும் பெண்களுக்கும்
- எதிர்கால சவால்களை மேற்கொள்வதற்கும்
- மார்க்க விளக்கங்கள்
- அதீஸ் - பயான்கள்
- இபுல் முறைபடி ஓதுதல்
- துவாக்கல் மனனம் செய்தல்
- நியத்துக்கல் - துவாக்கல்
- தொழுகை, நோன்பு, கடமை விளக்கம்
- கணவனுக்கு நல்ல மனைவியாக வாழும் விதம்
- குழந்தை வளர்க்கும் முறைகள்

குழுக்களாகவும் வர முடியும்

தெரிந்தவர்கள் உறவினர்களுடன் வரமுடியும்

எமது நிறுவனத்தில் பெண்களுக்கு கீழ் உள்ள வசதிகள் உண்டு

- வாசிகசாலை
- சிகை அலங்கார அறை
- மொன்டசூரி பயிற்சி அறை (AMI)
- சமையல் பயிற்சி அறை
- கணனி பயிற்சி அறை
- தொழுகைக்கான அறை
- உடற்பயிற்சி வசதிகள்

சகல வசதிகளுடன் London College

புதிய கிளை இப்பொழுது **கண்டி நகரில**

**Hot Line : 0779 32 31 31**

**No. 48 3A, William Gopallawa Mawatha, Kandy. (Heerassagala Junction)**

மேலும் கிளை நிறுவனங்கள் அமைப்பதற்கு

இடம் வசதி (முஸ்லிம்கள் சேர்ந்து வாழுமிடத்தில்) அதிபர்கள், மௌலவியாக்கள், ஆசிரியர்கள் ரெஜிஸ்டர் தபால் மூலம் அல்லது நேரில் வரவும் சம்பளம், உணவு, தங்குமிடவசதிகள் வழங்கப்படும்.

**0774833444 / 0114384462 / 0772166222**

அனுமதிகள் நடைபெறுகின்றன உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்

எமது கிளை நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்

| பம்பலப்பிட்டி | நூகேகொடை | டேவிட்சன் ரோட் பம்பலப்பிட்டி |
|---|---|---|
| 0711 601040 | 0774323131 | 0114384460 |

## லண்டன் கொலேஜ் இஸ்லாமிக் லேடிஸ் சென்டர்

இல 176 கொலன்னாவ வீதி தெமடகொடை- கொழும்பு 9.
(குற்ற புலனாய்வு பொலிஸ் அருகில் CCD)

தொடர்புகளுக்கு: மிஸ்கோல், ஈமெயில், sms செய்யவும் **011 438 4463**











எமது வெளியீடுகளான

அல்ஹஸனாத் | அகரம் | ப்ரபோதய

www.alhasanath.lk www.aharam.lk www.prabodaya.lk

என்பன மின் சஞ்சிகை (E-Magazine) வடிவில்
இணைய தளத்தை அலங்கரிக்கின்றன.

வெகுவிரைவில் எங்கள் தேசம் The Trend

# JUST MEDIA FOUNDATION

77, Dematagoda Road, Colombo 09, Tel: 011 2698771, E-mail: jmfsrilanka@gmail.com, www.facebook.com/jmfsrilanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at IPC PRINTING PRESS, 23, De Vaas Lane, Grandpass, Colombo 14.